புண்ணிய பாரதம்

(பாகம்-1)





கங்கை நதியும்,
ஸ்ரீ காமகோடி ஜகத்குருவும்


புண்ணிய பாரதம்

பாகம் – 1

(பத்ரிநாத் யாத்திரை)

பரணீதரன்

ஒரு விகடன் பிரசுரம்





நூலைப் பற்றி...

1973-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன் பத்ரிநாத் யாத்திரை சென்ற குழுவில் நானும் பங்கேற்கும் பெரும் பேறு பெற்றேன். ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் செல்லும் வழியில் கண்டறியாதன கண்டேன். நான் பெற்ற இன்பம் இந்த வையகம் பெற வேண்டும் என்ற பேராவலால் தூண்டப் பெற்று, விகடன் வாசகர்களுடன் என் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டேன். 'புண்ணிய பாரதம்' என்ற தலைப்பில் வெளியான அக்கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்தவர்கள் ஒருமுகமாகப் பாராட்டினார்கள். அக்கட்டுரைத் தொடர் தற்போது நூல் வடிவில் வெளியாகிறது. இதைப் படித்து விட்டு யாரேனும் ஒருவருக்காவது பத்ரிநாத் யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டு, அந்தப் பயணத்திற்கு இந்த நூல் ஓரளவாவது பயனுள்ளதாகவும் அமைந்தால் நான் பெரும் புண்ணியம் செய்தவனாவேன்.

பரணீதரன்

◄ பத்ரிநாத்துக்குச் செல்லும் வழியில் மலை சரிந்து பாதை அடைபட்டிருக்கும் காட்சி


முதற் பதிப்பு:—ஜனவரி 1975

அட்டைப் படம் :—
ஸ்ரீ பத்ரி நாராயணர் ஆலயம்

வண்ணப் படம் :—
டில்லி ஸ்ரீநிவாசன்

விலை ரூபாய் 3 – 50

ஆனந்த விகடன் அச்சகம்,
151, அண்ணா சாலை, சென்னை - 2.



ஹரித்துவாரத்தில் கங்கை தரிசனம்

1

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் 1973-ம் ஆண்டு ரிஷிகேசத்தில் முகாமிட்டிருந்த சமயம் அது. அவரது சாதுர்மாஸ்ய சங்கல்ப விரதம் முடிந்து, விஜய யாத்திரையின் தொடர்ச்சியாக, பத்ரிநாத்துக்குப் பாத யாத்திரையாகப் பயணமாகப் போகிறார் என்ற செய்தி காதில் விழுந்தது. அந்த நல்ல தருணத்தை நழுவவிட மனம் வருமா? வாழ்க்கையில் ஒரு முறை பத்ரிநாத் சென்று தரிசனம் செய்து விட்டு வருவது கிடைத்தற்கரிய பெரும் புண்ணியமாகக் கருதப்படும் போது, புனிதர் ஒருவரோடு அப் புனிதப் பயணத்தை மேற்கொள்ளுவது இரட்டிப்புப் புண்ணியம் அல்லவா!

என் விருப்பத்தைக் கடிதம் மூலம் ஸ்ரீ காமகோடிப் புதுப் பெரியவருக்குத் தெரியப்படுத்தினேன். 'புறப்பட்டு வா' என்று உடனேயே பதில் கிடைத்தது. தெய்வங்களின் துணையினாலன்றோ தீர்த்த யாத்திரைகள் இடையூறின்றி நிறைவேறுகின்றன. குரு வடிவிலிருக்கும் தெய்வத்தைத் தரிசிக்க காஞ்சிக்கு விரைந்தேன். நல்லவை தழைக்க, நானிலம் செழிக்க நாளெல்லாம் நற்றவம் இயற்றிக் கொண்டிருக்கும் தூயோன், நாடி வந்தவரெல்லாம் நல்வழி நடக்க நல்லாசி வழங்கக் கண் விழித்துக் காத்துக்கொண்டிருக்கும் பெரியோன், என் பத்ரி யாத்திரைக்கு மௌன முத்திரையாலேயே பரிபூரண அருளாசி வழங்கினார்.

நான் செல்லும் பாதையெல்லாம் ஒளி பரப்பி வழி காட்டும் சுடர் விழிகள் கருணை பொழிய, முற்பிறவியில் செய்த நல்வினைகளை நினைத்து என் நெஞ்சம் விம்மிப் புடைக்க, நன்றிக் கண்ணீர் தரையை நனைக்க, சென்னை திரும்பினேன்.

செப்டம்பர் 12-ம் தேதி புதன்கிழமை ரிஷிகேசத்திலிருந்து புதுப் பெரியவரின் பத்ரி யாத்திரை தொடங்குவதாகத் தகவல் கிடைத்ததால், நான் 11-ம் தேதி காலையிலேயே அங்கு சென்று விட்டேன். ஸ்ரீமடம் முகாமிட்டிருந்த ஆந்திரா ஆச்ரமத்திற்குச் சென்று, அங்கு முகாமிட்டிருந்த ஸ்ரீ காமகோடி ஜகத்குருவைத் தரிசித்துக் கொண்டேன்.

திருப்பதி தேவஸ்தானத்தாரால் நடத்தப்பட்டுவரும் ஆந்திரா ஆச்ரமம் மிகவும் வசதியான இடம். முன்புறம், வாடகைக்காகப் பல அறைகள் கட்டப் பட்டிருக்கின்றன. ஸ்ரீ வேங்கடாசலபதி, ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் ஆலய கோபுரங்களுடன் கூடிய ஆச்ரமத்தின் முகப்பு, தென்னாட்டுக் 'களை'யோடு திகழ்கிறது. குறைந்த கட்டணத்தில் வசதியாகத் தங்குவதற்கு ஏற்ற சத்திரம் அது. தமிழகத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் அங்கு குடித்தனம் நடத்த, வட நாட்டில் வாழும் ஸ்ரீமடத்தின் சீடர்கள் வந்து குழுமியிருக்க, ஆந்திரா ஆச்ரமம் கல்யாண அமர்க்களப்பட்டுக்கொண்டு இருந்தது. எல்லோரும் பத்ரி யாத்திரையைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். ஏற்கெனவே பத்ரிக்குச் சென்று திரும்பியவர்கள், அங்கு செல்லத் துடித்துக் கொண்டிருந்தவர்களிடம் தங்கள் அனுபவங்களைச் சற்று மிகைப்படுத்தியே விவரித்துக் கொண்டிருந்தனர்!

ஸ்ரீ மடத்து சிப்பந்திகளிடமும், ஸ்ரீமட அலுவலகத்திலும் ஓர் அசாதாரண பரபரப்பைக் கண்டேன். மறுநாள் புறப்படும் 'காம்ப்'போடு யார் யார் போவது, உக்கிராண லாரியில் எத்தனை பேர், சாமான் லாரியில் எத்தனை பேர், 'பூஜை' ஜீப்பில் யாருடைய பெட்டி படுக்கைகள், கைவசம் இருக்கும் கம்பளிகளை எப்படிப் பங்கு போடுவது, எத்தனை ஜோடி 'கான்வாஸ் ஷூ' வாங்குவது, மழைக்குப் பாதுகாப்பாக பிளாஸ்டிக் மழைக் கோட்டுக்கள் வாங்க வேண்டுமா, வேண்டாமா? என்பது போன்ற வாதங்களும், எதிர்வாதங்களும் 'கசமுச' வென்று நடந்து கொண்டிருந்தன.

ஓர் அறையிலிருந்து, சிரித்த முகத்தோடு இளம் புகைப்படக்காரரான டில்லி ஸ்ரீநிவாசன் வெளியே வந்தார். பத்ரி யாத்திரையில் என்னோடு சேர்ந்து கொள்வதற்காக முன்னேற்பாட்டின்படி முதல் நாளே அங்கு வந்திருந்தார் அவர். இப்படிப்பட்ட ஒரு புனிதப் பணியை அவர் அதுவரை மேற்கொண்ட தில்லையாதலால், அவரது உற்சாகம் கரை புரண்டோடியது.

பத்ரி யாத்திரை புறப்படுவதற்கு முன் ரிஷிகேசத்தையும் ஹரித்துவாரத்தையும் முடிந்தவரை பார்த்து விட வேண்டும் என்று முன்பே முடிவு செய்திருந்தேன். அதன்படி ஒரு திட்டம் தீட்டிக்கொண்டு புறப்பட்டோம்.


ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்களின் அருட் கட்டளையினாலும் நல்லாசியாலும், நான்கு சீடர்களோடு கூடிய ஸ்ரீ ஆதிசங்கர பகவானின் உருவச் சிலைகள் அமைந்த மண்டபங்கள் நாட்டின் பல பகுதிகளில் தோன்றி வருவதை அனைவரும் அறிவார்கள். அவ்வாறு அமைந்த திருச் சந்நிதிகளில் லட்சுமணஜூலாவில் இருப்பதும் ஒன்று. ரிஷிகேசத்திலிருந்து இரண்டு மைல் தொலைவிலிருக்கும் அந்த இடத்திற்கு முதலில் செல்வதென்று முடிவாயிற்று.

பார்த்துப் பார்த்துப் பழகிப் போன புகைப்படங்களில் இந்த லட்சுமண ஜுலா தொங்கு பாலத்தின் புகைப்படமும் ஒன்று. கங்கையின் மீது அந்தரத்தில் தொங்கியபடி, ஊஞ்சலாக ஆடிக்கொண்டிருக்கும் இந்தப் பாலம், காண வேண்டிய ஓர் அற்புதம்தான். எண்பது அடி நீளமும் ஆறடி அகலமும் உள்ள இந்தப் பாலத்தின் மீது நடக்கும் முதல் அனுபவம் மறக்க முடியாத தாக இருக்கும். அகன்ற கங்கை கீழே வேகமாக ஓடுகிறது. பாலத்தின் மீது நாம் நடக்கும் போது அது லேசாக ஆடுகிறது. 'இது திடீரென்று அறுந்து விழுந்து விட்டால்..' சின்னஞ் சிறு சந்தேகம் தோன்றத்தான் செய்யும். நம்மைச் சற்று திகிலடையத்தான் வைக்கும்.

ஆடும் பாலத்திற்கு இப் பக்கம் லட்சுமணன் கோயில் இருக்கிறது. பிரும்மஹத்தி தோஷம் நீங்குவதற்காக லட்சுமணன் இருநூறு ஆண்டுகள் தவம் இருந்த பகுதியாம் அது. அக் கோயிலில் தொட்டில் கிருஷ்ணனுக்கு ஒரு சந்நிதியும், லட்சுமணருக்கு ஒரு சந்நிதியும் இருக்கின்றன. கங்கையை நோக்கி, சுவரில் ஸ்ரீ ஆதி பத்ரி நாராயணர் எழுந்தருளியிருக்கிறார். அவருக்கு இரு புறமும் ஸ்ரீ நாரத முனியும் லட்சுமி தேவியும் காட்சி தருகிறார்கள்.

அந்தப் பாலத்தைக் கடந்து கங்கையின் இடக் கரைக்குச் சென்றால் அங்கு ஸ்ரீ ஆதிசங்கரர் மண்டபம் இருக்கிறது. அங்குள்ள ஸ்ரீ ஆதிசங்கரரும் சீடர் களும் இராமேச்வரத்திலோ, ஸ்ரீசைலத்திலோ இருப்பவை போன்ற பெரிய உருவச் சிலைகள் அல்ல. சலவைக் கல்லால் ஆன அவ்வழகிய மூர்த்திகளில் புண்ணிய பாரதத்தின் தொன்மைமிகு வேதநெறியின் அடிப்படையில் வாழையடி வாழையாக வளர்ந்து வரும் குரு பரம்பரையைத் தரிசிக்கிறோம். ஆத்திகத்தால் பாரதத்தை ஒருமைப்படுத்தி, அத்வைதத்தால் அகிலத்தையே ஒருங்கிணைத்து, மனித குலம் உய்ய ஆன்மிக ஒளி வழங்கிக் கொண்டிருக்கும்

லட்சுமணஜுலா பாலம்





ஸ்ரீ ஆதிசங்கரரும் சீடர்களும்
(லட்சுமணஜுலா)

கலங்கரை விளக்கமாம் அக்கருணையத்தை நிமிர்ந்த நெஞ்சோடும், வணங்கிய சிரசோடும், கூப்பிய கரங்களோடும் தொழுதுவிட்டு மேலே நடக்கலானோம்.

ஸ்ரீ ஆதிசங்கரர் மண்டபத்திற்கு எதிரேயிருக்கும் கங்கைப் படித்துறைக்கு 'லட்சுமண குண்டம்' என்று பெயர். அங்கு கரையில் மேயும் ராட்சச மீன்களுக்கு பொரி ஆகாரம் அளிப்பது, பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவருக்கும் பெரும் பொழுது போக்காக இருக்கிறது.


அங்கு நின்று சுற்றுப்புறக் காட்சியைப் பார்க்கும்போது, இயற்கையன்னை நடத்தும் பேராட்சியின் மாட்சியை உணர முடிகிறது. மங்கை யொருத்தியை ஆதரவோடு புக்ககத்திற்குக் கொண்டு போய்விடும் தாயைப் போல் இமயம், கங்கை மகளை இருபுறமும் அரவணைத்துக் கொண்டு கூடவே தொடர்ந்து வந்து, பூமியில் விட்டுவிட்டுச் செல்வதைப் போன்ற ஒரு கற்பனையை அக்காட்சி தூண்டுகிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை மலைத் தொடர்ச்சிகளைக் காண்கிறோம். வாரிக் கொண்டு வரும் வளத்தால் நம் உடலை வளர்த்து, தேடிச் சேர்த்த புனிதத்தால் நம் உள்ளத்தை உயர்த்தி, பிறர் வாழ, தாம் பிறவி யெடுக்கும் பெருந்தகையைப் போல் பெருக்கெடுத்து ஓடும் கங்கையின் பிரவாகத்தைப் பார்த்துப் பார்த்துப் புளகிதம் அடைகிறோம்.

ஸ்ரீ ஆதிசங்கரரைத் தரிசித்துவிட்டு, கங்கைக் கரையிலேயே காலாற நடந்தோம். சின்னஞ்சிறு ஆணிக் கற்கள், பாதத்தைத் துளைத்தபோதிலும் அங்கு நிலவிய தெய்விகச் சூழ்நிலை எங்களை உந்திச் சென்றது. நடந்து கொண்டேயிருந்தோம்.

கங்கா மாதா மந்திரையும் ரகுநாதர் ஆலயத்தையும் தரிசித்துக்கொண்டு, அமைதி உலாவும் சோலைகளினூடே சென்றபோது நம் மனமும் மௌனத்தோடு உறவாடுகிறது. சொர்க்கத்திற்கே வந்து விட்டது போன்ற உணர்வு மேலிடுகிறது. என்ன ஆச்சரியம்! அப்போது உண்மையிலேயே நாம் 'சொர்க்க ஆச்ரம'த்தில் இருப்பதை அறிகிறோம். ஆகா! கங்கை ஸ்நானமும், ஆன்மிக தியானமுமாக எவ்விதச் சலனமுமின்றி வாழ நினைப்பவர்களுக்கு எத்தனை வசதியான சூழ்நிலை!

அடுத்து, கீதா பவனத்தை அடைந்தோம். பிக்னிக் வருபவர்களைப்போல் அங்கு வந்து குழுமியிருந்தவர்கள், கீதா பவனத்தை அடுத்துள்ள படித்துறையிலும், கரையிலுள்ள பெஞ்சுகளிலும் அமர்ந்து, தாங்கள் கையோடு எடுத்து வந்ததைக் கொறித்துக் கொண்டு, இயற்கையோடு லயித்து, கவலைகளின்றி பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். உல்லாசப் பயணிகள் நிரம்பி வழிய, அக்கரையிலிருந்து புறப்பட்ட ஒரு படகு இக்கரையில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பல மொழி பேசுவோரின் பேச்சொலியும் சிரிப்பு

ஒலியும் மலேச்சரிவில் மோதி, எதிர் ஒலித்து, சிற்றலேகளாகச் சிதறிக் கொண்டிருந்தது. இதை யெல்லாம் நிதானமாக நின்று கவனிக்க நேரமில்லாத கங்கை, எங்கோ மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்தாள்!


ஸ்ரீ லட்சுமணர் ஆலயம்

கோரக்பூர் கீதா பிரஸ் நிறுவனத்தாரின் நன்முயற்சியால் 1943-ம் ஆண்டு அங்கு எழும்பியதுதான் கீதா பவனம். அங்கு யாத்திரிகர்கள் தங்குவதற்காக அறைகள் கட்டிவிட்டிருக்கிருர்கள். புத்தகக் கடை ஒன்று இருக்கிறது. திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் சந்நிதிகள் இருக்கின்றன. சுவரெங்கும் கீதை வாசகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ராமாயண,பாரத, பாகவத காட்சிகள் வண்ண ஒவியங்களாகக் கண் திரும்பும் இடங்களிலெல்லாம் தீட்டப் பட்டிருக்கின்றன.

நாங்கள் ஆந்திரா ஆச்ரமத்திற்குத் திரும்பியபோது மதியம் இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. புதுப் பெரியவர், நான் சென்று வந்த இடங்களேயும் கண்ட காட்சிகளேயும் பற்றி ஆர்வத்தோடு கேட்டறிந்தார். பின்னர், தினமும் மாலே ஐந்தரை மணிக்கு ஆந்திரா ஆச்ரமத்திற்கு எதிரில் உள்ள நேபாளி சத்திரத்தில் நூற்றுக்கணக்கான சாதுக்களுக்கு உணவளிக்கப் படும் விவரத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்து விட்டு, ''சாயந்திரம் மறக்காமல் அங்கே போய்ப் பார்'' என்று உற்சாகத்துடன் கூறினர்.

சரியாக மாலே ஐந்து மணிக்கெல்லாம் நேபாளி சத்திரம் 'ஜே ஜே'வென்று ஆகிவிட்டது. சாதுக்களெல்லாம் வரிசையாக அமர்ந்து பக்திப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தனர். கூடமும் முற்றமும் நிறைந்து வழிந்தன. எல்லோரையும் அமரச் செய்து தட்டில் ரொட்டியும் கூட்டும் பரிமாறுகிருர்கள். தட்டுகள் தீர்ந்து விட்டால், பைராகிகள் தங்கள் கையில் கொண்டு வரும் பாத்திரங்களில் ஆகாரத்தைப் பெற்றுக் கொள்கிருர்கள்.

அன்னதானத்தைப் பார்த்துவிட்டு, ரிஷிகேசத்திலிருந்து தெற்கே பதினேந்து மைல் பயணம் செய்து ஹரித்துவாரம் வந்து சேர்ந்தோம். ஜன நெருக்கடியும், சிறிய வீதிகளும், பழைமையான கட்டடங்களும் நிறைந்த சிறிய ஊர் அது. பாரதத்தின் தலேசிறந்த புண்ணியத் தலங்களில் ஒன்ருகும். இமயமலேயில் பிறக்கும் கங்கை, முதன் முதலாகச் சமவெளியில் பாயத் தொடங்கும் அந்தப் புனித இடம் கேதார்நாத்துக்கும் பத்ரிநாத்துக்கும் பயணம் தொடங்கும் நுழைவாயில். அதனுல் அதை ஹரத்துவாரம் என்றும் ஹரித்துவாரம் என்றும் அழைக்கிருர்கள்.

நாங்கள் அங்கு சென்றபோது இருட்டும் நேரமாகி விட்டது. பாலத்தைக் கடந்து பிரம்மகுண்டத்திற்குச் சென்ருேம். கங்கைக்கு அணேபோட்டு, வாய்க்கால் மூலம் நீர் விடுகிருர்கள். நூறு மைல் வேகத்தில் பிரவாகம் பாய்ந்து ஓடுகிறது. காங்கிரீட் மேடையில் இரும்புச் சங்கிலிகளேப் பொருத்தி


வைத்திருக்கிறார்கள். அதைப் பிடித்துக் கொண்டு நாங்கள் முழுக்குப் போட்டோம். புனித கங்கையில் எனது முதல் ஸ்நானம் அது. என் நெடுநாளைய வேட்கை தணிந்தது.

என் முந்தையப் பயணங்களில் காவிரியிலும், கோதாவரியிலும், கிருஷ்ணு விலும், துங்கபத்ராவிலும், குமாரதாராவிலும், சௌபர்ணிகாவிலும், நேத்ராவதியிலும் முழுகி எழுந்தபோதெல்லாம் கங்கையை மனத்தில் நினைத்துக் கொண்டேன். அன்று கங்கையிலேயே மூழ்கியபோது, முன்பு நீராடித் திளைத்த புண்ணிய நதிகளை யெல்லாம் நினைத்துக் கொண்டேன்.

நாங்கள் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுக் கரையேறிய போது பொழுது சாய்ந்து விட்டது. இரண்டு மூன்று முழுக்குகள்தான் போட்டோம். 'காக்காய்க் குளிப்புதான்.' அதுவே பெரும்பாடாகி விட்டது. அடேயப்பா! அந்த நீரோட்டத்திற்குத்தான் எத்தனை வேகம், எத்தனை சக்தி, எத்தனை குளிர்ச்சி!

நீச்சல் தெரியாதவர்கள் ஹரித்துவாரத்தில் முழுக்குப் போடும்போது மிகமிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ரொம்பவும் ஆசைப்பட்டு ஆனந்தக் களிப்பில், பிடித்துக் கொண்டிருக்கும் இரும்புச் சங்கிலியைத் தப்பித்தவறி விட்டு விட்டால், சங்கிலி அங்கேயே இருக்கும், நாம் இருக்க மாட்டோம்!

பிரம்மகுண்டத்தை அடுத்துள்ள மேடையில் சுமாரான கூட்டம் கூடியிருந்தது. நீராட வந்தவர்களைத் தவிர, மாலைப் பொழுதைக் கழிக்க வந்தவர்களும் அங்கு காணப்பட்டனர். பெண்மணிகளில் சிலர் அன்னை கங்கைக்குப் பூஜை செய்து கொண்டிருந்தனர். அங்கு விற்கப்படும் அகல்



கங்கை கரையிலுள்ள தோபவன் (ரிஷிகேசம்)

விளக்குகளை வாங்கித் திரியை ஏற்றித் தொன்னை போன்ற படகுகளில் வைத்துப் புஷ்பங்களைப் போட்டு, கங்கையில் மிதக்க விட்டனர். சிறுவர், சிறுமிகள் அதை வேடிக்கை பார்த்தவண்ணம் ரசித்துக் கொண்டிருந்தனர்.

இதைத் தவிர, கரையிலேயே சற்றுத் தொலைவிலிருக்கும் கங்காமாதா ஆலயத்தில், தினமும் மாலையில் பிரமாதமாகப் பூஜை நடைபெறுகிறது. மங்களார்த்தியைக் காணக் கண் கோடி வேண்டும்.

ஏழரை மணிக்கு மேல் ஆகாரத்திற்காக ஓர் ஓட்டலைத் தேடி அலைந்தபோது தான் ஹரித்துவாரத்தைச் சற்று சுற்றிப் பார்த்தோம். அங்கு மடங்களும் சத்திரங்களும் நிறைய இருக்கின்றன. சின்னஞ்சிறிய சந்துகளில் பெரிய பெரிய கட்டடங்கள் காணப்படுகின்றன. பெருகிவரும் மக்கள் தொகைக்கோ, யாத்திரிகர்களுக்கோ, போக்குவரத்துக்கோ ஈடு கொடுக்க முடியாமல் அச்சிற்றூர் முக்கித் திணறுவதைக் காண முடிந்தது. முதல் நாள் வந்து இறங்கி, மறுநாள் புறப்பட்டுச் செல்லும் 'மிதக்கும் பயணிகள்' நிறைந்திருக்கும் திருத் தலங்களுக்கே உரித்தான ஒருவித சலசலப்பிற்கும், குப்பை கூளத்திற்கும், துர்நாற்றத்திற்கும், நோயாளிப் பிச்சைக்காரர்களின் நடமாட்டத்திற்கும் அங்கு குறைவேயில்லை. ஓர் ஊரில் தீயவர்களும் தியவையும் நிறைந்து இருந்தாலும், தூய்மையே உருவான ஒரு மகான் அங்கு வாழ்வதால் எவ்வாறு அந்த இடத்திற்கு மகிமை கூடுகிறதோ, அவ்வாறே அங்கு ஓடும் கங்கை எல்லாக் குறைபாடுகளுக்கும் ஈடு கொடுத்து விடுகிறது.

திட்டமிட்டபடி நான் ஹரித்துவாரத்தைச் சுற்றிப் பார்க்க முடியவில்லை. விசாரித்தபோது அங்கும் சுற்றுப்புறங்களிலும் காண வேண்டிய இடங்கள் நிறைய இருப்பது தெரிந்தது. இரண்டு மைல் தெற்கில் 'கனகல்' என்ற இடத்தில் தட்சப்பிரஜாபதி அரசாண்ட பிரதேசமும், அவன் யாகம் செய்த



தோபவனத்திலிருந்து சிவானந்தா ஆச்ரமத்திற்கு பயணிகள் படகில் வரும் காட்சி

இடமும் இருக்கின்றன. மலையின் மீது மானசாதேவி, சண்டிகாதேவி ஆலயங்களும், கங்கைக் கரையில், பீமசேனன் தன் ஸ்நானத்திற்காக வெட்டிய 'பீமகோடா' குளமும், சப்த ரிஷிகள் ஆச்ரமம் போன்ற புராண சம்பந்தமான பகுதிகளும் இருக்கின்றன. இவையெல்லாம் அவசரத்தில் பார்த்துவிட்டு வரக்கூடிய இடங்களல்ல. இருந்து நிதானமாகப் பார்க்க வேண்டும். குறைந்தது ஒரு நாளாவது ஆகும். எனவே, தற்போதைக்கு கங்கை ஸ்நானத்தோடு திருப்தியடைவது என்றும் பத்ரி யாத்திரையிலிருந்து திரும்பி வந்த பிறகு எல்லாவற்றையும் சாவகாசமாகப் பார்ப்பதென்றும் முடிவு செய்து, இரவு ஒன்பது மணிக்கு ரிஷிகேசம் ஆந்திரா ஆச்ரமத்தை அடைந்தோம்.


நாள் முழுவதும் சரியான அலைச்சல். உடல் அசதியை மீறிய உற்சாகம், உள்ளத்தில் கங்கைப் பிரவாகம் போல் கரை புரண்டது. கண்ட காட்சிகளை யெல்லாம் படுத்துக் கொண்டே அசை போட்டேன். காணப் போகும் காட்சிகளைப் பற்றிய கற்பனையில் மிதந்தேன். எப்போது உறக்கம் என்னைத் தழுவியது என்றே எனக்குத் தெரியாது.

ஸ்ரீவெங்கடேச சுப்ரபாதத்துடன் விடியற்காலையிலேயே எழுந்து, ஆந்திரா ஆச்ரமத்தின் பின்புறம் அரை மைல் நடந்து, சாதுவாக ஓடிக் கொண்டிருக்கும் கங்கையில் ஸ்நானத்தை முடித்துக் கொண்டோம். இமயத்தின் இறுதிப் பகுதியான சிவாலிமலைத் தொடர்ச்சியைத் தொட்டுக் கொண்டு கங்கை ஓடுகிறது. தனிமைக்கும் தியானத்திற்கும் ஏற்ற சூழ்நிலை.

ஒன்பது மணிக்குப் புறப்பட்டு சிவானந்த ஆச்ரமத்திற்குச் சென்றோம். ஆச்ரமத்திற்கு எதிரே, கங்கைக் கரையிலிருக்கும் அலுவலகத்தினுள் நுழைந்தோம். அங்கு நாராயண சைதன்யா என்ற இளம் பிரம்மசாரியைச் சந்தித்தேன். முதல் நாள் லட்சுமணஜூலாவுக்கும் இதர இடங்களுக்கும் சென்ற விவரங்களை அவரிடம் கூறிய போது, 'உண்மையாகவே' லட்சுமணன் தபஸ் செய்த இடத்திற்கு என்னை அழைத்துப் போவதாக அவர் கூறவே, நாங்கள் புறப்பட்டோம்.

ஆச்ரமத்திலிருந்து இரண்டாவது பர்லாங்கில், வலப்புறம் திரும்பி, மரங்களும், செடி கொடிகளும் அடர்ந்த காட்டுப் பாதையில் கீழே இறங்கிச் சென்றோம். அங்கு வைகுண்ட ஆச்ரமம் என்ற ஓர் இடத்தைக் காண்பித்தார் அவர். கதவு பூட்டப்பட்டிருந்தது. முன்பெல்லாம் மகரிஷிகள் தவமிருந்து, ஆன்மிக வளம் செழித்துள்ள பகுதியாம் அது. இன்றும் பல சாதகர்கள் அங்கு உள்ள குகைகளில் தங்கி, ஞானப் பயிரைச் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றும், கண்டவர்களெல்லாம் அங்கு சென்று புனிதத்தைக் கெடுக்காமல் இருக்க, அதைப் பூட்டி வைத்திருப்பதாகவும், பெண்மணிகள் அந்த ஆச்ரமத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்றும் கூறினார். கதவிலுள்ள இடுக்கு வழியாக அந்த இடத்தை எட்டிப் பார்த்துவிட்டு நாங்கள் திரும்பினோம்.

அங்கிருந்து இடப்புறம் அரை மைல் மலைச் சரிவில் நடந்து, லட்சுமணன் தபஸ் செய்த இடத்தை அடைந்தோம். அங்குதான் லட்சுமணன் சேஷ அம்சத்தை மீண்டும் பெற்றாராம். அங்கு ஒரு சிறு துவாரத்தின் வழியாக,



கீதாபவனத்திலிருந்து எதிர்க் கரைத் தோற்றம்
(ரிஷிகேசம்)

நீர் கொட்டிக் கொண்டே இருக்கிறது. வருடம் பூராவும் அது வற்றுவதில்லையாம். அதற்கு சகஸ்ரதாரா என்று பெயர். அந்நீரில் ஒரு சொட்டு அருந்திவிட்டு, தலையிலும் தெளித்துக் கொண்டோம்.

அப் பர்ணசாலையில் சிவனுக்கு ஒரு சந்நிதி இருக்கிறது. பார்வதி சுப்பிரமணியர், கணபதி, நந்திகேஸ்வரரும் இருக்கிறார்கள். தனியே லட்சுமணனும் கோயில் கொண்டிருக்கிறார். கேட்பாரற்ற அந்தக் காட்டிலும் ஒருவர் குடியிருந்துகொண்டு, நித்திய ஆராதனைகளையும், ஓமம், கோபூஜை முதலியவற்றையும் கவனித்துக் கொண்டு வருவது அதிசயமாகவே இருந்தது.


மீண்டும் சிவானந்த ஆச்ரமத்திற்கு வந்தோம். கங்கைக் கரையில், சுவாமிகள் தமது இறுதிக் காலத்தில் தங்கியிருந்த விடுதிக்கு முதலில் சென்று தரிசித்தோம். அவரது படுக்கை, அவர் அமர்ந்திருந்த நாற்காலி, பயன்படுத்திய பொருள்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. அவர் எழுதிக் குவித்த கவிதைகள், கட்டுரைகள், பொன்மொழிகள் முதலியவை அடங்கிய நோட்டுப் புத்தகங்கள் அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கையெழுத்துப் பிரதிகளைப் புரட்டிப் பார்த்த போது, சுவாமிகள் அரிய பெரிய விஷயங்களை, எத்தனை தெளிவாகவும் மனத்தில் பதியும்படியும் எழுதி வைத்திருக்கிறார் என்று அறிந்து, மனத்திற்குள் வியந்து கொண்டேன்.

கங்கைக் கரையை ஒட்டினாற்போல் ஒரு மண்டபம். அங்குதான் சுவாமி சிவானந்தா எந்நேரமும் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருப்பாராம்.

கங்கையைப் பார்த்துக் கொண்டிருப்பதே மகத்தான ஞானத் தவமன்றோ? அதன் புண்ணிய வரலாற்றில், பாரதத்தின் பண்டைய கலாசாரத்தையும், நாகரிகப் பெருமைகளையும், ஆன்மிகப் பண்புகளையும் அறியலாம். அதன்



சத்ருக்னன் கோயில்




பரதன் கோயில்

ஓட்டத்தில் புராதன நிகழ்ச்சிகளையும், புராணக் காட்சிகளையும் காணலாம். அதன் தூய நீரில் மகரிஷிகளின் தூய உள்ளங்களைத் தரிசிக்கலாம். அதன் ஆழத்தில் ஞானிகளின் சலனமற்ற மனநிலையை உணரலாம். அதன் வேகத்தில் கவிஞனின் கற்பனு சக்தியை அளவிடலாம். அதன் சலசலப்பில் கலைஞனின் இதயத் துடிப்பு எதிரொலிப்பதைக் கேட்கலாம். கண்காணு இடத்தில் பிறந்து, காண முடியாத இடங்களிலெல்லாம் பாய்ந்தோடி, கரைகாணுக் கடலில் கலக்கும் அதன் புனிதப் பயணத்தை நினைக்க நினைக்க, பார்க்கப் பார்க்க, கேட்கக் கேட்க, கோடி சிறு கதைகள் இணைந்து, கோலமிகு தொடர் கதையாக அது வளர்வதையும், புண்ணிய பாரதத்தின் ஜீவநாடியாக அது திகழ்வதையும், நம் ஆத்ம கீதத்தின் ஆதார சுருதியாக இயங்குவதையும் உணர முடிகிறது.

நம் பாரதப் புண்ணிய பூமியில் தெய்வங்களும், மாமனிதர்களும், மகா புருஷர்களும் நடமாடாத இடமே இல்லை. அதிலும் இமாலயப் பகுதியெங்கும் நம் புராண இதிகாசக் கதாநாயகர்களின் பொற்பாதங்கள் படாத பகுதியே இல்லை. தசரத குமாரர்களும், பாண்டு புத்திரர்களும் வாசம் செய்து, வளமாக்கியதற்கு அடையாளமாகப் பல இடங்களை இன்றும் நமக்குக் காட்டுகிறார்கள்.

தற்போது ரிஷிகேசம் என்று அழைக்கப்படும் பகுதியில் லட்சுமணனும் பரதனும் சத்ருக்னனும் தவம் இயற்றியதற்கு அடையாளமாக அவர்களுக்குக் கோயில்கள் இருப்பதாகவும், ரிஷிகேசத்திலிருந்து பத்ரி செல்லும் பாதையில், நாற்பதாவது மைலில் இருக்கும் தேவப்பிரயாகை என்ற ஊரில், ஸ்ரீ ராமருக்கு கோயில் இருப்பதாகவும் கூறினார் நாராயண சைதன்யா.

லட்சுமணன் தவம் இயற்றிய தலத்தைப் பார்த்த பின்னர், சிவானந்தா ஆச்ரமத்திலிருந்து ஆந்திரா ஆச்ரமம் செல்லும் வழியிலுள்ள சத்ருக்னன் கோயிலைத் தரிசித்துக் கொண்டு, ரிஷிகேசத்திற்குத் திரும்பினோம். அங்குள்ள பழமையான பரதன் மந்திர் என்ற ரிஷிகேசவ நாராயணர் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டோம்.



ரிஷிகேசத்திலிருக்கும் இந்தப் பாலத்தி லிருந்துதான் பத்ரிநாத்துக்குச் செல்லும் மலைப்பாதை தொடங்குகிறது.

2

சாதாரணமாக நம் வீடுகளில் உறவினரும் நண்பர்களும் சேர்ந்து தல யாத்திரை புறப்படுவது என்றாலே எத்தனையோ ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டியிருக்கிறது. நான்கு நாள் பயணம் சென்று வருவதற்கு நாற்பது நாட்களுக்கு முன்பிருந்தே திட்டம் தீட்டியாக வேண்டும். கார்களுக்கோ ரயில் டிக்கெட்டுகளுக்கோ ஏற்பாடு செய்வதற்குள் 'உன்பாடு என்பாடு' என்றாகிவிடும். அதற்குப் பிறகு பொருட்களைச் சேகரிப்பது, மூட்டை முடிச்சுக்களைக் கட்டுவது, வழி ஆகாரத்தைத் தயார் செய்வது போன்ற விஷயங்களில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இத்தனை செய்தும் கடைசி நிமிடத்தில் எதையோ மறந்து விடுவோம்! அதற்காகப் பொறுமையிழந்து, பரக்கப் பரக்க அங்குமிங்கும் ஓடுவதும், எதிரில் வருபவர்களின் மீது காரணம் இன்றி எரிந்து விழுவதும் மிகவும் சாதாரண நிகழ்ச்சிகளாகும்.

ஒரு வீட்டிலிருந்து நான்கு பேர் யாத்திரை புறப்படுவதற்கே இந்தப் பாடென்றால், ஒரு மடம் ஒரு மாதம் 'காம்ப்' கிளம்புவதென்றால் சாதாரண விஷயமா? அதுவும் இமாலயத்தில் சுமார் முந்நூற்றறுபது மைல்கள் பாத யாத்திரையாகச் சென்று வரவேண்டும். மக்கள் நடமாட்டமோ, தேவையான பிற வசதிகளோ இல்லாத அக் காட்டுப் பகுதிகளில் அங்கங்கே தங்கிப் பூஜை செய்தாக வேண்டும். சுவாமிக்கு நைவேத்தியம் தயாராக வேண்டும்; உடன் வருபவர்களுக்குச் சாப்பாடு



ஆந்திரா ஆச்ரமத்தில் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தரிசனம் தருகிறார்

செய்தாக வேண்டும். மழை, வெய்யில், குளிர், பனி எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்தாக வேண்டும். இரவு அத்தனை சாமான்களையும் ஓரிடத்தில் இறக்கி, மறுநாள் ஒன்றுவிடாமல் மீண்டும் லாரிகளில் ஏற்றி, அடுத்த 'காம்ப்'புக்கு எடுத்துக் கொண்டு போயாக வேண்டும். நேரம் தவறாமல், மணி பிசகாமல் எல்லாம் திட்டமிட்டபடி ராணுவ கெடுபிடியில் நடந்தாக வேண்டும்.

செப்டம்பர் 12-ம் தேதி பகல் இரண்டு மணியிலிருந்தே ஆந்திரா ஆச்ரமத்தில் பெரும் சலசலப்பும் பரபரப்பும் காணப்பட்டது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரிகளிலும், பெரிய ஜீப்பிலும் ஒரு மணியிலிருந்தே சாமான்களை ஏற்றத் தொடங்கி விட்டார்கள். உடன் வருபவர்களெல்லாம், தங்களது பெட்டி, படுக்கைகள், கைப் பைகள் எல்லாம் பத்திரமாக இருக்கின்றனவா, பாதுகாப்பான இடத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். டில்லி ஸ்ரீநிவாசன், தனது காமிராப் பைகளின் மீது வேறு பெட்டிகளை ஏற்றி விடாமலிருக்க ஜீப்பின் அருகிலேயே தவமிருந்தார்!

மானேஜரும், ஓரிரு சிப்பந்திகளும் புதுப் பெரியவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த 'வாகனம்' சரியாக இருக்கிறதா என்று பார்வை யிட்டார்கள். நாற்காலியைப் போலிருக்கும் அதைத் 'தண்டி' என்று அழைக்கிறார்கள். அதை ஏந்திச் செல்வதற்காக அமர்த்தப்பட்டிருந்த ஏழெட்டு மலை ஜாதி ஆட்கள், சட்டையில்லாமல் அலைந்து கொண்டிருந்த எங்களை ஆச்சரியத்துடன் வேடிக்கை பார்த்தார்கள்.

''புதுப் பெரியவர் பாத யாத்திரையாகத்தான் செல்லப் போகிறார். ஆனால், வழியில் எங்கேயாவது ரொம்ப சிரமமாக இருந்தால், கொஞ்சம் இதில் உட்கார்ந்துகொண்டு வரலாமே என்று நினைத்தே நாங்கள் இந்த 'டோலி'க்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இது அவர் பின்னாலேயே வந்து கொண்டிருக்கும்'' என்று மானேஜர் கூறினார்.

மூன்று மணியாகிவிட்டது. பயணக் கோஷ்டியைச் சேர்ந்த எல்லாரும் ஓரிடத்தில் கூடிவிட்டிருந்தோம். சிப்பந்திகள், பணியாட்கள் எல்லாருமாகச் சேர்ந்து சுமார் நாற்பது பேர் இருக்கும். சாமான்களுடன் லாரிகளில் வரப் போகிறவர்கள் அவற்றில் ஏறிக் கொண்டார்கள். ஸ்ரீ அனந்தானந்த சுவாமிகளுக்கும் ஸ்ரீ ஒடாச்சேரி சுவாமிகளுக்கும் முன்னால் வசதியாக

உட்கார இடம் செய்து தரப்பட்டது. இன்னும் பத்துப் பதினைந்து நிமிடங்களில் நாங்கள் புறப்பட்டு விடுவோம்.

மணி மூன்றடித்துப் பத்து நிமிடங்கள் இருக்கும். அங்கு குழுமியிருந்த வடநாட்டுப் பெண்மணிகள் பஜன் பாடல்கள் பாடிக்கொண்டு புதுப் பெரியவரின் தரிசனத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தனர். தமது அலுவல்களை முடித்துக் கொண்ட புதுப் பெரியவர், மலர்ந்த முகத்துடன் வெளியே போடப்பட்டிருந்த மேடையில் வந்து அமர்ந்தார். மானேஜரை அழைத்து யாத்திரைக்கான ஏற்பாடுகளைப் பற்றியெல்லாம் சுவாமிகள் இறுதியாக விசாரித்துத் தெரிந்து கொண்டிருக்கையில், அங்கு கூடியிருந்த தென்னாட்டினரும், வடநாட்டினரும் அவரைத் தரிசனம் செய்து கொண்டனர்.



ஆந்திரா ஆச்ரமத்திலிருந்து பத்ரி யாத்திரைக்குப் புறப்படும் காட்சி

பக்தர் ஒருவர் வந்து, சுவாமிகளுக்கு மலர் மகுடமும், மலர் மாலைகளும் அளித்தார். ரிஷிகேசம் ஊராட்சித் தலைவர், மைக் முன்னால் வந்து, உத்தரப் பிரதேசத்தின் அழகான இந்தியில், வழியனுப்பு உபசாரமாக உள்ளம் திறந்து உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். அவர் அமுதமாகப் பொழிந்ததை, வார்த்தைக்கு வார்த்தை அப்படியே ஆமோதித்ததற்கு அடையாளமாக, அங்கு இருந்தவர்கள் கைகளைத் தட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

சுவாமிகள், பதிலுக்கு ரத்தினச் சுருக்கமாக இரண்டு வார்த்தைகள் அருளுரையாகக் கூறிவிட்டு, கூடியிருந்தவர்களுக்கு மந்த்ராட்சதை வழங்கி, தமது விஜய யாத்திரையைத் தொடங்கினார்.

எங்கெல்லாமோ நின்றிருந்த பக்தர்கள் பக்திப் பரவசத்தில், உணர்ச்சி மயமான உற்சாக எக்களிப்பில், 'ஹர ஹர சங்கர, ஜய ஜய சங்கர' என்று முழக்கமிட்டுக் கொண்டு, ஆர்வமுடன் விரைந்து வந்து சுவாமிகளைச் சூழ்ந்து கொண்டார்கள்.

'பத்ரி விசால் கீ ஜெய்!' 'கங்காமாதா கீ ஜெய்!' என்ற வடநாட்டுக்காரரின் கணீரென்ற குரல் ஒன்று எழும்பி, வான்முகட்டை முட்டியது.

வேத முழக்கம் பாதுகாப்பு அரணாகச் சுற்றிலும் ஒலிக்க, வேதத்தைப் பாதுகாக்க அவதரித்த ஆதிசங்கரரின் வாரிசு, ஆன்மிக சாம்ராஜ்யத்தின் அதிபதியாகத் தலை நிமிர்ந்து நடக்கிறார். ஆதிகுரு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இமாலயத்தின் உச்சியில் பிரதிஷ்டை செய்வித்த நாராயணரைத்

தரிசிக்கப் புறப்பட்டுச் செல்கிறார். தெய்வத்தின் துணையின்றித் தீர்த்த யாத்திரைகள் சரிவர நிறைவேறுவதில்லை என்பதை நமக்கு உணர்த்தும் வகையில் சுவாமிகள், முதலில் ஆந்திரா ஆச்ரமத்தின் முன்புறமுள்ள ஸ்ரீ வேங்கடாசலபதியையும் ஸ்ரீ சந்திரமௌளீச்வரரையும் தரிசித்துக் கொள்கிறார். பின்னர் விஜய யாத்திரை சென்று ஜயக்கொடி நாட்டி விட்டுத் திரும்புவதற்காக, வீதியில் காலடி எடுத்து வைக்கிறார் ஸ்ரீ ஜயேந்திரர். அப்போது விண்ணதிர ஒலித்த வேத கீதம், பாரதத்தின் ஆன்மிக அலையோசையாக முழங்குகிறது.

ஆச்ரமத்திற்குப் பின்னால் ஓடிக்கொண்டிருந்த கங்கை, திடீரென்று முன்னால் ஓடத் தொடங்கிவிட்டதா என்ன? வீதியெங்கும் நிரம்பி வழிந்த மக்களின் உணர்ச்சிப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுகிறதே! தென்னாட்டவர் களைத் தவிர, அங்கு உத்தரப் பிரதேச மக்களையும், ராஜஸ்தானிகளையும், குஜராத்திகளையும், மகாராஷ்டிர மக்களையும், வங்காளிகளையும் காண முடிந்தது. பல மொழி பேசுகிறவர்கள், ஆதிசங்கரரை நினைவுகூர்ந்து, ஒரே மொழியாக 'ஹர ஹர சங்கர, ஜய ஜய சங்கர' என்று முழக்கமிட ஆரம்பித்தார்கள். தென்னாட்டவர்கள் தொடங்கிய இந்தக் கோஷம், வடநாட்டினரையும் கவர்ந்தது. பாரதத்தை ஒருங்கிணைத்த உத்தமனின் திருநாமம், இமயமலைச் சரிவில் எதிரொலித்தது; புண்ணிய கங்கையுடன் கலந்தது.

சிவானந்த ஆச்ரமத்திலிருந்து வந்திருந்தவர்கள், பூர்ண கும்ப மரியாதை யுடன், ஸ்ரீ காமகோடி பீடாதிபதியைத் தங்கள் ஆச்ரமத்திற்கு வருகை தரும் படி அழைத்தார்கள். அதைப் புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்ட சுவாமிகள், செல்லும் வழியில் சிவானந்த ஆச்ரமத்திற்குள் தமது பொன்னடி பட நடந்து,


ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பத்ரிநாத் யாத்திரைக்குப் புறப்பட்டுச் செல்லும் காட்சி.



சிவபுரியில் தீப்பந்த வரவேற்பு

பஜன் நடைபெற்ற கூட்டத்திற்குச் சென்றார். சிறிது நேரம் அங்கு பஜன் நடைபெற்ற பின்னர், வடமொழியில் பேசிய ஒரு பெரியவர், அன்று ஸ்ரீ காமகோடி சுவாமிகளின் வருகையால் சிவானந்த ஆச்ரமம் பெருமை அடைவதாகவும், ஸ்ரீ ஆதிசங்கரருக்குப் பிறகு பாத யாத்திரையாக பத்ரிநாத்துக்கு யாத்திரை செல்லும் ஸ்ரீ ஜயேந்திரரை வாழ்த்தி வழியனுப்புவதாகவும் உணர்ச்சியுடன் கூறினார்.

புதுப் பெரியவர், ரிஷிகேசத்தின் மகிமையைப் பற்றிக் கச்சிதமாக இரண்டு வார்த்தைகள் பேசிய பிறகு, அவர்களுக்கு ஆசி வழங்கிவிட்டுத் தமது யாத்திரையைத் தொடர்ந்தார்.

என்னை வழியனுப்ப வந்தவர்களிடமிருந்து நான் இங்குதான் விடை பெற்றுக் கொண்டேன். சென்னையிலிருந்து ரிஷிகேசத்திற்கு வருமுன், டேராடூனில் என் அன்புச் சகோதரியின் இல்லத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தேன். அவளும், அவள் கணவரும், அவர்களின் இரு செல்வங்களும் சுவாமிகளைத் தரிசிக்கவும், என்னை வழியனுப்பவும் ரிஷிகேசம் வந்தார்கள். ரிஷிகேசத்திலும், ஹரித்துவாரத்திலும் நான் சென்ற இடங்களுக்கு அவர்களும் உடன் வந்தார்கள்.

சிவானந்த ஆச்ரமத்தின் வாயிலில் நாங்கள் பிரிய வேண்டியிருந்தது. ‘உடலைக் கவனித்துக் கொள், உடைமைகளைப் பார்த்துக் கொள், கடிதம் போடு’ என்று உரிமையுடனும், உள்ளத்தில் பொங்கிய உவகையுடனும் சகோதரி என்னிடம் கூறிக் கொண்டிருக்க, ‘நாமும் உடன் சென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்’ என்று, மலைகளில் நடந்து பழக்கப்பட்ட கணவர் இன்பக் கற்பனையில் ஆழ்ந்திருக்க, இரு செல்வங்களும் பிரிவின் சோகம் முகத்தில் படர பேச்சடங்கிப் பதுமைகளாக நின்றிருக்க, என்னையும் அறியாமல் நெஞ்சம் சட்டென்று மெழுகாய் நெகிழ, அடுத்த கணம்

கண் விளிம்பில் துளித்த நீரை மறைப்பதற்காக ஒரு போலிச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு முன்னால் சென்றுவிட்ட கோஷ்டியைப் பிடிப்பதற்காக விரைந்தேன் நான்.

ஐந்தே நிமிடங்களில் நான் பயணக் கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டு விட்டேன். ஆந்திரா ஆச்ரமத்திலிருந்து புறப்பட்ட போது எங்களுடன் வந்த கூட்டம் இப்போது வெகுவாகக் குறைந்து விட்டிருந்தது. வழியனுப்புவதற்காக உடன் வந்திருந்தவர்களில் முக்கால்வாசிப் பேர் சிவானந்த ஆச்ரமத்தோடேயே விடை பெற்றுக் கொண்டார்கள். மீதியிருந்த பத்துப் பதினைந்து பேரும் லட்சுமணஜூலா எல்லையில், சுவாமிகளிடம் நல்லாசி பெற்றுத் திரும்பி விட்டனர். எங்கள் கோஷ்டியில் மொத்தம் பன்னிரண்டு பேருக்குமேல் இல்லை. மற்றவர்களெல்லாம் லாரிகளிலும், ஜீப்புகளிலும் முன்பே சென்று விட்டார்கள்.

வழி மறைத்திருக்குதே . . . . .

திடீரென்று கருமேக மூட்டம் கவியத் தொடங்கியது; சில்லென்று காற்று வீசியது; சற்றைக்கெல்லாம் உடல் நனைகிற அளவுக்குப் பெரிய தூறல்களுடன் மழை பொழிந்தது. இமாலயப் பயணத்தின் முதல் அனுபவமே பரம சுகமாக இருந்தது.

மாயாபுரியின் நகர எல்லையைக் கடந்ததும்,ஒரு மரத்தின் கீழ் ‘தண்டி’யை இறக்கி, அதில் சுவாமிகள் அமர்ந்து கொண்டார். மற்ற இரு சந்நியாசிகளும் அருகில் அமர்ந்து கொள்ள, பிறர் சுற்றிலும் நிற்க, வானம் பன்னீர் தெளிக்க, விஜய யாத்திரையின் ஓர் அங்கமாக ஸ்ரீமத் பகவத் கீதையின் பதினோராவது அத்தியாயப் பாராயணம் முடிந்தது. மீண்டும் எங்கள் பயணம் தொடர்ந்தது.

நல்ல வேளையாக, எல்லோரும் பயந்தபடி கன மழையாகப் பிடித்துக் கொள்ளவில்லை. எங்கள் உடலை நனைத்ததோடு அது திருப்தி அடைந்தது. கங்காதேவி, வான்மழையாகப் பொழிந்து, எங்களை நீராட்டிப் புனிதப்படுத்தி, இமாலய உலகத்தைக் காண அழைத்துச் சென்றதாகவே தோன்றியது.

நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிந்த மலைத் தொடர்கள்,நேரம் ஆக ஆக ஒரே வரிசையில் இருப்பது போல் தோன்ற ஆரம்பித்தன. சற்றைக்கெல்லாம் பச்சைப் பசேலென்று அடர்த்தியாக ஓங்கி வளர்ந்திருந்த மரங்களும் கண்களிலிருந்து மறைந்து,மலை எது, காடு எது என்று பிரித்துக் கூற முடியாமல், கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருந்திரை யொன்று போட்டது போல் எங்கும் இருள் கப்பி விட்டது. கரு மேகங்கள் விதானமாக விரிந்து வானத்தை மறைத்ததால், நட்சத்திரங்களையே காண முடியவில்லை. இருண்ட பாய் விரித்து, மௌனப் போர்வையின் கீழ் முடங்கிவிட்ட இமயப் பகுதியின் அமைதியான உறக்கத்தைக் கலைத்தவாறு நாங்கள் நடந்து கொண் டிருந்தோம். கை திவட்டியின் ஒளியும், எங்கள் பேச்சொலியும் அப் பகுதியில் பரந்து கிடந்த இருளைக் கிழித்து அமைதியைக் கலைத்தது. எங்களுக்கு இமாலயப் பயணம் புது அனுபவமாக அமைந்தது போலவே, இமாலயத்திற்கும் எங்கள் பயணம் ஒரு புது அனுபவமாகவே இருந்திருக்க வேண்டும்!

ஆறு ஏழு மைல்கள் மலைப் பாதையில் நடந்து, இரவு எட்டு மணி சுமாருக்கு சிவபுரி என்ற சிற்றூரை அடைந்தோம். அங்குதான் இரவு நாங்கள்

தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எல்லாம் எல்லைப் பாதையைக் கண்காணிக்கும் ராணுவப் பகுதியினரின் அற்புதமான ஏற்பாடுகள்.

சுவாமிகளுக்கு அன்றிரவு அவ்வூர் வாசிகள் அளித்த வரவேற்பு மறக்க முடியாததாக அமைந்திருந்தது. அந்த நேரத்திலும், அந்த மழையிலும் ஊர் ஜனங்கள் அங்கு கூடி யிருந்தார்கள். ராணுவத்தினர், தீப்பந்தங்களைக் கையில் ஏந்தி, இருபுறமும் நின்று, 'சங்கராசார்ய மகராஜீ கீ ஜெய்' என்று உரக்க முழக்கமிட, அத் தீப்பந்தலின் கீழ் சுவாமிகள் சிரித்த முகத்துடன் நடந்து சென்ற காட்சி மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது. மீண்டும் மழை தூற ஆரம்பித்து விட்டதால், தீப்பந்தங்கள் அணைந்து விடாமலிருக்க, பெட்ரோலை ஊற்றி அவர்கள் எரிய விட்டது அவர்களது பெரும் உற்சாகத்தைக் காட்டியது. நடு நடுவே அவர்கள் 'D. G. B. R. கீ ஜெய் 21 B. R. T. F. கீ ஜெய்' என்றும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதற்கு என்ன அர்த்தம் என்று சுவாமிகள் ராணுவ அதிகாரி மேத்தாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். D. G. B. R. என்றால், 'டைரக்டர் ஜெனரல் ஆஃப் பார்டர் ரோட்ஸ்' என்று பொருள். 21 B. R. T. F. என்றால் 'பார்டர் ரோட்ஸ் டாஸ்க் ஃபோர்ஸ்' என்று பொருள். அது அங்கு பணியாற்றும் குறிப்பிட்ட பிரிவின் பெயர்.

சுவாமிகள் தங்குவதற்குத் தகரத்தாலான ஒரு சிறு அறையையும், நாங்கள் தங்குவதற்கு ஒரு பெரிய அறையையும் கட்டி வைத்திருந்தார்கள். இடம் மிகவும் வசதியாக இருந்ததால் அவரவர் தங்கள் படுக்கையை விரித்துக் கொண்டோம். ஓர் ஓரத்தில் ஒரு சிறு கோஷ்டி அமர்ந்து, திருப்பதி பிரசாதங்களான லட்டுவையும், வடையையும் பங்கு போட்டுக் கொண்டிருந்தார்கள். அதன் மணம் நாசியைத் துளைக்க, பசி வயிற்றைக் கிளற, அரை குறைத் தூக்கத்திலிருந்தவர்களும் எழுந்து உட்கார்ந்து விட்டார்கள்!

பதினொரு மணிக்கு ஒரு மழை பிடித்துக் கொண்டது. அடேயப்பா! பேய் மழை, பிசாசு மழை என்று கூறினால் போதாது; பிரளய மழை என்றே அதை வர்ணிக்க வேண்டும். அதுவும், எங்கள் தகரக் கூரை அம்மழையை மிகப் பயங்கரமாக மிகைப்படுத்திக் காட்டியது. 'தடதட' என்று வானமே இடிந்து விழுவது போல் இரவு முழுவதும் ஓயாத ஓசை. இதற்கு இடையில் எப்படியோ கண்ணயர்ந்து விட்டிருக்கிறோம்.

திடீரென்று கனவு உலகத்தில் கௌரிகாளை ஊதுவது போல் சப்தம் கேட்டது. கண் விழித்தேன். அருகில் படுத்திருந்தவர்களெல்லாம் 'மளமள' வென்று படுக்கையைச் சுருட்டிக் கொண்டிருந்தார்கள். என்னவென்று விசாரித்ததில் சுவாமிகள் புறப்பட்டு விட்டதாகக் கூறினார்கள். வெளியே வந்து எட்டிப் பார்த்தேன். ஒரு பர்லாங் தொலைவில் கை தீவட்டி தெரிந்தது. நான்கு பேர் பின் தொடர, சுவாமிகள் வேகமாக நடந்து கொண்டிருந்தார். அடேயப்பா, எத்தனை சுறு சுறுப்பு, எத்தனை பொறுப்பு உணர்ச்சி! முதலில் தாம் புறப்பட்டால்தான் 'காம்ப்' அந்த இடத்தை விட்டு நகரும் என்று அனுபவத்தில் கற்றறிந்தவர் ஆயிற்றே அவர்!

அடுத்த பன்னிரண்டு நாட்களும், நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் நடைபெறப் போகின்றன என்பதற்கு இது ஓர் அறிகுறி. இல்லை, நடந்தாக வேண்டும் என்பதற்கு இது ஓர் எச்சரிக்கை. இது ஓர் உல்லாச 'பிக்னிக்' அல்ல. புனிதப் பயணம், புண்ணிய விரதம்; ஆன்மிக யாத்திரை.




மலே சரிந்து விழுந்ததால் அடைக்கப்பட்ட பாதை சீர்படுவதற்காக
பஸ் பயணிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பின்னல் வரும் லாரியில் வரவேண்டிய எங்கள் உடைமைகளே மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்துவிட்டு, நாங்கள் சுவாமிகளேப் பின் தொடர்ந்தோம். இரவு பெய்த மழையின் காரணமாக சூழ்நிலே குளுமையாக இருந்தது. கருந்திரையில் மறைந்திருந்த மலேத் தொடர்கள் லேசாக வெளிக் கிளம்பிக் கொண்டிருந்தன. அவற்றை முழுமையாகத் தரிசிக்க முடியாமல், பனிப் படலம் மூடியிருந்தது. தினுசு தினுசான பறவைகள் வெவ்வேறு குரலில் கூவிக் கொண்டிருந்தன. எங்களோடு வந்த ராணுவ அதிகாரிகள், முதல் இரவு பெய்த மழைதான் அநேகமாக அந்த சீசனுக்குக் கடைசிப் பெரு மழையாக இருக்கும் என்று கூறினர்கள். அது உண்மைதான். அதற்குப் பிறகு பத்ரிநாத் போய்ச் சேரும் வரை, பெரு மழையே இல்லே. அவ்வப்போது கரு மேகங்கள் சூழ்ந்துகொண்டு உறுமி பயமுறுத்தின. ஆனல், மழை கொட்டவில்லே. கையாலாகாதவன் 'ஓ'வென்று கத்திவிட்டு வாபஸ் ஆவது போல் இருந்தது அது!

இமாலயத்தில் நாம் உயரே போகப் போக, ஹரித்துவாரத்திலும் ரிஷிகேசத்திலும் நம்முடன் பழகிப் பேசிய கங்கை, மெள்ள மெள்ள ஒதுங்கி, பதுங்கி ஓடத் தொடங்குகிருள். பள்ளத்தாக்குகளில் பாறைகளுக்கிடையே நுழைந்தும், மரங்களுக்கிடையே மறைந்தும் அவள் பாய்ந்து வரும் காட்சி, சிறுமிகள் கண்ணுமூச்சி ஆட்டம் ஆடுவதை நினைவுபடுத்தும். சட்டென்று அவள் நம் கண்களிலிருந்தே மறைந்து விடுவாள். எங்கே சென்றிருப்பாள் என்று தேடிக் கொண்டிருக்கும்போது, ஏதோ ஒரு பக்கத்திலிருந்து நகைத்துக் கொண்டே ஓடி வருவாள். சற்றுமுன் சிறுமியாக நடை பயின்றவள் திடீ ரென்று வளேந்து, நெளிந்து, ஒய்யார எழிலுடன் கும்மாளமிடும் நங்கையாக குலுங்கிக் குலுங்கி ஓடி வருவாள். குற்றமுள்ள நெஞ்சமும் அவளது குதூகல விளேயாட்டைக் காணும் போது, குற்றம் நீங்கிப் புனிதமடையும்.

இயற்கையை ரசித்துக் கொண்டே நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். மணி ஏழாகி விட்டது. சூரியோதயம் ஆகியிருந்ததற்கு அடையாளமாக வெளிச்சம் இருந்ததே தவிர, சூரிய பகவானேத் தரிசிக்க முடியவில்லே. எந்த மலேச் சிகரம் அவரை மறைத்துக் கொண்டிருந்ததோ, தெரியவில்லே!



மலை சரிந்து கொண்டிருக்கிறது.........

ஓரிடத்தில் மூன்று நான்கு பஸ்கள் நின்று கொண்டிருந்தன. அவற்றி லிருந்த பிரயாணிகள் கீழே இறங்கி நடந்து கொண்டிருந்தார்கள். எங்களுடைய லாரிகளில் ஒன்றும் ஜீப் வாகனும் அங்கே நின்று கொண்டிருந்தன. என்னென்று விசாரித்ததில், மலை சரிந்து பாதை மூடப்பட்டு விட்டது என்றும் ராணுவ 'புல்டோஸர்' மண்ணை அகற்றிக் கொண்டிருக்கிறது என்றும் தெரிந்தது. அதை வேடிக்கை பார்க்கலாம் என்று நாங்கள் அந்த இடத்திற்குச் சென்றோம்.

நாங்கள் கண்ட காட்சி, பத்ரிப் பயணம் அத்தனை எளிதானதல்ல என்ப தற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. ஆறடி அகலமே உள்ள பாதையில் மலையிலிருந்து சரிந்த மண்ணும் கல்லும் குவிந்து, வழியை அடைத்துக் கொண் டிருந்தது. அதை ஒரு புல்டோஸர் அப்படியே அப்புறப்படுத்திப் பள்ளத்தில் தள்ளிக் கொண்டிருந்தது. அந்த புல்டோஸர், பாதையின் விளிம்பு வரையில் சென்று மண்ணைக் கீழே தள்ளிவிட்டுப் பின்னுக்கு வருவதற்குள் நமக்கு உயிர் போய் உயிர் வருகிறது.ஒரு மயிரிழை தப்பினால் மண் சரிந்து, புல்டோஸர் அதல பாதாளத்தில் விழுந்து விடக்கூடும். ஆனால், அதை இயக்கிய அனுபவசாலி யான டிரைவர், சற்றும் கலங்காமல் கருமமே கண்ணாயிருந்தார். அந்த ராணுவ வீரரின் துணிச்சலையும் கடமையுணர்ச்சியையும் காணும் போது மலைப்பாகவும் பெருமையாகவும் இருந்தது.

சுவாமிகளும், அவருடன் சென்றவர்களும் முன்பே அவ்விடத்தைக் கடந்து சென்று விட்டிருந்தார்கள். நாங்கள் ஐந்தாறு பேர் மேலே போவதா வேண்டாமா என்று தீர்மானிக்க முடியாமல் தயங்கிக் கொண்டிருந்தோம். டிரைவரைக் கேட்டுக் கொண்டு செல்லலாம் என்று நானும் ஸ்ரீநிவாசனும் காத்துக் கொண்டிருந்தபோது சிவராம ஐயரும் ஜானகிராமய்யாவும் வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள்.

திடீரென்று, ''சிவராம ஐயர், சீக்கிரமா ஓடி வந்துடுங்கோ'' என்று ஜானகிராமய்யா பயங்கரமாகக் கூச்சல் போட்டார். விழுந்து அடித்துக் கொண்டு விரைந்தார் சிவராமன்.

அடுத்த கணம், மலைச் சரிவில் வேரோடு பெயர்ந்த பெரிய மரம் ஒன்று, கூடவே வண்டி மண்ணையும் வாரிக் கொண்டு அவர் நின்றிருந்த

இடத்தில் 'தடால்' என்று பாதையில் வந்து விழுந்தது. அவர் அன்று உயிர் பிழைத்தது பத்ரிநாராயணரின் அருளால்தான் என்பதில் சந்தேகமில்லே.

அந்த மலே சரிந்து விழுவதைப் பார்க்கும்போது கதி கலங்குகிறது. உள்ளே யிருந்து யாரோ ஒரு ராட்சசன் மலேயை அசைப்பதைப் போல், முதலில் சிறு கற்கள் உருளத் தொடங்குகின்றன. பின்னர் சிறு பாறைகள் உருளுகின்றன; மரங்கள் சாய்கின்றன. அரை நொடியில் 'பொத பொத'வென்று மண்கட்டிகள் விழ, மலேயின் ஒரு பகுதியே கரைந்து விடுகிறது.

நாங்களெல்லாம் எப்படியோ தப்பித்து அந்தப் பக்கம் சென்று, காலே ஒன்பது மணிக்கு 'பியாஸி' என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். லேசான குளிரோடு இதமான வெப்பமும் சேர்ந்து, நடப்பதற்குச் சௌகரியமாக இருந்தது.


வியாச பகவான் தவமிருந்த இடமாம் அது. பத்ரிநாத் யாத்திரையின் போது, முதல் பூஜை அந்தத் தலத்தில் நடைபெற்றதில் ஒரு சிறப்பு இருக்கத் தான் செய்தது.


ஒரு நீர்வீழ்ச்சிக்கு அருகில் பாதையோரத்தில் இரண்டு மூன்று ராணுவ கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. ஒன்றின் வாயிலில் 'பூஜா' என்று ஆங்கிலத் தில் எழுதப்பட்ட சிறு மஞ்சள் போர்டு நின்று கொண்டிருந்தது. பாதை ஓரத்தில் 'சங்கராசாரியா காம்ப்' என்ற போர்டும் இருந்தது.

ஸ்ரீமடம் முகாமிட்டிருந்த இடத்திற்கு அருகில், தெருவோரமாக இருந்த சிமெண்ட் பெஞ்சில் சுவாமிகள் அமர்ந்திருந்தார். அவ்வழியே பஸ்ஸில் பத்ரிநாத் சென்றவர்கள், அங்கு இறங்கி அவரைத் தரிசனம் செய்து கொண்டார்கள். சுற்றிலும் மரம் செடிகள் அடர்ந்திருக்க, அருகில் நீர்த்தாரை கொட்டிக் கொண்டிருக்க, இயற்கையோடு ஒன்றிய அற்புதமான சூழலில், அன்று கூடாரத்திற்குள் ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் பூஜை நடைபெற்றது.

மாலே மூன்று மணிக்குப் புறப்பட்டு எட்டு கிலோமீட்டர் தொலேவிலுள்ள குடியாலா என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். இரவு பூஜை அங்குதான்.

முதல் முகாம் தங்கிய 'பியாஸி'





பாகீரதியும் அலகநந்தாவும் சேரும் தேவப்பிரயாகை சங்கமக் கட்டம்

3

கூடியாலாவில் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு எதிரில் கங்கை ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், நூறு அடி இறங்கிச் சென்றால்தான் அதன் கரையை அடைய முடியும். இறங்கிச் செல்வதற்குச் சௌகரியமாகப் படிக்கட்டுகளைப் போல் செதுக்கி வைத்திருந்தனர்.

சுற்றிலும் மலைப் பாறைகள். அதன் மத்தியில் கங்கை ஓடி வருகிறது. பாறையில் மோதி, அதன் ஓட்டம் தடைப்பட்டு, திசைமாறி, அங்கேயே சுற்றிச் சுழன்று கொண்டிருப்பதால், அது சக்ர தீர்த்தம் போலிருந்தது. அடர்ந்த மரங்களுக்குக் கீழே யிருந்த ஒரு மேடையில் அமர்ந்து, அந்தக் காட்சியை ரசித்துக் கொண்டிருப்பதே ஆத்ம தியானமாகவும், அருந்தவமாகவும் இருக்கிறது.

மானுடரின் பாவங்களைக் கரைத்து, விமோசனம் தந்தருள வானுலகிலிருந்து கீழிறங்கி வந்து, தன்னலம் கருதாது, கைம்மாறு எதிர்பாராது, கருணையுடன் கடமையாற்றி, ஓய்ச்சல் ஒழிவின்றி ஓடி, மூலை முடுக்குகளிலெல்லாம் தேடித் தேடி தன் மக்களைக் கரையேற்றுவதாலேயே அவள் புனித கங்கை ஆகின்றாளோ! நாடு முழுவதும் பாய்ந்தோடும் நதிகளிலெல்லாம் அவள் கலந்திருப்பதால், இது புண்ணிய பாரதம் ஆகின்றதோ!

மறுநாள் வெள்ளிக்கிழமை.


செப்டம்பர் 14-ம் தேதி.

விடியற்காலை நாலரை மணிக்கே நாங்கள் எல்லோரும் விழித்துக் கொண்டு விட்டோம். எழுந்து வெளியே வந்தோம். ஜில்லென்று ஊதக் காற்று வீசியது. இன்னும் இருள் விலகவில்லை. மலைச்சிகரங்கள் கண்ணுக்குத் தெரியாதவாறு கனமான பனி மூட்டம் மறைத்திருந்தது. கங்கையையும் தெளிவாகத் தரிசிக்க முடியவில்லை. அது எழுப்பிய தெய்விக ஒலியை மட்டும்தான் கேட்க முடிந்தது. இறங்கி வந்து, உஷத்கால ஸ்நானத்தை முடித்துக் கொள்ளும்படி அவ்வொலி எங்களை அழைப்பதுபோல் தோன்றியது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு நாங்கள் ஏழெட்டு பேர் நீரில் இறங்கி விட்டோம். உடல் நடுக்கமெல்லாம் அரைக் கணம்தான். பயந்து ஓடும் குழந்தையைக் கருணையோடு இழுத்து வைத்துக் குளிப்பாட்டும் அன்னையைப் போல், கங்கா மாதா எங்களை நீராட்டினாள். அவளது முதல் ஸ்பரிசத்தால் துள்ளிக் குதித்து 'ஓ'வென்று இரைச்சலிடும் நம்மை, அன்புடன் தழுவி அரவணைத்துக் கொள்கிறாள். நம்மை மறந்த நிலையில் நாம் பேரின்பத்தில் திளைக்கிறோம். கடியாலாவில் தொடங்கிய இந்தச் சுகானுபவம், பத்ரிநாத் வரை தொடர்ந்தது. வழி நெடுகிலும் நம் உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்திக்கொண்டே, நம் வாழ்வில் புனிதம் சேர்த்துக்கொண்டே உடன் வரும் கங்காதேவி, பத்ரிகாச்ரமப் புண்ணிய லோகத்தில் நுழையும்போது, நம்மை மாசற்றவர் களாக்கி, அங்கு உறையும் ஸ்ரீ நார்ராயணமூர்த்தியைத் தரிசனம் செய்வித்து, மறு பிறவியெனும் வினை நீக்கி, நற்கதி தேடித் தருகிறாள்.

கங்கையில் நீராடிவிட்டு, பொழுது புலரும் வேளையில் இமயத்தில் நடந்து கொண்டிருந்தோம். காப்பிக்குப் பறக்கவில்லை; பத்திரிகை இன்னும் வரவில்லையே என்ற படபடப்பு இல்லை; அலுவலகம் செல்ல பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமே என்ற பரபரப்பும் இல்லை. நிதானமான, நிம்மதியான நடை. விழித்தெழுந்ததும், வயிற்றுப் பிழைப்புக்காக அல்லற்படத் தொடங்கும் நம் வியாபார உலகத்திற்கும், இன்ப மயமான இந்த இமாலய உலகத்திற்கும் இடையேதான் எத்தனை பெரிய இடைவெளி!

அதோ, அந்த வெண்மேகக் கூட்டத்தைப் பாருங்கள். இரவெல்லாம் மலைமுகட்டில் படுத்து உறங்கிவிட்டு, அது மெள்ள மெள்ளக் கீழிறங்கி வரும் அழகைச் சற்று ரசியுங்கள். கங்காதேவியிடம் ஏதோ குசலம் விசாரிப்பது போல், அதன் மீது சற்று நேரம் அப்படியே தங்குகிறது. பின்னர் அதனுடன் ஐக்கியமாகி விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டது போல், அதன் மீது படிந்து, கலந்து விடுகிறது.

இதோ, இந்த மலை உச்சியைப் பாருங்கள். அங்கு, பத்துப் பதினைந்து வீடுகள். அது ஒரு சிறு கிராமம். அங்குள்ளவர்கள் அத்தனை பேரும் பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். மலைச் சரிவைப் பண்படுத்தி, வயல்களாக்கிச் சாகுபடி செய்கிறார்கள். அடுக்கடுக்காக சீரான படிக்கட்டுக்களாகச் செதுக்கி வைத்து அவர்கள் அங்கு பயிரிட்டிருப்பது, அவர்களது உழைப்புத் திறனுக்கும் கலாரசனைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். நெல், கோதுமை, கேழ்வரகு, சோளம், பயறு எல்லாம் பயிரிடுகிறார்கள். காய்கறி வகைகளும் அங்கு உற்பத்தியாகின்றன.



நாங்கள் நடந்து சென்ற பாதையும் மலைமீது சாகுபடியும்

மலை மீதுள்ள கிராமங்களைத் தவிர, காட்டுக்குள்ளேயும் மலையடிவாரத்திலும் சிறு சிறு குடில்களை அமைத்துக் கொண்டு மலைஜாதியினர் வசிக்கின்றனர். ஓர் இடத்தில் கௌளிகாளை ஊதப்பட்டதும் அச் சத்தத்தைக் கேட்டு, கள்ளங்கபடமற்ற மலைஜாதிப் பெண்மணிகள் ஓடி வந்தனர். அத்தனை பேர் கையிலும் ஏதோ ஒரு மலர் இருந்தது. அவர்களைக் கண்டு ஸ்ரீ காமகோடி பீடாதிபதி சற்று நின்றார். 'இந்தக் கிராமத்தின் பெயர் என்ன?' என்று இந்தியில் கேட்டார். ஒரு பெண்மணி ஏதோ ஒரு பெயரைக் கூறினாள். பின்னர், கண்களில் மகிழ்ச்சி பொங்க நாணத்துடன் சற்று ஒதுங்கி நின்ற பெண்மணிகள் எல்லோரும் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, தங்கள் கையில் கொண்டு வந்திருந்த மலர்களை சுவாமிகளின் திருவடிகளில் சமர்ப்பித்தனர். தாங்கள் தரிசித்த சுவாமிகள் யார், அவர் எங்கிருந்து வந்திருக்கிறார் என்ற விவரங்களெல்லாம் அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், ஒரு சந்நியாசி பாத யாத்திரையாகப் பத்ரிநாராயணரின் தரிசனத்திற்குச் செல்கிறார்; தங்கள் கிராமத்தைக் கடந்து செல்லும் போது, அவருக்கு மரியாதை செலுத்தி, அவரது ஆசியைப் பெற வேண்டும்; அவ்வளவுதான். இந்த இயல்பான பக்தி உணர்வு இப் பாரத மண்ணுக்கே உரியது. மலையானாலும், காடானாலும், பாலைவனமானாலும், நாகரிக உலகிலிருந்து எத்தனைதான் ஒதுங்கி வாழ்ந்தாலும், படிக்காத பாமரர்களானாலும், தங்கள் எல்லைக்கு வரும் துறவிகளை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதும், தீர்த்த யாத்திரை செல்பவர்களை அன்புடன் அழைத்து விருந்தோம்புவதும் இப்புண்ணிய பூமியில் வாழையடி வாழையாகத் தொடர்ந்து வரும் திருத்தொண்டுகளாகும்.

நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். அடுத்த 'காம்ப்' ஸக்னிதார் என்ற இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது கடியாலாவிலிருந்து மொத்தம் பதின்மூன்று கிலோமீட்டர். நாங்கள் எட்டு கிலோமீட்டர் வந்து விட்டோம். அப்போது வெய்யில் சற்று உறைக்கத் தொடங்கியது.

நாங்கள் சென்ற பாதை கரடு முரடாக இருந்தது. மாரி காலத் தாக்குதலால், ஆங்காங்கே நிலம் அரிக்கப்பட்டிருந்தது. சின்னஞ்சிறு கற்களும் ஜல்லிகளும் காலைக் குத்தின. வெய்யில் ஏற ஏற, எங்கள் மலையேற்றம் கடினமாகிக் கொண்டிருந்தது.

நாங்களெல்லோரும் காலணிகள் அணிந்து கொண்டிருந்தோம். ஆனால், எதுவுமே அணியாத சுவாமிகளோ, சிரமத்தைச் சிறிதும் வெளிக்காட்டாமல் வேகமாக நடந்து வந்தார். அவரது நடைக்கு எங்களால் ஈடு கொடுக்க முடியவில்லை.

அவரது பாதங்களைப் பார்த்தேன். அது புண்ணாகியிருந்தது. அங்கங்கே சிறிது ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, சுவாமிகள் 'தண்டி'யில் ஏறிக் கொண்டார். ஆனால், அதில் அவரால் சௌகரியமாக உட்கார முடியவில்லை. ரொம்பவும் கிக்கிடமாக இருந்தது. அதில் வெகு நேரம் கால்களை மடக்கிக் கொண்டு உட்காருவது சிரமம்தான். இருந்தும், சுவாமிகள் சற்றும் முகத்தைச் சுளிக்காமல் சிரித்தபடி பேசிக்கொண்டே வந்தார்.

பேசாதபோது, நாங்கள் 'ஹர ஹர சங்கர' 'ஜய ஜய சங்கர' 'காமகோடி சங்கர' 'காஞ்சி சங்கர' 'காலடி சங்கர' என்று கோஷமிட்டுக் கொண்டு நடப்பது வழக்கம். இதை வேடிக்கையாகக் கேட்டு ரசித்துக் கொண்டு வந்த தண்டி ஆட்கள், எங்களுடன் சேர்ந்து சொல்லத் தொடங்கினார்கள். ஆனால், சரியாக உச்சரிக்க அவர்கள் திணறவே, 'கேதாரி சங்கர' என்று புதிதாக ஒன்றைக் கற்றுத் தந்தோம். அது அவர்களுக்கு நன்றாகப் புரிந்தது. முழு உற்சாகத்துடனும் நல்ல உச்சரிப்புடனும் உல்லாசமாகக் கோஷித்துக் கொண்டு வந்தார்கள். அப்பகுதியில் பத்ரிநாத்தும் கேதார்நாத்தும் மந்திரச் சொற்களாக இருக்கின்றன.

ஒன்பது மணிக்கு ஸக்னிதார் வந்து சேர்ந்தோம். கங்கையிலிருந்து நாங்கள் வெகு தொலைவு விலகி வந்து விட்டிருந்தோம். நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வலப்புறமிருந்த ஒரு பள்ளத்தாக்கில், ஒரு சிறு குளம் போல் தெரிந்தும் தெரியாமலும் கங்கை காட்சியளித்தது. எத்தனை உயரம் ஏறி வந்திருக்கிறோம் என்பதை அப்போதுதான் நாங்கள் உணர்ந்தோம்.

பாத யாத்திரை



எதிரில் ஓர் உயர்ந்த மலே. அதன் கழுத்தில் மாலே அணிவித்தது போல் பாதை வளைந்து வளைந்து சென்றது. அதில் லாரிகளும், பஸ்களும் சென்ற போது நம் வீடுகளில் கொலு விளையாட்டைக் காண்பது போலிருந்தது.


மாலே நான்கு மணிக்கு அந்தப் பாதையில் நாங்கள் நடந்து கொண்டிருந் தோம். சுவாமிகளும் மற்றவர்களும் முன்னே சென்று விட்டார்கள். நானும், புகைப்படக்காரரும் சாவகாசமாகப் பின்னுல் நடந்து சென்றேம். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும், ஒரு ரெவின்யூ அதிகாரியும் எங்களுடன் வந்தார்கள். கர்வாலிகள் என்று அழைக்கப்படும் அப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கை முறை களைப் பற்றி அவர்களிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டோம். வழியில் பள்ளிகளிலிருந்து திரும்பும் சிறுவர் சிறுமியரைக் கண்டோம். அவர்கள் இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள பள்ளிக்குச் சென்றுவிட்டு வருகிருர்களாம்.

எட்டு கிலோமீட்டர் நடந்து, **'போங்கதர்'** என்ற இடத்தை அடைந்தோம். பூஜையை அங்கு முடித்துக் கொண்டு, இரவு தங்கிவிட்டு, வழக்கப்படி விடியற்காலே பயணம் தொடரும்.

பாதை ஓரத்தில் இருந்த ஒரு சிறிய கருங்கல் மேடையின் மீது சுவாமிகள் ஒய்வாக அமர்ந்து, உடன் வரும் ராணுவ அதிகாரிகளிடம் பயணத் திட்டங்களைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். அப்போது, வேகமாக வந்த ஒரு ராணுவ ஜீப் சற்றுத் தொலேவிலேயே நின்றது. அதிலிருந்து ஒருவர் அவசர அவசரமாக இறங்கி பூட்ஸைக் கழற்றி, தகர டின்னில் இருந்த நீரால் கை, கால்களைக் கழுவிக் கொண்டு, சுவாமிகளின் அருகில் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். அவர் ஜோஷி மடம் என்ற ஊரிலிருந்து வரும் ஓர் உயர் ராணுவ அதிகாரி என்றும், சம்ஸ்கிருதத்திலும், முக்கியமாக பகவத் கீதையிலும் நிரம்ப ஞானம் பெற்றவரென்றும் பின்னர்தான் கேள்விப்பட்டேன்.

இரண்டு நாள் பயணத்தின் போது நாங்கள் சில குக்கிராமங்களைக் கடந்து வந்தோமே தவிர, ஒரு சிற்றூரைக்கூடக் காண முடியவில்லே. திட்டப்படி மறுநாள் காலேயில் **தேவப்பிரயாகை** என்ற ஊருக்குச் செல்லப் போகிறேம். பத்ரிநாத் யாத்திரையின் போது நாம் காணப்போகும் முதல் தலம் மட்டுமல்ல அது; முக்கியமான தலமுமாகும்.

'தண்டி' யாத்திரை



ஸ்ரீமடம் இரவு முகாமிட்டிருந்த 'போங்கதர்' என்ற இடத்திலிருந்து தேவப்பிரயாகை பதினேரு கிலோமீட்டர்தான். எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று: 'அன்று இரவே நாம் தேவப்பிரயாகை சென்று விட்டால், அதிகாலையிலேயே எழுந்து சங்கமத்தில் ஸ்நானம் செய்து, பார்க்க வேண்டிய இடங்களை யெல்லாம் பார்த்து விடலாமே. அது மட்டுமின்றி, அப் புனிதத் தலத்தில் ஓர் இரவு கழித்த புண்ணியமும் கிடைக்குமே.'

ஸ்ரீநிவாசனும் நானும் ஒரு ராணுவ லாரியில் ஏறிக்கொண்டு ஏழு மணிக்கெல்லாம் தேவப்பிரயாகைக்கு வந்து சேர்ந்தோம். இமாலயத்தில் இரவு வேளையில் அச்சமில்லாமல் நடந்து விடலாம். ஆனல் பஸ்ஸிலோ, லாரியிலோ போகும்போதுதான் பயமாக இருக்கிறது. இருட்டிய பிறகு அப்பாதையில் வாகனங்களின் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தாலும், ராணுவ லாரிகளும், ஜீப்புகளும் தாராளமாகப் போய்க் கொண்டிருக்கின்றன. அவ் வழி முழுவதும் அந்த டிரைவர்களுக்குத் தண்ணீர்பட்டபாடு. ஒவ்வொரு திருப்பமும், ஒவ்வொரு பள்ளமும், ஒவ்வொரு மேடும் அவர்களுக்கு அத்துப்படி. சென்னை மவுண்ட் ரோடில் போவது போல், அத்தனை வேகமாக இமய 'மவுண்ட் ரோடில்' போகிருர்கள். புதிதாகப் பயணம் செய்கிறவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். 'கிடுகிடு' பள்ளத்தாக்கையும், அதில் அலறிக் கொண்டு ஓடும் நதியையும் பார்த்து விட்டால் கதி கலங்கும்; வயிற்றைக் கலக்கும்.

நாங்கள் சென்றிருந்த போது எதிரில் மாடுகளும் ஆடுகளும் மந்தை மந்தையாக வந்து கொண்டிருந்தன. மாடு மேய்ப்பவர்கள் அந்தக் குறுகிய பாதையில் அவற்றைச் சாமர்த்தியமாக ஒதுக்கி, லாரிக்கு வழிவிட்டனர். அவர்களெல்லாரும் பனிக் காலத்தின் கொடுமையிலிருந்து தங்கள் செல்வங்களைக் காப்பாற்றுவதற்காக மலையிலிருந்து இறங்கி, சமவெளிக்கு வந்து கொண்டிருப்பவர்கள். இரவு ஆனதும், பாதையிலேயே கூடாரம் அடித்து, சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு, உறங்கிவிட்டு, விடிந்ததும் தங்கள் பயணத்தைத் தொடருகிருர்கள். பனிக்காலம் முடிந்ததும் மீண்டும் அவற்றை மலைக்கு ஓட்டிக் கொண்டு போய்விடுகிருர்கள். நாங்கள் சென்ற பாதை முழுவதும் இந்தக் காட்சிக்குக் குறைவே இல்லை.

தேவப்பிரயாகையில் வந்து இறங்கியதும் ரகுநாத் பிரசாத் என்பவர் எங்களை வரவேற்ருர். எங்களைக் கண்டதும், ''ஸ்ரீகாமகோடி பார்ட்டியா?'' என்று விசாரித்தார். நாங்கள் 'அட்வான்ஸ் பார்ட்டி'யைச் சேர்ந்தவர்கள் என்று எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். மறுநாள் ஸ்ரீமடம் அங்கு முகாமிடுவதற்கான ஏற்பாடுகளை அவர்தான் கவனித்துக் கொள்கிருராம். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. எங்கள் பெட்டி படுக்கைகளைத் தூக்குவதற்கு ஒரு கூலியை ஏற்பாடு செய்துவிட்டு, தன்னைப் பின்தொடர்ந்து வரும்படி கூறி, வேகமாக நடந்தார் திரு பிரசாத். அவருடையது ஒல்லி, ஒடிசலான உருவ அமைப்பு; சுறுசுறுப்பான நடை.

குவித்து வைத்த குப்பை கூளங்களும், பெருகி ஓடிய சாக்கடை நீரும், மூக்கைத் துளைத்த துர்நாற்றமும் நிறைந்த சந்து பொந்துகளில் நுழைந்து சென்ருேம். அது புண்ணியத் தலங்களுக்கே உரிய சாபக்கேடு போலும்!



இமயவெளியில் சற்று இளைப்பாறினோம்....

ஒரு பழைய வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். அங்கு எல்லாமே 'ஹைதர் கால'த்து வீடுகள்தான். உளுத்துப்போன ஒரு மரப் படிக்கட்டில் மிக ஜாக்கிரதையாக ஏறி, எங்கள் அறைக்கு வந்தோம். ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டோம். பேய்க் காற்று வீசியது.

ஏன் வீசாது? அருகில் பாகீரதி ஓடிக் கொண்டிருக்கிறதே! 'ஓ'வென்ற ஓயாத இரைச்சல். குற்றால அருவியின் அருகில் நின்று கொண்டிருப்பது போன்ற ஓர் இதமான உணர்வு.

நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து நூறு கெஜத் தொலைவில் பாகீரதி, அலகநந்தாவுடன் கலக்கும் சங்கமக் கட்டம் இருப்பதாக பிரசாத் கூறினார். அவர் அதைக் கூறியவுடனேயே அங்கு சென்று ஸ்நானம் செய்ய வேண்டும் என்று உள்ளம் துடித்தது. 'தயார்தானா?' என்று ஸ்ரீநிவாசனிடம் கேட்டேன். 'ரெடி' என்று தலையாட்டினார், எள் என்பதற்குள் எண்ணெயாய் இருந்த நண்பர்.

ரகுநாத் பிரசாத் வழி காட்ட, பின்தொடர்ந்தோம். லட்சுமணஜூலா வில் உள்ளது போன்ற, ஆனால் அதைவிடச் சிறியதான ஒரு தொங்கு பாலத் தைக் கடந்து பாகீரதியின் அக்கரைக்குச் சென்றோம். அந்தப் பக்கத்தில் பழைய வீடுகள் இன்னும் நிறைய இருந்தன. பயங்கர வெள்ளம் வந்தால், அங்கு வசிப்பவர்கள் பாடு திண்டாட்டம்தான்.

சங்கமத்திற்கு வந்தோம். எங்கள் இடப்புறத்திலிருந்து அலகநந்தா, நொங்கும் நுரையுமாக ஆர்ப்பரித்துக் கொண்டு ஓடி வந்தது. வலப்புறமிருந்து பாகீரதி கர்ஜித்துக் கொண்டு வந்தது. இரண்டும் எங்கள் கண் எதிரே சங்கமம் ஆகி, கங்கையாக மாறி ஓடிற்று. கையெடுத்துக் கும்பிட்டேன்.

தேவப்பிரயாகைக்கு வடக்கே, நூற்றுமுப்பது மைல்களுக்கு அப்பாலிருக் கும் கங்கோத்ரி என்னும் இடத்திலிருந்து பாகீரதி ஓடிவருகிறது. அதற்குமேல் உள்ள 'கோ முகம்' என்னும் ஐஸ் மலைப் பகுதியிலுள்ள ஒரு குகையிலிருந்து



தேவப்பிரயாகையின் தோற்றம்

அது முதன் முதலாக வெளிவருகிறது. பகீரதனின் பெரு முயற்சியால், அவனது சந்ததியினருக்கு நற்கதி தந்தருள வானுலகிலிருந்து கோபாவேசத்துடன் பாய்ந்து வந்த கங்கையானதால் அதற்கு பாகீரதி கங்கை என்று பெயர் ஏற்பட்டது. பத்ரிகாச்ரமத்துக்கு மேலே, குபேரனின் தலைநகரான அலகாபுரியிலிருந்து அலகநந்தாகங்கை ஓடி வருகிறதாம். அப் புண்ணிய தீர்த்தம் விஷ்ணு பாதத்திலிருந்து பெருகி வருவதாகவும் நம்பப்படுகிறது.

சிவனது சிரசிலிருந்து பெருகிவரும் பாகீரதியும், விஷ்ணு பாதத்திலிருந்து பெருகிவரும் அலகநந்தாவும் சங்கமம் ஆகும் இடத்தில் நாங்கள் நின்றுகொண்டிருந்தோம். அது தத்துவங்களின் சங்கமம்; ஒருமைப்பாட்டின் சின்னம். ஓர் அத்வைத பீடம். ஸ்ரீஆதிசங்கரர் நிறுவிய அத்வைத பீடங்களில் ஒன்றான ஸ்ரீகாமகோடி பீடத்தின் அதிபதி, நாளைக்கு இந்தச் சங்கமத்தில் ஸ்நானம் செய்து ஜபம் செய்யப் போகிறார். அந்தக் காட்சியைக் கற்பனையில் கண்டபோதே மெய் சிலிர்த்தது.

'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும்' என்பது போல், புண்ணிய தீர்த்தங்களைக் கண்ட உடனேயே ஸ்நானம் செய்துவிட வேண்டும். அதிலும் சங்கமங்களில் ஸ்நானம் செய்யும் வாய்ப்பை நழுவ விடவே கூடாது. எந்தச் சுத்தமான நீரிலும் உடல் அழுக்கைப் போக்கிக் கொண்டுவிடலாம். ஆனால், உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, ஆத்ம லாபம் பெறுவதற்குப் புண்ணிய தீர்த்தங்கள் ஒன்றே கதி.

ரகுநாத் பிரசாத், 'ஜாக்கிரதை', 'ஜாக்கிரதை' என்று எச்சரித்துக் கொண்டிருக்க, நாங்கள் இறங்கி சங்கமத்தில் ஸ்நானம் செய்தோம். இங்கும், ஹரித்துவாரத்திலுள்ளது போன்றே இரும்புச் சங்கிலிகள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. அதைப் பிடித்துக் கொண்டுதான் ஸ்நானம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அலைக்கரங்கள் நம்மைப் பற்றியிழுத்துக் கண்காணாத இடத்திற்குக் கொண்டு போய்விடும்!

இரண்டு நாட்கள் பயணத்தின் அலுப்பும் அசதியும் ஒரு நொடியில் பறந்து போக, பாகீரதி தாலாட்டுப் பாட, அன்று இரவு நாங்கள் பச்சிளங் குழந்தைகள் போல் உலகமே தெரியாமல் உறங்கினோம்.


விடியற் காலையிலேயே விழிப்பு வந்துவிட்டது. எழுந்து பால்கனிக்கு வந்து நின்றேன். எங்களுக்கு முன் விழித்துக் கொண்டுவிட்ட இயற்கையன்னை, எழிற்கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்!

பாறைகளுக்கிடையே பாய்ந்து வரும் பாகீரதியை, அரச மரத்தில் அமர்ந் திருந்த பறவையினங்கள் குதூகலப் பாட்டுப் பாடி வரவேற்றன. வழிநெடுகிலும் கருங்கல் பாறைகளில் முட்டி மோதி, உடலுறுப்புக்களிலெல் லாம் ஊமைக்காயம் ஏற்பட்ட குத்து வலியைத் தாள முடியாமல், தன் குறையை அலகநந்தாவிடம் கூறி ஒரு குரல் அழுது தீர்த்துவிடுவது என்ற ஆதங்கத்துடன் உரக்க முனகிக் கொண்டு பாகீரதி வேகமாக ஓடி வருகிறாள், பாவம்! அதே மனக்குறையுடன் நூற்றைம்பது மைல் தொலைவிலிருந்து ஓடிவரும் அலகநந்தா, பாகீரதியைச் சந்தித்ததும், 'ஓ'வென்று அலறுகிறது. அந்தத் துயரப் பேரிரைச்சலின் ஒலிதான் இங்கு கேட்கிறதோ! அல்லது, 'ஓடிவரும் பாதையில் நாம் எத்தனைதான் சிரமப்பட்டாலும், தெய்வ சம்பந்தம் ஏற்பட்ட காரணத்தால் நாம் ஒருங்கிணைந்து, புனித கங்கையாகப் பாய்ந்து, பாரத மக்களை வாழ்விக்கும் பாக்கியம் பெற்றோமே' என்ற ஆனந்த ஆரவாரமாக இருக்குமோ அந்தச் சப்தம்!

அப்போது ரகுநாத பிரசாத் வந்து, சுவாமிகள் ஊருக்கு வந்து சேர்ந்து விட்ட செய்தியைக் கூறினார். நாங்களும் சற்று சுறுசுறுப்பானோம்.

அந்தக் காலத்தில் பத்ரிநாத் செல்லும் யாத்திரிகர்கள் ரிஷிகேசத்தி லிருந்து நாற்பத்துநான்கு மைல் தொலைவிலுள்ள தேவப்பிரயாகை வரையில் தான் பஸ்ஸில் பயணம் செய்ய முடியும். அதற்குமுன், ரிஷிகேசத்தி லிருந்து முழுவதும் கால்நடையாகத்தான் செல்ல வேண்டும். நாற்பது வருடங் களுக்கு முன் ஜி. கே. பலிஜா என்பவர் பத்ரி யாத்திரை சென்றுவிட்டுத்

ஸ்ரீ ரகுநாத சுவாமி ஆலயத்திற்குச் செல்லும் வழி



திரும்பியதும் எழுதிய ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அதில் தேவப்பிரயாகையைப் பற்றிக் காணும் குறிப்பைப் பார்ப்போம்:

தேவப்பிரயாகை ஒரு பெரிய கிராமம். பத்ரிநாராயணன் கோயிலில் வேலை செய்யும் பிராமண சிப்பந்திகளும், பண்டாக்கள் எனப்படும் பிராமணப் புரோகிதர்களும் இந்தக் கிராமத்தில் வசிக்கிறார்கள். இவர்கள் இவ்விடமிருந்தே பிரயாணிகளை வசப்படுத்திக் கொண்டு அவர்களைத் தொடர்ந்தே பத்ரி செல்கிறார்கள். இவ்விடம் சத்திரங்களும் கடைகளும் உண்டு. அலகநந்தா கங்கையில் இறங்கி ஸ்நானம் செய்யலாம். சங்கமத்தில் ஸ்நானம் செய்து பிண்டங்கள் விடுகிறார்கள். இந்த ஊர் ஹரித்துவாரத்திலிருந்து 58 மைல் தூரத்திலிருக்கிறது. பிரயாணிகள் மலை மேல் பிரயாணம் செய்யும்போது, மலைக்காற்றும், ஜலமும் அவர்களுக்குப் பிடிபடாவிட்டால், இவ்வூர் சேருவதற்கு முன்பே அவர்கள் காயலா அடைவார்கள். முக்கியமாக வயிற்றுக் கடுப்பும், ஜுரமும் காணும். இவ்வூர் சேரும் பொழுது தேகம் சௌகரியமாய் இருந்தால் முன்னுக்கு யாத்திரை போகலாம். மலை ஏறும் பொழுது வழியில் வியாதியாகி இவ்விடம் சேர்ந்த ஒரு வாரத்திற்குள் அவர்களுக்கு வியாதி சுகப்படாமல் போனால் அநேக பிரயாணிகள் தங்கள் ஊருக்கு இவ்விடமிருந்தே திரும்பி விடுவார்கள். அப்படித் திரும்புவதே உத்தமம். தேவப்பிரயாகை தப்பி சுகமாய் முன்னேறினால் கண்டிப்பாய் பத்ரி தரிசனம் செய்து திரும்பலாம்.

இதைப் படித்த போது, அந்தக் காலத்தில் அத்தனை சிரமப்பட்டுக் கொண்டு உயிரைப் பணயம் வைத்து யாத்திரை சென்று திரும்பியவர்களுக்குக் கிடைத்த புண்ணியம், நம்மைப் போல் சௌகரியமாக, எல்லா வசதிகளோடும் பத்ரி நாராயணர் கோயில் வரையில் காரில் சென்று வருகிறவர்களுக்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் என்னுள் எழுந்தது.

ரகுநாத் பிரசாத் சங்கல்பம் சொல்ல, மீண்டும் ஒருமுறை சங்கமத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, ஐம்பது படிகளேறி, அருகிலிருக்கும் ரகுநாத சுவாமி ஆலயத்திற்குச் சென்றோம்.

தேவப்பிரயாகை, *108* ஸ்ரீவைஷ்ணவ திவ்விய தேசங்களில் ஒன்று என்றும், இங்கு பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்திருக்கிறார் என்றும், இதைக் **'கண்டம் என்னும் கடிநகர்'** என்று அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் ரகுநாத் பிரசாத் கூறிக் கொண்டு வந்தார்.

நான் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

''என்ன, வடநாட்டுக்காரன் இதையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறானே என்று திகைக்கிறீர்களா? எங்கள் முன்னோர்கள் காஞ்சிபுரத்திலிருந்து இங்கு வந்து குடியேறிய வைஷ்ணவர்கள். தென்னாட்டிலிருந்து பத்ரி தரிசனத்திற்கு வரும் பயணிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பதையே எங்கள் பரம்பரைக் கடமையாகக் கொண்டிருக்கிறோம். நான் ஒரு அட்வொகேட். தொழிலுடன் இந்தக் கடமைகளையும் கவனித்துக் கொண்டு வருகிறேன்'' என்றார் பிரசாத்.

என் ஆச்சரியம் பன்மடங்காயிற்று.

திரும்பிப் பார்த்தேன். ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் தம் புடைசூழ ஸ்நானத்திற்காகச் சங்கமத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

தென் கோடியிலிருக்கும் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வார், இமாலயத்திலுள்ள திவ்விய தேசங்களைத் தரிசிக்க வந்தபோது, தேவப் பிரயாகையின் இயற்கை வனப்பில் மனத்தைப் பறி கொடுத்து, அங்கு உறையும் புருஷோத்தமனின் பக்தியில் கரைந்துருகி, தீந்தமிழ்ப் பாசுரங்களால் பாமாலை சூடியிருக்கிறார். அந்தப் பத்துப் பாசுரங்களை ஓதுபவர்கள், தினமும் திருமாலின் திருவடி தொழுது, அத் திருவடிக்குக் கீழே பாயும் கங்கையில் ஸ்நானம் செய்யும் பலனைப் பெறலாம் என்று பலஸ்ருதியில் கூறியிருக்கிறார்.

ஒவ்வொரு பாசுரத்திலும் முதல் இரண்டு அடிகளில் புருஷோத்தமனின் கீர்த்தியையும், பின்னிரண்டு அடிகளிலே கங்கையின் மகிமையையும் புகழ்ந்து பாடுகிறார்.

இரண்டாவது பாசுரத்தில்,

'நலம்திகழ் சடையான்
முடிக்கொன்றை மலரும்
நாரணன் பாதத்துழாயும்
கலந்து இழிபுனலால்
புகர்படு கங்கை'



ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

என்று பாகீரதி — அலகநந்தா நதிகளின் சங்கமத்தின் தத்துவத்தைக் கவிநயத்துடன் அனுபவிக்கிறார். சிவபெருமானின் சிரசை அலங்கரிக்கும் கொன்றை மலரும் நாராயணமூர்த்தியின் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட துளசியும் அங்கு கலக்கிறதாம். அந்தப் புண்ணியத்தின் பிரவாகம் எழில்மிகு கங்கையாகப் பாய்கிறதாம்.

கங்கையின் வேகத்தைப் பெரியாழ்வார் திருமொழியிலேயே கேட்போம்:

'தடவரை அதிரத் தரணி விண்டு இடியத்
தலைப்பற்றிக் கரைமரம் சாடிக்
கடலினைக் கலங்கக் கடுத்து இழிகங்கை'

அப்பப்பா.. அது என்ன வேகம்! அது என்ன முரட்டுப் பிரவாகம்!

அதன் ஓட்டத்தைக் கண்டு பெரிய பெரிய மலைகளெல்லாம் நடுங்குகின்றனவாம்; பூமியே பிளந்து உள்ளே விழுகிறதாம்; கரையிலுள்ள மரங்களெல்லாம் வேரோடு பெயர்ந்து நீரில் அடித்துக் கொண்டு போகின்றனவாம்; கடலையும் குழம்பச் செய்யும் வேகத்துடன் கங்கை ஓடி வருகிறதாம்.



ஸ்ரீ ரகுநாத சுவாமி ஆலயம்

மற்றொரு பாசுரத்தில் 'கரைபுரை வேள்விப் புகை கமழ் கங்கை' என்று வருணித்து அக்காலத்தில் கங்கைக் கரை முழுதும் யாகம் வளர்த்த தவச்சீலர்கள் மண்டிக் கிடந்த மாட்சியைக் கூறுகிறார்:

'எழுமையும் கூடி ஈண்டிய பாவம்
இறைப் பொழுது அளவினில் எல்லாம்
கழுவிடும் பெருமைக் கங்கை'

என்று கூறி, 'நாம் ஏழேழு பிறவியிலும் சேர்த்துக் கொண்ட பாவங்களை ஒரே நொடியில் அகற்றும் ஆற்றல் கொண்டது கங்கை' என்று மிக உறுதியோடு நமக்கு நம்பிக்கை அளிக்கிறார்.

இத்திருக்கண்ட நகருக்குப் பெரியாழ்வார் வந்த காரணத்தைக் கூறும் வகையில் ஒரு கதை கூறப்படுகிறது:

இங்கு ஒரு சமயம் மழையின்றி மக்கள் தவித்தபோது, மன்னனின் கனவில் ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் தோன்றி, 'பெரியாழ்வாரை இங்கு அழைத்து வந்தால் மழை பெய்யும்' என்று கூறவும், அதன்படியே மன்னன் பிரார்த்திக்க, ஆழ்வார் இங்கு வருகை தந்து பெருமாளை மங்களாசாசனம் செய்தாராம். உடனே பெரும் மழை பெய்து, கங்கைக் கரை புரண்டோடியதாம்.

வைகுண்டத்திலிருந்து புருஷோத்தமனுக்காக இங்கு வந்து சேர்ந்ததால் இந்த ஊர், 'கண்டம்' என அழைக்கப்பட்டதாகவும், கைதொழுபவர்களின் வினைகளையெல்லாம் கண்டிப்பதாலும் இது 'கண்டம்' ஆயிற்று என்றும் கூறப்படுகிறது.

தேவரிஷி சர்மா என்பவர் இங்கு தவமிருந்து முக்தியடைந்ததால் இந்த சங்கமத்திற்குத் 'தேவப்பிரயாகை' என்ற பெயர் தோன்றியதாக ரகுநாத் பிரசாத் விளக்கம் தந்தார்.

பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்த புருஷோத்தமனின் முன் நாம் இப்போது நின்று, அவரைக் கண்குளிரத் தரிசித்துக் கொண்டிருக்கிறோம்.



சங்கமத்தில் ஜபம்

சங்கு சக்கர கதாபாணியான ஸ்ரீ நாராயண மூர்த்தியின் உருவம் ஒரு சாளக்கிராமச் சிலை. அதன்மீது சாத்தப்பட்டுள்ள வெள்ளிக் கவசத்தில் இருக்கும் இரு கைகளிலும் வில்லும் அம்பும் ஏந்தி, தாசரதியாய் அவர் திருக்கோலம் பூண்டிருக்கிறார். ராவணனை வதம் செய்த பாவம் நீங்க, ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி சிவபெருமானைக் குறித்துத் தவமிருந்த தலமாம் அது. எனவே இது ரகுநாதனின் ஆலயமாகச் சிறப்புப் பெற்றுள்ளது.

மூலமூர்த்திக்கு இருபுறமும், சிறிய உருவில் ஸ்ரீதேவி, பூதேவி எழுந்தருளியிருக்கின்றனர். கருவறையில் அன்னபூரணி தேவி குடிகொண்டிருக்கிறாள்.

அக்கருவறையில் ஒரு சிவலிங்கமும் காணப்படுகிறது. அது ஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்று அர்ச்சகர் கூறினார். இமாலயப் பகுதியில் நாராயணமூர்த்தியானாலும் சரி, சிவலிங்கமானாலும் சரி, எல்லாம் ஆதிசங்கரரே பிரதிஷ்டை செய்ததாகக் கூறுகிறார்கள்.


திருச் சந்நிதிக்கு நேரே, பிராகாரத்தில் கருட பகவான் காட்சி தருகிறார். பின்னால் ஆஞ்சநேயர் இருக்கிறார். மண்டபத்தில் ஒரு சுயம்பு கணபதி எழுந்தருளியிருக்கிறார்.

ஸ்ரீ சீதா லட்சுமண ஆஞ்சநேயர் சமேத ஸ்ரீ ராமச்சந்திரன், உற்சவ மூர்த்தியாய்த் திகழ்கிறார். இங்கு ஸ்ரீராமநவமி, வசந்த பஞ்சமி, ஜன்மாஷ்டமி, விஜயதசமி முதலிய திருநாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

கருங்கல்லாலான இந்தக் கோயில் சரிவரப் பராமரிக்கப்படவில்லை. 1803-ம் ஆண்டு, அங்கு ஏற்பட்ட பூகம்பத்தால் கோயிலும், இதர கட்டடங்களும் நிர்மூலமாகி விட்டன. பின்னர், தௌலத் ராவ் ஸிந்தியா என்ற கொடையாளரின் பேருதவியால் இக்கோயில் மீண்டும் எழுப்பப்பட்டது.


ஸ்ரீ ரகுநாத சுவாமி ஆலயத்திலிருந்து இறங்கிவரும் வழியில் இடப்புறம் காசி விச்வேச்வரர் திருச் சந்நிதி இருக்கிறது. அங்கு நந்திகேச்வரரும் பார்வதி தேவியும் எழுந்தருளியிருக்கிறார்கள். வெளிப்புறம் கணபதி வீற்றிருக்கிறார். அங்கு சிவலிங்கங்கள் நிறையப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ காசிவிச்வேச்வரர் ஆலயம்
(தேவப்பிரயாகை)



ஆலய தரிசனம் முடிந்து, நாங்கள் சங்கமக் கட்டத்திற்கு வந்தபோது, ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு, கரையில் அமைதியாக அமர்ந்து ஜபம் செய்து கொண்டிருந்தார். புனிதம் சேர்ந்த மலையும் நீரும் பின்னணியாக அமைய, அப்புனிதர், புராதன காலத்தைக் கண்முன்னே கொண்டு நிறுத்திய அக்காட்சியைத் தரிசித்து நாங்கள் புண்ணியம் பெற்றோம்.

ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் பூஜையை முடித்துக் கொண்டு அன்று மாலை மூன்று மணிக்கு சுவாமிகள் தேவப்பிரயாகையைவிட்டுப் புறப்பட்டார்கள். பதினெட்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள 'பகவான்' என்ற கிராமத்தில் இரவு தங்கிவிட்டு, மறுநாள் ஸ்ரீநகர் நோக்கிப் புறப்படுவதாகத் திட்டம். காஷ்மீரின் தலைநகரோடு ஒரு கணம் நம்மைக் குழப்ப வைக்கும் இந்த ஸ்ரீநகர், பத்ரிநாத் செல்லும் பாதையில், தேவப்பிரயாகைக்கும் ருத்ரப்பிரயாகைக்கும் இடையேயுள்ள ஒரு பெரிய ஊர்.



ஸ்ரீ கமலேச்வர் ஆலயம் (ஸ்ரீநகர்)

4

எங்கள் முதல் திட்டப்படி ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் வரை ஸ்ரீ மடத்துடனேயே பாத யாத்திரையாகச் செல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால், குருவருள் வேறுவிதமாக அமைந்திருந்தது பின்னர்தான் புரிந்தது. தேவப்பிரயாகைக்கு முதல் இரவே வந்து சேர்ந்ததால் கிட்டிய பலனையும் வாய்ப்புக்களையும் கண்டபோது, எல்லா ஊர்களுக்கும் ஒருநாள் முன்னதாகவே செல்வதால் பல இடங்களைக் காணவும், பல அரிய செய்திகளைச் சேகரிக்கவும் முடியும் என்ற எண்ணம் வேரூன்றியது.

அதனால் எங்கள் திட்டத்தை மாற்றி அமைத்துக் கொண்டோம்.

சுவாமிகள் முன்னால் நடந்து சென்றார். நானும் ஸ்ரீநிவாசனும் பின்னால் பஸ்ஸில் சென்றோம். எங்களுக்கு இமாலயப் பாதையில் பஸ் பயணம் ஒரு புது அனுபவமாக இருந்தது. ஒரே நெரிசல். அவர்கள் இஷ்டத்திற்கு ஆட்களைத் திணிக்கிறார்கள். அழுக்கு ஆடைகளின் துர்நாற்றமும், மூச்சை அடைக்கும் சுருட்டுப் புகையும், பஸ்ஸின் குலுக்கலும் சேர்ந்து வயிற்றைக் குமட்டுகிறது.

எங்கள் பஸ் அலகநந்தாவின் கரை ஒரமாகப் போகிறது. இடப்புறமாகப் பாகிரதியின் கரையோடு நாம் சென்றால் கங்கோத்ரியையும், யமுனோத்ரியையும் அடையலாம்.

பத்ரி விஷால் கி — ஜெய்!
கங்கா மாய் கி—ஜெய்!

பஸ்ஸில் உள்ளவர்கள் குரல் கொடுக்கிறார்கள். கிராமத்துப் பெண்மணிகள் நாட்டுப் பாடலின் மெட்டில் கங்கையின் பெருமையைப் பாடுகிறார்கள். ஓர் அட்சரம் கூடப் புரியவில்லை. ஆனால், அவர்களது பக்தி பாவம் நம்மையும் பற்றிக் கொள்கிறது.

பெண்மணிகளின் பாட்டு அடங்குகிறது. அதற்காகக் காத்துக் கொண்டிருந்தது போல், ஒரு முதியவர் உச்ச ஸ்தாயியில் நீட்டி முழக்கிக் கொண்டு, உணர்ச்சியுடன் பாடத் தொடங்குகிறார். சுற்றிலும் இத்தனை பேர் அமர்ந்திருக்கிறார்களே என்று அணுவளவுகூட அவர் கூச்சப்படுவதாகத் தெரியவில்லை. அவருக்கு வேறு எதைப் பற்றியும் அக்கறையில்லை. அவருக்கு அன்னை கங்கையைத் தெரியும். அவளால்தான் வாழ்கிறோம் என்றும் அவள் புகழ் பாடுவதற்கென்றே நா படைக்கப்பட்டிருக்கிறது என்றும் நம்புகிறார். பிறந்தது முதல், பெற்றோர் அவருக்கு ஊட்டிய நம்பிக்கை அது. பாட வேண்டும் என்று நினைத்தோ, இங்கு பாடலாமா கூடாதா என்று தனக்குள் தீர்மானித்தோ, சுருதி சேர்கிறதா இல்லையா என்று கவலைப்பட்டோ பாடும் பாட்டல்ல அது. ரத்தத்தில் ஊறிய பக்தியுணர்வு, உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்ச்சி வேகம், உயிருடன் கலந்துவிட்ட உயரிய பண்பு எல்லாம் அவரை உந்துகின்றன. தன்வயமிழந்து, தன்மயமாகிப் பாடி, தன் ஆத்ம தாகத்தைத் தணித்துக் கொள்கிறார். அது கங்கையைப் போல் பிரவகிக்கிறது. பக்தியற்றவர்களும் அதன் குளுமையில் மூழ்கி எழுகிறார்கள்.

நாங்கள் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறோம். வலப்புறம் காணப்படும் அலகநந்தா கீழே கீழே போய்க் கொண்டிருக்கிறாள். தேவப்பிரயாகையில் அட்டகாசமாக ஆர்ப்பரித்து உறுமிய அலகநந்தா, இப்போது சாதுவாக, பரம சாதுவாக, மெள்ள ஊர்ந்து ஓர் ஓடையைப் போல் ஓடிக் கொண்டிருந்தாள். நம் எண்ணங்கள் உயர உயர, கடும் சோதனைகளெல்லாம் நமக்கு மிகச் சாதாரணமாகத் தோற்றமளிக்கவில்லையா, அது போல்.


ஸ்ரீ கமலேச்வர் ஆலயத்திலுள்ள
அபூர்வ கணபதி




'பகவான்' என்ற இடத்தில் இறங்கி, முக்கால் மணி நேரம் காத்திருந்தோம். சுவாமிகள் வந்து சேர்ந்தார். அன்று இரவு அவர் அங்கு தங்கிவிட்டு, மறுநாள் ஸ்ரீநகர் வந்து சேரப் போகிறார்.

நாங்கள் அரை மைல் நடந்து சென்று, அலகநந்தாவில் ஆனந்தமாக ஸ்நானம் செய்துவிட்டு, ஒரு ராணுவ லாரியில் ஏறி, இரவு ஸ்ரீநகர் வந்து சேர்ந்தோம்.

ஸ்ரீநகர், தேவப்பிரயாகையிலிருந்து இருபத்துநான்கு மைல் தொலைவில் இருக்கிறது. இருபத்தோராவது மைலில் கீர்த்திநகர் என்ற சிற்றூர் வருகிறது.



ஸ்ரீ கேசவராய மடம் (ஸ்ரீநகர்)



ஸ்ரீ கம்சமர்த்தனி ஆலயம்

மகாராஜா கீர்த்தி ஷா என்பவர் அமைத்ததாம் அது. அங்கிருந்து அலகநந்தா மீதுள்ள பாலத்தைக் கடந்து, ஸ்ரீநகருக்குள் செல்ல வேண்டும்.

பெயருக்கேற்றவாறு ஸ்ரீநகர், லட்சுமிகரமாக விளங்குகிறது. பத்ரிப் பாதையிலுள்ள பெரிய நகரம் அது. நவீன வசதிகளோடு கூடிய மலைவாசஸ் தலம். ஒரு வசதியுமற்ற தேவப்பிரயாகையைப் பார்த்த கண்ணுக்கு இது சொர்க்கமாக இருக்கிறது. தங்கும் விடுதிகளும், சிற்றுண்டிச்சாலைகளும், வாகன வசதிகளும் நிறைந்து இருக்கின்றன.

அலகநந்தாவின் இந்தப் பள்ளத்தாக்கு பார்க்க மிக ரம்மியமாக இருக்கிறது. ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீசக்கர வடிவில் இந்த ஊரை அமைத்ததால் இதற்கு அந்தப் பெயர் ஏற்பட்டதாகக் கூறுகிறார்கள்.

இங்கு அலகநந்தாவின் மத்தியிலுள்ள ஒரு திட்டில் ஒரு காளி யந்த்ரம் இருந்ததாகவும்,அது தினமும் ஒருவரைப் பலி வாங்கிக்கொண்டிருந்ததாகவும், ஸ்ரீ ஆதிசங்கரர் இங்கு வந்தபோது, ஊர் மக்கள் அவரிடம் இதைப் பற்றி முறையிட, சங்கர பகவான் அந்தக் கருங்கல்லை எடுத்துத் தலைகீழாக நட்டு வைத்து விட்டதாகவும், அதற்குப் பிறகு நரபலியிடும் பழக்கம் நின்றுவிட்ட தாகவும் இங்கு ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது. அந்த யந்த்ரம் நதியில் மூழ்கியிருப்பதாகவும், ஒரு சமயம் நீர் வற்றியபோது தாம் அந்தக் கல்லைப் பார்த்ததாகவும் ஒரு வயோதிகர் என்னிடம் கூறினார்.

இங்கு இருக்கும் கமலேச்வர் ஆலயம் மகிமை வாய்ந்தது. ஸ்ரீமகாவிஷ்ணு இங்கு சிவபெருமானை ஆயிரம் 'பிரும்ம கமலம்' என்ற புஷ்பங்களால் அர்ச்சனை செய்ய முடிவு செய்தாராம். தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பது மலர்களை அர்ச்சித்தாகி விட்டது. கடைசி மலரைக் காணவில்லை. அவரைச் சோதிப்பதற்காக சிவன், அதை எடுத்து ஒளித்து வைத்து விட்டாராம். திருமால் சற்றும் தயங்காமல் தன் கண் மலரை எடுத்துக் கடைசித் தாமரை மலராக அதை சிவபெருமானுக்கு அர்ச்சித்தாராம்.

ஸ்ரீ கமலேச்வர் ஆலயத்தின் கருவறையில் இருப்பது சுயம்புலிங்கம். அங்கு பார்வதிதேவி, கணபதி, நந்திகேச்வரர் முதலியோரும் இருக்கிறார்கள்.



மேர்லாராமின் ஓவியம்

மேற்குப் பிராகாரத்தில் அன்னபூரணி தேவியின் திருச்சந்நிதி இருக்கிறது. அந்த அறையில் ஒரு ஸ்ரீசக்கரமும் காணப்படுகிறது. அதைத் தவிர மகாவித்யா, கங்கா மாதா, கௌரிசங்கர், ஸ்ரீராஜராஜேஸ்வரி உருவச் சிலைகளும் அங்கே இருக்கின்றன.

கிழக்குப் பிராகாரத்தில் ஓர் அபூர்வமான கணபதி கற்சிலையைப் பார்த்தேன். அது மிகவும் புராதனமானது. கால ஓட்டத்தில் கரைந்து போயிருக்கிறது. தியானக் கோலத்திலிருக்கும் அந்தக் கணபதி, பத்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார். நான்கு கரங்கள். மேலிரு கரங்களிலும் பாசமும் மோதகமும் இருக்கின்றன. கீழிரு கரங்களில் உருத்திராட்ச மாலையும் கமண்டலமும் இருக்கின்றன.

அந்தக் கோயிலில், மரத்தாலான பெரிய நந்தி யொன்று இருக்கிறது. எண்பது வருடங்களுக்கு முன் செய்யப்பட்டதாம். அதற்குப் பித்தளைக் கவசம் போட்டிருக்கிறார்கள். இமாலயப் பகுதிகளில் பெரிய நந்திகளையோ, கவசம் அணிந்த நந்திகளையோ பார்ப்பது அபூர்வத்திலும் அபூர்வம்.

அந்தக் கோயிலில் சிறிய அளவில் நிறையப் பாதங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. விசாரித்தபோது, பெரிய மனிதர்கள் ஸ்ரீநகருக்கு வந்து மரணம் அடைந்தாலோ, அல்லது அவ்வூரிலுள்ள முக்கியமான நபர்கள் இயற்கை எய்தினாலோ அவர்களுடைய நினைவாக ஆலயத்தில் அத்தகைய பாதங்கள் செய்து வைக்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருவதாக அறிந்தேன்.

குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் கார்த்திகை மாதத்தில் ஓர் அகல் விளக்கை ஏற்றி, அதைக் கையில் ஏந்தியபடியே மாலை ஆறு மணி முதல் மறுநாள் காலை ஆறு மணி வரையில் கருவறையின் முன்பு நின்றபடியே பிரார்த்தித்துக் கொண்டால், அவர்களுக்கு அடுத்த ஆண்டு நிச்சயம் குழந்தை பிறக்கிறதாம். தனக்குத் தெரிந்த ஏழெட்டுப் பெண்மணிகள் இவ்வாறு விரதம் இருந்து, குழந்தைச் செல்வங்கள் பெற்றிருக்கிறார்கள் என்று எங்கள் வழிகாட்டி கூறினார்.

கமலேச்வர் ஆலயத்திலிருந்து சற்றுத் தொலைவு நடந்து, 'கேசவராய மடம்' என்று அழைக்கப்படும் ஒரு கோயிலுக்கு வந்து சேர்ந்தோம்.

முந்நூற்றைம்பது வருடங்களுக்கு முன் தெற்கிலிருந்து வந்த கேசவராயர் என்பவர் கார்வால் மகாராஜாவின் சபையில் ஆஸ்தான வித்வானாக இருந்தாராம். அவர் கட்டிய கோயிலாம் இது. ஆனால், பழைய கோயிலிலிருந்த சுவாமியை 1894-ம் ஆண்டில் வந்த வெள்ளத்திலிருந்து காப்பாற்றும் பொருட்டு எங்கோ எடுத்துக்கொண்டு போய் விட்டார்களாம். அச்சமயத்தில், பள்ளத்திலிருந்த ஸ்ரீநகர் ஊரே அடித்துக் கொண்டு போய் விட்டதாம். இப்போது இருப்பது புதிய ஊர். இதை மேட்டில் கட்டியிருக்கிறார்கள்.


அப்போது ஓர் அதிசயம் நடந்தது. அலகநந்தாவின் குறுக்கே இரண்டு மலைகள் வளர்ந்து, இயற்கையான அணைக்கட்டுப் போல் நின்றனவாம். அதனால் அங்கு பெரிய நீர்த்தேக்கம் ஏற்பட்டது. எந்த நிமிடத்திலும் மலை கரைந்து, ஊருக்குள் வெள்ளம் பாயலாம் என்று பிரிட்டிஷ் எஞ்சினீயர்கள் எச்சரிக்கை செய்ததால், மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான பகுதிகளுக்குச் சென்று விட்டார்களாம். எஞ்சினீயர்கள் எச்சரித்த மாதிரியே, ஒரு நாள் அந்த மலைப் பாறைகள் கரைந்து போகவே, ஸ்ரீநகர் பகுதி பூராவும் ஒரே வெள்ளக்காடாகி விட்டதாம்.

அநேக வருடங்களாக பாழ் மண்டபமாக இருந்த கேசவராய மடத்தைச் சமீபத்தில் புதுப்பித்து, அங்கு சலவைக் கல்லாலான லட்சுமி நாராயணர் உருவச் சிலையை வைத்திருக்கிறார்கள். பிராகாரத்தில் மிகப் பழைய சிவலிங்கம் ஒன்று இருக்கிறது.

கோயில் மண்டபத்தில் **மோலாராம்** என்பவரின் ஓவியங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன. ***1743-ம்*** ஆண்டு முதல் ***1833-ம்*** ஆண்டு வரை ஸ்ரீநகரில் வாழ்ந்த ஓவிய நிபுணர் அவர். அவர் ஒரு கவியும்கூட. தாம் வரைந்த படங்களுக்குக் கீழே விளக்கவுரையாகக் கவிதைகளைத் தீட்டி வைத்திருக்கிறார். புராண சம்பந்தமான நிகழ்ச்சிகளையே அதிகமாக வரைந்திருக்கிறார் அவர்.

மோலாராமின் எள்ளுப் பேரனை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அவரது பெயர் துவாரகா பிரசாத் தோமர். அவர் ஒரு டாக்டர். மோலாராமின் பல 'ஒரிஜினல்' ஓவியங்களை எடுத்துக் காட்டினார். அவரது ஓவியங்களில் சில அமெரிக்காவில் பாஸ்டன் மியூசியத்தில் வைக்கப்பட்டிருப்பதாகப் பெருமையுடன் கூறினார் தோமர். டில்லி, பம்பாய், கல்கத்தா, அகமதாபாத் முதலிய மியூசியங்களிலும் மோலாராமின் ஓவியங்கள் இருக்கின்றனவென்று கூறிய அவர், நமது அரசு, கார்வால் சமஸ்தானத்தின் தலைமகனான இக்கலைமகனின் பெருமைகளைப் பறைசாற்றவும், அவரது நினைவைப் போற்றவும் முன்வராததைக் குறித்து மிகவும் குறைப்பட்டுக் கொண்டார்.

சங்கர மடம் (ஸ்ரீநகர்)



ஒரு காலத்தில் கார்வால் சமஸ்தானத்தின் தலைநகராகத் திகழ்ந்த ஸ்ரீநகரில், இலக்கியப் படைப்பும், சமய வாழ்வும், கலை ஆர்வமும் தழைத் தோங்கி யிருக்கின்றன. தீவிர ஆராய்ச்சிகள் மேற்கொண்டால் புதைந்து கிடக்கும் அரிய செல்வங்களை வெளிக் கொணரலாம் என்ற எண்ணம் என்னுள் வலுப்பெற்றது.

அலகநந்தாவின் கரையோரத்தில் 'சங்கர மடம்' ஒன்று இருப்பதாகக் கேள்வியுற்று, அதைக் காணச் சென்றேன். ஸ்ரீ ஆதிசங்கரரோடு சம்பந்தப் பட்ட ஸ்ரீநகரில் இருக்கும் சங்கர மடத்தில் அபூர்வ விஷயங்கள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையோடு சென்றேன். அங்கு சென்ற பிறகு, ஸ்ரீ ஆதிசங்கர ருக்கும் அந்த சங்கர மடத்திற்கும் சம்பந்தமே இல்லை என்பது தெரிந்தது.


முந்நூறு வருடங்களுக்கு முன் 'சங்கரதத் தனுவால்' என்பவரால் கட்டப்பட்ட ஒரு சிறு கோயில் அது. அங்கு சங்கரநாராயணரின் சிலை இருந்த தாம். தற்போது ஒன்றுமில்லை.

சற்று மேடான இடத்தில் அமைந்திருக்கும் அந்த பர்ணசாலைக்கு எதிரே நிற்கும்போது,புராண காலத்து மகரிஷி ஒருவரின் ஆச்ரமத்தில் நிற்பதுபோன்ற உணர்வு ஏற்படுகிறது. அரச மரங்களும் ஆலமரங்களும் குடையாய் விரிந்திருக்க, அவற்றில் அமர்ந்திருக்கும் எண்ணற்ற பறவைகள் கொஞ்சு மொழி பேசுகின்றன. 'கிளி கொஞ்சுகிறது' என்பதன் பொருளை அன்றுதான் புரிந்து கொண்டேன். உள்ளம் குதூகலத்தில் துள்ளி, இன்பக் களிப்பில் ஊஞ்சலாக ஆடுகிறது. அருகில் ஓடும் அலகநந்தாவிலிருந்து வீசும் காற்று தெம்மாங்கு பாடுகிறது. மனம் உறக்கத்திலாழ்ந்து, நம்மைத் தியான நிலைக்கு இட்டுச் செல்கிறது. விவகார உலகமே மறந்து, உன்னத அனுபவத்தோடு ஐக்கியமாகி விடுகிறோம். கண நேரம்தான். ஆயுட்காலம் முழுவதும் அங்கு அமர்ந்திருக்க ஆசைதான். இப்பிறவியில் அப்படியொரு வாய்ப்பு எங்கே கிட்டப் போகிறது?

அடுத்து, ஸ்ரீ ஆதிசங்கரர், காளி யந்த்ரத்தைத் தலைகிழாக வைத்து, நரபலியை நிறுத்திய பாறைத் திவைத் தொலைவிலிருந்து தரிசித்தோம். நாங்கள் கேள்வியுற்ற செய்தியை ஸ்ரீகாமகோடி சுவாமிகளிடம் தெரிவிக்கலாம் என்ற நோக்கத்தோடு, ஸ்ரீமடம் இருக்கும் இடத்தைத் தேடிப் புறப்பட்டோம்.

என்ன ஆச்சரியம்! ஸ்ரீயந்த்ரம் இருப்பதாகச் சொல்லப்படும் அந்த இடத்திற்குச் சமீபத்திலேயே, அலகநந்தாவின் கரையிலேயே, ஸ்ரீமடம் முகாமிட்டிருந்த கூடாரங்கள் அடிக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் அங்கு சென்றபோது, ஸ்ரீசந்திரமௌளீஸ்வரர் பூஜை முடிந்து, மங்களாரத்தி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதை சேவித்துவிட்டு, ஸ்ரீ அனந்தானந்த சுவாமிகளிடம் செய்தியைக் கூறி, அதைப் பின்னர் சாவகாசமாகப் புதுப் பெரியவரிடம் தெரியப்படுத்தும்படிக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

அலகநந்தா கரை மேலேயே நடந்தோம். மப்பும் மந்தாரமுமாக இருந்தது. பேய்க் காற்று வீசிக் கொண்டிருந்தது. வழியில் இருந்த லட்சுமிநாராயணர் கோயிலுக்குள் சென்று தரிசித்தோம். மிகப் பழைமையான கோயில் அது.



அலகநந்தாவின் கண்கவர்த் தோற்றம் (ஸ்ரீநகர் பள்ளத்தாக்கு)

சற்று கிழக்கே நடந்து, கம்சமர்த்தனி ஆலயத்திற்கு வந்து சேர்ந்தோம். அது பெரிய கட்டடம் இல்லை. சிறு குடிசை போன்று இருந்தது. ஸ்ரீகிருஷ்ண பகவானின் மாயா சக்தியாக, கம்சனின் உயிரைக் குடித்த தேவி, அக்னி ஜ்வாலையாகக் கீழிறங்கி, அங்கு நித்திய வாசம் செய்கிறாளாம்.

அக்கோயிலில் சிலை யொன்றும் இல்லை. ஒரு குண்டம்—ஒரு பள்ளம் இருக்கிறது. அதற்குத்தான் பூஜையெல்லாம். ஆனால், பூசாரி கண்களைக் கட்டிக்கொண்டுதான் பூஜை செய்கிறார். கண்ணைத் திறந்து கொண்டு பூஜை செய்தாலோ, அல்லது அந்தக் குண்டத்திற்குள் எட்டிப் பார்த்தாலோ கண் அவிந்து விடுமாம். 'என்ன ஆகிறது பார்ப்போமே' என்று திமிரோடு பார்த்த ஓரிருவர் தங்கள் பார்வையை இழந்திருக்கிறார்கள்.

இங்கு உறையும் தேவியின் மாபெரும் சக்தியை உணர்த்தும் வகையில் கோயில் பூசாரி தல புராணக் கதை யொன்று கூறக் கேட்டோம்:

ஒரு காலத்தில், ஒரு சாது இங்கு நிர்வாணமாக அமர்ந்து, அக்னி வளர்த்து வழிபாடு செய்து கொண்டிருந்தார். கையில் கிடைத்த பொருட்களை எல்லாம் அவர் தீயில் போட்டு விடுவார். அந்தப் பயங்கரமான காட்டில் கடுங்குளிரை யும், கொட்டும் மழையையும், கொளுத்தும் வெய்யிலையும் சற்றும் பொருட் படுத்தாது, கர்மமே கண்ணாயிருந்த இந்த சாதுவைக் கண்ட பண்டிதர் ஒருவர், மகாராஜாவிடம் சென்று இவரைப் பற்றி ஆச்சரியத்துடன் கூறவே, அரசன் விலையுயர்ந்த சால்வைகளையும், இதர பொருட்களையும் சாதுவுக்குப் பரிசாகக் கொடுத்து அனுப்பினார். அவற்றைப் பெற்றுக் கொண்ட சாது, எல்லாவற்றை யும் அப்படியே அக்னியில் போட்டு விட்டார். அதைக் கேட்டதும் அரசனுக்குக்

கோபம் உண்டாயிற்று. பண்டிதரை அனுப்பி நாம் அனுப்பிய பொருள்களை யெல்லாம் திருப்பித் தரும்படி சாதுவைக் கேட்கச் சொன்னார். பண்டிதரும் அவ்வாறே கேட்டார். உடனே சாது, தேவியிடம் பிரார்த்தித்தார். அடுத்த கணம், அக்னியில் அந்த சாது போட்ட பொருட்களை யெல்லாம் கொண்டு வந்து கொடுத்து விட்டாள் தேவி. அப்போது ஜன்னல் வழியாகத் தெரிந்த அவள் கையை பண்டிட் பார்த்து விட்டார். உடனே அவருடைய கண் பொட்டையாய் விட்டது. அபசாரம் செய்து விட்டதாகக் கதறியழுது, சாதுவின் காலில் விழுந்து மன்னிக்கும்படி கோரினார். எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு, திரும்பிப் பார்க்காமல் போகும்படி சாது அவரிடம் கூறினார். பண்டிட் அவ்விதமே செய்தார். உடனே அவருக்குப் பார்வை மீண்டது.

கம்சமர்த்தனி கோயிலுக்கு வெளியே ஒரு காளி கோயில் இருக்கிறது. அங்கு சிறு கல் ஒன்றுதான் நட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இன்னும் மிருக பலியிட்டு வருகிறார்கள்.

அலகநந்தா நதியின் அக்கரையில் 'கிள்கிளேச்வரர்' ஆலயம் இருக்கிறது. அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரம் தந்த சிவபெருமான் உறையும் தலம் அது.

இந்த ஆலயங்களைத் தவிர, சுற்றிலும் உள்ள மலைகளின் மீதும் சிறுசிறு கோயில்கள் இருக்கின்றனவென்றும், ஆனால், அவை யெல்லாம் நைவேத்திய பூஜைகள் இல்லாமல், கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன என்றும் அங்கு வசித்து வரும் ஒரு கேரள அன்பர் கூறினார்.

அந்த ஊரில் அவரைத் தெரியாதவர்களே கிடையாது. அவர் ஒரு சங்கம் வைத்து, ஆன்மிக சேவையோடு, சமூகத் தொண்டும் புரிந்து வருகிறார். அவரது பெருமுயற்சியால் அன்று ஸ்ரீநகர்வாசிகள் புதுப் பெரியவருக்கு ஒரு வரவேற்பளித்தார்கள். மாலை மூன்று மணிக்கு முகாமிலிருந்து சுவாமிகளை பாண்டு வாத்தியங்களோடு ஊர்வலமாக அழைத்து வந்து, ஓர் அலங்காரப் பந்தலில் அவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்கள். அதற்கு மிகவும் எளிமையான இந்தியில் தக்கவாறு பதிலளித்துவிட்டு, ருத்ரப் பிரயாக் நோக்கிப் புறப்பட்டார் சுவாமிகள்.



ருத்ரப்பிரயாகை கடைவீதி

5

பதினெட்டாவது கிலோமீட்டரில் உள்ள காளியாஸோர் என்ற இடத்தில் அன்று இரவு காம்ப். ஆனால், அந்த இடத்தில் இறங்காமல் நேரே ருத்ரப்பிரயாகைக்கே போய்விடுவது என்று நானும் புகைப்படக்காரரும் திட்டமிட்டு, ஒரு டாக்சியில் புறப்பட்டுச் சென்றோம். ஆனால், ஏதோ ஒரு சக்தி எங்களை காளியாஸோரில் இறங்க வைத்தது.

வழியில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் எங்கள் டாக்சியில் ஏறிக்கொண்டார். அவர், காளியாஸோரில் ஒரு தேவி கோயில் இருக்கிறது என்றும், அந்தக் காளி ரொம்ப சக்தி வாய்ந்தவள் என்றும் கூறினார்.

''பெரிய கோயிலா?'' என்று கேட்டேன் நான்.

அவர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். அந்தப் பகுதியைச் சேர்ந்தவராயிருந்தும் தான் அதுவரை அந்த தேவியைத் தரிசித்ததில்லை என்று சற்று வெட்கப்பட்டுக் கொண்டே கூறினார். நாங்கள் இறங்கிப் பார்த்தால் தானும் எங்களுடன் வருவதாக அவர் கூறவே, டாக்சியை காளியாஸோரில் நிறுத்தச் சொன்னேன்.



நட்சிண காளி (காளியாஸோர்)

மலைப் பாதையிலிருந்து முந்நூறு, நானூறு அடி கீழே இறங்கிச் சென்றால் அலகநந்தாவின் கரையில் வீற்றிருக்கிறாள் அந்த தேவி. மேலே கூரை யொன்றும் இல்லை. பாறையை யொட்டி, ஒரு மேடையின் மீது அவள் காட்சி யளிக்கிறாள். மார்பு வரையில் உள்ள உருவச்சிலைதான். முகத்தில் சாந்தம் தவழ்கிறது. பக்கத்தில் வேறு உருவங்களும் காணப்படுகின்றன. அருகிலுள்ள ஒரு மண்டபத்தில் சிவலிங்கமும், திரிசூலமும் இருக்கின்றன.

அந்த தேவியை நட்சிண காளி என்கிறார்கள். அவளைப் பற்றிய கதை, கேட்க மிகவும் 'திரில்லிங்'காக இருந்தது.

தென்னாட்டிலிருந்து அங்கு வந்த பட் என்ற அந்தணருக்கு ஆறு பிள்ளைகள், ஒரு பெண். அவர் தம் பெண்ணை தேவியின் அம்சம் என்று அறிந்து, அவளுக்கு சகல மரியாதைகளும் அளித்து வந்தார். அவள் சாப்பிட்ட பிறகுதான் வீட்டிலுள்ள மற்றவர்களுக்குச் சாப்பாடாம். இது மூத்த பிள்ளைக்குக் கோபத்தை மூட்டியது. ஒருநாள் சகோதரிக்கு முன்னதாகவே அவன் சாப்பிட்டு விட்டான். இதனால் கோபம் கொண்ட பெண், எல்லா சகோதரர்களையும் வெட்டி வீழ்த்தினாள். ஒரு சகோதரன், தன் உயிர் பிரியும் முன், தன் சகோதரியைக் கத்தியால் இடுப்போடு இரு துண்டாக வெட்டி விட்டான்.

இடுப்புக்குக் கீழுள்ள பாகம் ருத்ரப்பிரயாகையிலிருந்து கேதார்நாத் செல்லும் பாதையிலிருக்கும் 'காளி மடம்' என்ற இடத்தில் இருக்கிறதாம். இடுப்புக்கு மேலே உள்ள பாகம் அலகநந்தாவில் அடித்துக் கொண்டு வந்து, காளியாஸோரில் தங்கி விட்டதாம்.

அங்கிருந்து புறப்பட்டு இரவு சுமார் ஏழரை மணிக்கு நாங்கள் ருத்ரப்பிரயாகைக்கு வந்து சேர்ந்தோம்.

ருத்ரப்பிரயாகை, தேவப்பிரயாகையை விட பெரிய ஊர். பஸ் ஸ்டாண்டையும், கடைவீதியையும், உணவு விடுதிகளையும் பார்த்தால் ஒரு சிறிய டவுன் போன்றே இருக்கிறது. ஸ்ரீநகரைப் போன்று நாகரிக வளர்ச்சி அடைந்திரா விட்டாலும், பத்ரிநாத் பாதையில் அது ஒரு முக்கியமான தலம் என்பது பார்த்த உடனேயே புரிந்து விடுகிறது.

தேவப்பிரயாகையில், பாகிரதியும் அலகநந்தாவும் சங்கமமாகின்றன. ருத்ரப்பிரயாகையில், அலகநந்தாவும் மந்தாகினி நதியும் சங்கமமாகின்றன. அலக்நந்தா என்று அப் பகுதியினரால் உச்சரிக்கப்படும் அலகநந்தா, பத்ரிநாத்திலிருந்து பாய்ந்து வருகிறது. மந்தாகினி, கேதார்நாத்திலிருந்து ஓடி வருகிறது. இவ்விரு நதிகளும் ருத்ரப்பிரயாகையில் ஒன்று கலக்க, பின்னர், மந்தாகினி தன் பெயரை இழக்க, அலகநந்தா தேவப்பிரயாகையில் பாகிரதியுடன் சேருவதற்காக வேகமாகப் போகிறது. தேவப்பிரயாகையில் பாகிரதி, அலகநந்தா - இரு நதிகளுமே தங்கள் பெயர்களை இழந்து, கங்கையாகி விடுகின்றன.


ருத்ரப்பிரயாகையில், இரு நதிகள் மட்டும் சங்கமம் ஆகவில்லை. பத்ரிநாத் செல்லும் பாதையும், கேதார்நாத் செல்லும் பாதையும் இங்குதான் சங்கமம் ஆகின்றன. இங்கிருந்து அலகநந்தா கரையின் மீது சென்றால் பத்ரிநாத்தையும், மந்தாகினி கரையின்மீது சென்றால் கேதார்நாத்தையும் அடையலாம். இவ்விடங்களுக்கு நடந்து செல்பவர்களுக்கும், பஸ்ஸில் பிரயாணம் செய்கிற வர்களுக்கும் இது ஒரு முக்கியமான 'ஜங்ஷன்.'


எனவேதான் இங்கு எப்போதும் யாத்திரிகர்கள் கூட்டம் இருந்து கொண்டேயிருக்கிறது. பஸ்களும், டாக்சிகளும், கார்களும் வந்த வண்ணம் இருக்கின்றன. பஸ் ஸ்டாண்டில், ஒரு பிரமாண்டமான அரச மரத்தைச் சுற்றி ஒரு மேடையிருக்கிறது. அதில் அமர்ந்து கொண்டால், அகில இந்தியாவையும் தரிசிக்கலாம்.

ருத்ரப்பிரயாகை, நதிகளின் சங்கமத் தலம் மட்டுமல்ல; இரு பாதைகள் சேரும் சந்திப்பு மட்டுமல்ல; இந்தியாவிலுள்ள மாநிலங்களெல்லாம் அங்கே சங்கமமாவதைக் காணலாம்.

'இமயம் முதல் குமரி வரை' என்று பாரதத்தின் பரப்பளவைப் பற்றியும், ஒருமைப்பாட்டுணர்ச்சியைப் பற்றியும் பெருமையோடு பேசுவதன் முழுப்

தேவி ஆலயத்திலிருந்து சங்கமத் தோற்றம்





ஸ்ரீ ருத்ரநாத் ஆலயம்

பொருளை, ருத்ரப்பிரயாகையில் நன்கு உணர முடிகிறது. இரண்டு பஸ்கள் வந்து விட்டால் போதும்; தமிழும், தெலுங்கும், கன்னடமும், மலையாளமும், மராத்தியும், ஒரியாவும், குஜராத்தியும், வங்காள மொழியும், இந்தியும், இனம் புரியாத இன்னும் எத்தனையோ மொழிகளும் அங்கு கலந்து உறவாடுகின்றன. பல்வேறு மொழி பேசுபவர்களும், பல்வேறு வகையான உடையணிந்தவர்களும், மாறுபட்ட பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களும், மாறுன வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுபவர்களும் அங்கு வந்து கூடுகிறார்கள். ஆனால், அத்தனை பேர் உள்ளங்களிலும் இனிய நீருற்றாகப் பெருகிப் பாயும் ஏதோ ஒரு ஜீவசக்தி அவர்களை ஒருங்கிணைப்பதைக் காண முடிகிறது. பாரதத்தை இணைக்கும் பக்திப் பெரு வெள்ளத்தில், அவர்களது வேற்றுமைக ளெல்லாம் மூழ்கி விடுகின்றன. தங்களுக்குள் அந்தரங்க மொழி பேசி, உள்ளங்களால் உறவாடி, மன அமைதி எனும் ஆன்மிகப் பெருநிதியைச் சேர்த்துக் கொள்கிறார்கள் அவர்கள்.

எங்கெங்கோ பிறக்கும் நம் பெருங்குடி மக்கள் தல யாத்திரை புறப்பட்டு, தீர்த்தங்களில் நீராடி, ஆண்டவனின் திருநாமம் நாவினில் ஒலிக்க, ஏதோ ஓரிடத்தில் பாரதக் குடும்பமாக இணைகிறார்கள், எங்கெங்கிருந்தோ பெருகி வரும் சிறு சிறு கிளை நதிகள் ஜீவநதியில் வந்து கலப்பதேபோல். கடற்கரையில் ஓடியாடித் திரிந்து, ஆரவாரமாகச் சண்டையிட்டும் அழுதும் மகிழ்ந்தும் விளையாடும் சிறுவர்கள், அவ்வப்போது உயிர்ந்த அன்னையிடம் வந்து அவளைத் தொட்டு, கட்டித் தழுவிவிட்டு மீண்டும் ஓடுவதுபோல், இவர்கள் திருவிழாக் களிலும், கும்பமேளாக்களிலும், புண்ணியத் தலங்களிலும், சங்கமக் கட்டங் களிலும், பாரதத்தின் ஜீவநாடியைத் தொட்டு விட்டுச் செல்கிறார்கள். அந்தப் பயணங்களின் போது, எல்லைக்கோடுகள் தகர்க்கப்படுகின்றன; சிறுமைத் தனங்கள் சிதறடிக்கப்படுகின்றன. செயற்கையாகத் தூண்டப்படும் பகை உணர்ச்சியும், பாமரத்தனங்களும், இழி நோக்கங்களும் அங்கு குழி தோண்டிப் புதைக்கப்படுகின்றன. பல்கலைக் கழகப் பாடப் புத்தகங்களால் புகட்ட முடியாத பண்புகளையும், பரந்த நோக்கங்களையும், பாரதப் பெருநாட்டின் பெருமைகளையும் இம்மாதிரியான பக்திப் பயணங்கள் நமக்குக் கற்றுத் தருகின்றன.

கடல் மட்டத்திலிருந்து ஈராயிரம் அடி உயரத்தில் நாம் இப்போது நின்று கொண்டிருக்கிறோம். சுற்றிலும் வானத்தை மறைத்துக் கொண் டிருக்கும் பிரமாண்டமான மலைகள். வடகிழக்கிலிருந்து அலகநந்தா ஓடி


வருகிறது; அசுர வேகம்; பயங்கர கர்ஜனை. வடக்கிலிருந்து மந்தாகினி ஓடி வருகிறது. பெயருக்கேற்றாற்போல் மந்தமாகத்தான் இருக்கிறது அதன் ஓட்டம்.

சங்கமக் கட்டத்தில் இப்போது நின்றுகொண்டிருக்கிறோம். காதைத் துளைக்கும் 'ஓ'வென்ற பேரிரைச்சல் கேட்கிறதா?

சாதுவாக ஓடிக் கொண்டிருக்கும் மந்தாகினியை வம்புக்கிழுப்பது போல், அலகநந்தா உக்கிரமாக வந்து உரசுகிறது. அந்த வலியைத் தாங்கமாட்டாமல், மந்தாகினியும் அலறித் துடிக்கிறது. 'அழ வைத்து விட்டோம் பார்' என்று அலகநந்தாவுக்கு ஆனந்தம் போலிருக்கிறது. இளங் கன்றாகத் துள்ளுகிறது; எம்பிக் குதிக்கிறது; சுழன்று ஆடுகிறது. அங்கே அலை பாய்கிறது. ஆவி பறக்கிறது.

அலகநந்தா நுரை கக்கிக் கொண்டு வெண்ணிறமாக ஓடுகிறது. மந்தாகினி நீலப் பச்சை வண்ணமாகத் தோற்றமளிக்கிறது. இமாலயப் பகுதியில் இயற்கை அன்னை நிர்மாணித்துள்ள பல கலைக்கூடங்களில் இந்த இடமும் ஒன்று.

அலகநந்தாவும் மந்தாகினியும் சங்கமம் ஆகும் காட்சி



ஓவியர்களும், கவிஞர்களும், காவியம் படைக்கப் பிறந்தவர்களும் கண்டு புத்துணர்ச்சி பெற வேண்டிய காட்சி அது.

எத்தனை நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுக்காத காட்சி அது. சந்தேகமில்லை. ஆனால், அதிக நேரம் கடத்த முடியாதே; நீராடிவிட்டு, மேற்கொண்டு பயணத்தைத் தொடர வேண்டுமே!

எப்படி நீராடுவது? அது நதியாகவா ஓடிக் கொண்டிருக்கிறது! கடலாக அல்லவா கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. கரையில் நிற்கும் கோழைகளைப் பார்த்தல்லவா அது ஏளனமாகக் கொக்கரித்துக் கொண்டிருக்கிறது.

பல படிகளிறங்கி ஸ்நான கட்டத்திற்குச் செல்ல வேண்டும். ஹரித்துவாரத்திலும் தேவப்பிரயாகையிலும் இருப்பதுபோல் அங்கும் இரும்புச் சங்கிலிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதைப் பிடித்துக் கொண்டோ, இடுப்பில் சுற்றிக்கொண்டோ நீராடுவதுதான் பாதுகாப்பானது. அங்கிருந்த ஓரிருவர் எங்களை எச்சரித்தார்கள். அந்த எச்சரிக்கை உற்சாக மூட்டுவதற்குப் பதிலாக, எங்கள் அதைரியத்தை அதிகப்படுத்தியது.

சங்கமத்தின் அருகில் கோயில் கொண்டிருக்கும் ருத்ரநாதரையும் கங்கா தேவியையும் பிரார்த்தித்துக் கொண்டு தைரியமாக நீரில் இறங்கி விட்டோம். சங்கிலியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவசர அவசரமாக இரண்டு முழுக்குகள் போட்டுவிட்டுக் கரையேறி விட்டோம்.

சற்றைக்கெல்லாம் ஓடாச்சேரி சுவாமிகள் அங்கு வந்தார். சங்கமத்திற்கு வரும் வழியில் சச்சிதானந்த ஆச்ரமத்தின் அருகில் அவரைச் சந்தித்தேன். எல்லோரும் விடியற் காலையில் ருத்ரப்பிரயாகை வந்து சேர்ந்ததாகவும், இரண்டு மூன்று மைல் தொலைவில் ஸ்ரீமடம் முகாமிட்டிருப்ப தாகவும் கூறினார் அவர். சங்கமம் எங்கிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு அவர் மட்டும் தனியாக ஸ்நானத்திற்கு வந்திருக்கிறார். கங்கையைக் கண்டால் அவர் விடுவதில்லை. அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார். அதன் கரையிலேயே நடமாடிக் கொண்டிருப்பார். அதில் எத்தனை முறை வேண்டு மானாலும் மூழ்கி எழுந்திருப்பார். மழை நீரைக் கண்டால் குதித்து விளையாட நினைக்கும் குழந்தையின் ஆர்வம் அவரிடமிருந்ததைக் கண்டோம். எங்களுக்கெல்லாம் அது சற்று கவலையைக்கூட அளித்தது.

ஒருமுறை குளித்துவிட்டு, ஆடையை உலர்த்திக் கொண்டிருந்த ஓடாச்சேரி சுவாமிகள், மீண்டும் ஸ்நானத்திற்கு ஓடி வந்ததைக் கண்டதும் நாங்கள் எச்சரிக்கையாகி விட்டோம். அந்த இடத்தைவிட்டு நகரவேயில்லை. நீரில் இறங்கி, அதிகத் தொலைவு செல்ல வேண்டாம் என்று கூச்சலிட்டுக் கொண்டே யிருந்தோம். அலகநந்தா போட்ட கூச்சலில் எங்கள் கூச்சல் அவர் காதில் விழவேயில்லை. அவர் குதூகலமாகக் காணப்பட்டார் எதற்கும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எங்களுக்குப் பயம் அதிகரித்து விட்டது.

ஒரு பெரிய அலை வந்து அவரை முதுகில் தாக்கியது. அந்த அதிர்ச்சியில் சங்கிலிப் பிடியை நழுவ விட்டுவிட்டார் சுவாமிகள். நாங்கள் கதி கலங்கி விட்டோம். 'ஐயோ' என்று ஒரு பெருங் குரல் எழுப்பி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து நானும் ஸ்ரீநிவாசனும் அவரது கையைப் பற்றிக் கரையில் இழுத்து

விட்டோம். அந்த 'வீரச் செயலை' இப்போது நினைத்தாலும் மலைப்பாக இருக்கிறது. உடல் நடுங்குகிறது.

''என்ன இப்படிச் செய்து விட்டீர்களே? நீங்கள் இனிமேல் தனியாக ஸ்நானம் செய்ய வராதீர்கள். நாங்கள் இப்போது இங்கே இல்லாவிட்டால் என்ன கதி?'' என்று கேட்டேன் நான்.

''நீங்கள் ஏன் பதட்டப் படணும்? என்ன ஆகியிருக்கப் போறது? என்னை கங்கை அடித்துக்கொண்டு போயிருக்கும். கங்கையில் போகக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!'' என்றார் சுவாமிகள், சிரித்துக் கொண்டே. நாங்கள் பதில் பேசவில்லை! அவரிடம் என்ன பேசுவது?

கலகப்பிரியரான நாரதமுனி, கானம் பயின்ற தலமாம் ருத்ரப்பிரயாகை. அவர் அந்த சங்கமத்தில் அமர்ந்து இசைப் பயிற்சி செய்தாராம். அவரது கற்பனை ஓடிய அளவுக்கு அவரால் பாட முடியவில்லை. எரிச்சலுற்று, தம் கையிலிருந்த தம்புராவை உடைத்து நீரில் எறிந்து விட்டார். பின்னர் சிவபெருமானைக் குறித்துத் தவமிருந்தார்.

அவரது கடும் தவத்தைக் கண்டு மெச்சிய ருத்ரேச்வரர் அவருக்கு கானம் கற்றுத் தந்தாராம். இலக்கண நயங்களோடு சிவபெருமானிடம் இசை பயின்ற நாரத முனிவரோ, இன்றும் அங்கே வீணை வாசித்துக் கொண்டிருக்கிறாராம்.

அலகநந்தாவும் மந்தாகினியும் இணையும் இடத்தில் முக்கோண வடிவில் ஒரு பாறை இருக்கிறது. அதை நாரதப் பாறை என்கிறார்கள். அந்திவேளையில் கண்களை மூடி, படிக்கட்டுகளில் அமைதியாக அமர்ந்திருந்தால், நாரதரின் வீணா கானத்தை இன்றும் கேட்கலாம் என்கிறார்கள். நரேந்திரகுமார் என்பவர் ஓரிரு சமயங்களில் அம்மாதிரி வீணா கானத்தைக் கேட்டிருப்பதாக என்னிடம் கூறினார். அவர் ருத்ரப்பிரயாகையில் உள்ள கங்கா வைஷ்ணவ ஓட்டலின் முதலாளி. சமயப்பற்று மிக்க இளைஞர். எங்களுக்கு மிகவும் உதவியாயிருந்தார்.

சங்கமத்தில் நீராடி விட்டு, சுவாமி தரிசனத்தையும் முடித்துக் கொண்டு நாங்கள் சற்று இளைப்பாறிக் கொண்டிருந்தோம். உடனிருந்த நரேந்திரகுமார் எங்களைப் பார்த்து, ''உங்களால் இப்போது மூன்று மைல்கள் நடக்க முடியுமா? ஒரு கோயிலுக்கு அழைத்துச் செல்கிறேன்...'' என்று கேட்டார்.

''அதற்குத்தானே இத்தனை தூரம் வந்திருக்கிறோம். எந்தக் கோயில்?'' என்று கேட்டேன் நான்.

''மூன்று மைலில் கோடீச்வர் மகாதேவ் ஆலயம் இருக்கிறது. ரொம்ப விசேஷமானது. ஒவ்வொரு சோமவாரமும் அங்கே ஏராளமான பக்தர்கள் தரிசனத்திற்காகக் கூடுகிறார்கள். சாதாரணமாக பத்ரிநாத் செல்கிறவர்களுக்கு அங்கு செல்ல நேரமிருக்காது. உங்களை அங்கே அழைத்துச் செல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனால்தான் சொல்கிறேன்'' என்றார் நரேந்திரகுமார்.

''தாராளமாக வருகிறோம். அதைவிட முக்கியமான வேலை எங்களுக்கு என்ன இருக்கிறது? எங்கள் அதிர்ஷ்டம், எதிர்பாராமல் உங்கள் அறிமுகம் கிடைத்திருக்கிறது. இப்போதே புறப்படலாமா?'' என்று கேட்டேன் நான்.


''உங்கள் அறையில் இருங்கள். அரை மணியில் நான் வந்து அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார் நரேந்திரகுமார்.

அந்த ஆலயத்திற்குச் சென்று வரக் குறைந்தது மூன்று நான்கு மணி நேரமாகும். அதுவரையில் ஓட்டலைக் கவனித்துக் கொள்ளத் தக்க ஏற்பாடுகள் செய்யத்தான் அவர் சென்றார் என்று பின்னரே எங்களுக்குப் புரிந்தது. தன் வியாபாரத்தைப் பற்றிக்கூட அதிகம் கவலைப்படாமல், முன்பின் பழக்கமில்லாத யாத்திரிகர்களுக்கு உதவி புரிய வந்த நரேந்திரகுமாரை நாங்கள் என்றுமே மறக்க முடியாது. அவரை நாங்கள் சந்தித்திராவிட்டால், அப்படியொரு கோயில் இருப்பது எங்களுக்குத் தெரிந்திருக்கப் போவதில்லை. அப்படித் தெரிந்திருந்தாலும் அவர் உடன் வராமல் இருந்திருந்தால், நாங்கள் அங்கு சென்றிருக்கவே முடியாது.

அலகநந்தாவின் மீதுள்ள இரும்புப் பாலத்தைக் கடக்கும்போது, ஓர் அறிவிப்புப் பலகையைக் கண்டேன். வெளிநாட்டவர் அங்கு வருவதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக அதில் கண்டிருந்தது. அதற்கான காரணமும் புரிந்தது. இந்திய-சீன எல்லையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகளில் இதுவும் ஒன்று.

இதே ருத்ரப்பிரயாகையில், ஐம்பது ஆண்டுகளுக்கு முன், 'ஜிம் கார்பெட்' என்ற வெளிநாட்டுக்காரர், நூற்றுக்கு அதிகமான மனிதர்களின் உயிரைக் குடித்து அட்டகாசம் செய்துவந்த ஒரு சிறுத்தையைச் சுட்டுக் கொன்றிருக்கிறார். 'The man-eating leopard of Rudraprayag' என்ற தமது புத்தகத்தில் அந்தப் பயங்கர வேட்டையை வருணித்திருக்கும் அவர், ஒரு மாமரத்தின் உச்சியில் ஏறி நின்றுதான் அந்தச் சிறுத்தையைக் கொன்றார்.

இரு பாறைகளுக்கிடையே வாய்க்காலாக ஓடிவரும் அலகநந்தா



1951-ம் ஆண்டில், தமது பத்ரிநாத் யாத்திரையின் போது ருத்ரப்பிரயாகைக்குச் சென்ற கே. எம். முன்ஷி, அந்த மாமரத்தைப் பார்த்ததாக தமது 'பத்ரிநாத்' என்ற புத்தகத்தில் பெருமையுடன் குறிப்பிட்டிருக்கிருர்.

சிறுத்தைகளையும், புலிகளையும் கண்டு அஞ்சிய பகுதியில் தற்போது அந்நியர்கள் நுழைந்து விடுவார்களோ என்று நடுங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அன்பெனும் உலக மகா சக்தியில் கட்டுண்டு, ஒரே குடும்பமாக ஒற்றுமையுடன் வாழ வேண்டிய மனித குலம், பேராசையின் காரணமாகவும் சுயநலத்தின் காரணமாகவும் ஒருவரைக் கண்டு ஒருவர் பயந்து நடுங்கி, கணத்துக்குக் கணம் செத்து, 'வாழ்ந்து' கொண்டிருக்கிறது. இதைக் காணும்போது, மிருகங்கள் எத்தனையோ மேல் என்று எண்ணத் தோன்றுகிறது!

காடுகள் மண்டிக் கிடந்த மிருகங்களின் சாம்ராஜ்யத்தை அழித்து ஆதிமனிதன் தன் வளர்ச்சிக்கு வித்திடத் தொடங்கினுன். நகரங்கள் தோன்றின. தொழில்கள் பெருகின. செல்வம் கொழித்தது. ஒருவனைக் கண்டு மற்ருெருவன் பொருமை கொண்டான். போட்டி வலுத்தது. பகை உணர்ச்சி பிறந்தது. போர் மூண்டது. கணக்கில்லாமல் மிருகங்களைக் கொன்ற பாவமோ என்னவோ, மிருகத்தனம் மனிதனைப் பற்றிக் கொண்டது. மிருகங்களை அழிக்கப் பழகியவன், தன் மிருகத்தனத்தை அழிக்க வழி தெரியாமல் திண்டாடுகிருன். இந்த மிருக உணர்ச்சிகளை அடக்கியாண்டு, மனிதன் மனிதனுகப் பண்போடு வாழத்தான் சமயங்கள் பிறந்தன. கடவுள் பக்தி வளர்ந்தது. ஆலயங்கள் அவசியம் ஆயின.

இமாலயக் காட்டுப் பாதையில் கோடீச்வரர் ஆலயத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது, சிந்தையைத் தூண்டும் எத்தனையோ எண்ணங்கள் தொடர்ந்து வந்தன.

ருத்ரப்பிரயாகையிலிருந்து மோகன்கால் என்ற இடத்திற்குப் போகும் கரடு முரடான பாதை அது. ஜீப்புக்களும் லாரிகளும் போய் வருவதால் அது பாழடைந்து போயிருக்கிறது. நாற்பது மைல் தொலைவிலுள்ள **நாக்நாத் போக்ரி** என்ற இடத்தில் உரேனியமும் மைக்காவும் கிடைக்கின்றனவாம். உத்தரப் பிரதேச மாநில அரசு சிறிது காலமாக இங்கு தீவிர கவனம் செலுத்தத் தொடங்கி யிருக்கிறதாம். விடுவார்களா?

அந்தப் பாதையில் ஒரு மைல் சென்றதும், வலப்புறம் இறங்கினேம். ஒற்றையடிப் பாதை யொன்று எங்களைக் கீழே அழைத்துச் சென்றது. அது சீராகவும் இருக்கவில்லை; நேராகவும் செல்லவில்லை. சில இடங்களில் நடப்பதற்குப் பயங்கரமாகக் கூட இருந்தது. செல்லும் வழியில் கேழ்வரகு, கம்புப் பயிர்கள் மண்டிக் கிடந்தன. துளசிச் செடிகள் காடாக வளர்ந்திருந்தன.

ஒரு மணி நேரம் நடந்து, சுமார் நானூறு அடி கீழே யிறங்கி யிருப்போம். கடும் வெய்யில். எங்களுக்கு மூச்சு இரைத்தது. 'இன்னும் எத்தனை தூரம் செல்ல வேண்டும்?' என்று நாங்கள் கேட்கும் போதெல்லாம் 'இதோ வந்து விட்டது' 'இதோ வந்து விட்டது' என்று எங்களை உற்சாகப்படுத்திக் கொண்டே அழைத்துச் சென்ருர் நரேந்திரகுமார்.



ஸ்ரீ கோடீச்வர் மகாதேவ் ஆலயம் (ருத்ரப்பிரயாகை)


அம்மாடி! ஒரு வழியாக அந்த இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டோம். அலகநந்தாவின் கரைக்கே வந்து விட்டோம். அதோ, அதன் இரைச்சல் கேட்கவில்லையா?

அங்கு அருகருகே இருக்கும் மூன்று நான்கு ஆலமரங்கள் குளுமையான நிழல் தருகின்றன. இருபுறமும் வானுயர்ந்த மலைகள். ஆயிரக்கணக்கான காட்டுக் குருவிகள் எழுப்பும் 'கிரீச்' ஒலி மலைமுகட்டில் மோதி எதிரொலிக்கிறது. எங்களைத் தவிர அங்கு வேறு ஜன சந்தடியே யில்லை.

இந்த அமைதியான சூழ்நிலையில், ஒரு சிறு ஓட்டுக் கட்டடத்தில் கோயில் கொண்டிருக்கிறார் கோடீச்வரர் மூர்த்தி. மிகச் சிறிய சிவலிங்கம். நம் கையாலேயே அவருக்கு அபிஷேகம் செய்து அர்ச்சனையும் செய்யலாம். அங்கு கணபதி இருக்கிறார். இரண்டு நந்திகள் இருக்கின்றன.

கருவறையில் இருப்பதைத் தவிர, வெளியிலும் அநேக சிவலிங்கங்கள் இருக்கின்றன. சுற்றிலும் உள்ள மலைகளில் கோடி லிங்கங்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

கோடீச்வரர் கோயிலைச் சுற்றியுள்ள மேடையில் நின்று பார்த்தால், அலகநந்தா இரு பெரிய பாறைகளுக்கிடையே நுழைந்து சிறிய வாய்க்காலாக ஓடிவரும் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. அது பாறைகளில் மோதி, சுழன்று, திரும்பி, கர்ஜித்துக் கொண்டு பாய்ந்து வருவது பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அரிய அனுபவமாகும்.



அதனருகில் உள்ள பாண்டவர் குகைக்குள்...

நதியின் கரையை ஒட்டினுற்போல் ஒரு குகை இருக்கிறது. அதைப் பாண்டவர் குகை என்கிருர்கள். வனவாசத்தின்போது அவர்கள் இப்பகுதியில் தங்கி யிருந்திருக்கலாம். யார் கண்டது?

கோடீச்வரர் கோயிலுக்குப் பின்புறம் ஒரு சாது இருந்தார். அந்தப் பாண்டவர் குகையைப் பற்றி அவரிடம் விசாரித்தபோது பாண்டவர்கள், பித்ரு தோஷம் நீங்குவதற்காக கோடீச்வரரைக் குறித்துத் தவம் இருந்த தாகவும், அப்போது அக் குகையில் தங்கி யிருந்ததாகவும் கூறினுர்.

அந்த குகையைக் காணச் சென்ருேம் நாங்கள். அங்கு மிக ஜாக்கிரதை யாகச் செல்ல வேண்டும். மேலிருந்து அருவி கொட்டிக் கொண்டிருக்கிறது. நனைந்து கொண்டுதான் செல்ல வேண்டும். கீழே, பாசி படிந்த பாறை நன்ருகவே வழுக்குகிறது. அலகநந்தாவில் விழாமலிருக்க, சிறு இரும்புக் கிராதி போட்டிருக்கிருர்கள். அது ஒன்றும் பெரிய பாதுகாப்பாக இல்லை. கெட்டியாகப் பிடித்துக் கொண்டால் அது ஆடுகிறது. பிடியைத் தளர்த்தினுல் வழுக்குகிறது! இருபது அடி தூரமானுலும் அதைக் கடப்பதற்குள் சற்று நடுங்கித்தான் ஆகவேண்டும்.

அந்தக் குகை ஒரே இருட்டாக இருக்கிறது. பாசி படிந்து, 'சொத சொத' என்றிருக்கிறது. 'என்னென்ன பூச்சி பொட்டு இருக்குமோ?' என்று பயந்து கொண்டுதான் உள்ளே செல்கிருேம்.

முதலில் முன்புறமுள்ள ஒரு நந்தி மட்டும் லேசாகக் கண்ணில் படுகிறது. சுவரோ, கூரையோ தெரியாதபடி திரைச்சீலை யொன்று மறைத்திருப்பது போன்ற மையிருட்டு. டார்ச்சைப் போட்டேன். ஒரு சிவலிங்கம் கண்ணுக்குத்

தெரிந்தது. அதன் மீது சொட்டுச் சொட்டாக நீர் விழுந்து அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. வருடம் பூராவும் இப்படி நீர் சொட்டுகிறதாம். அது சிவலிங்கத்தின் மீது மட்டும்தான் விழுகிறதாம். அந்த குகையில் வேறு எங்கும் நீர் கசிவது இல்லையாம்.

நாங்கள் டேராடூனுக்கருகிலுள்ள 'டபகேச்வரர்' ஆலயத்திற்குச் சென்றிருந்தபோது அங்குள்ள லிங்கத்தின் மீதும் இவ்வாறு நீர் சொட்டுவ தாகக் கூறினார்கள். ஆனால், கோடை காலத்தில் அது வற்றி விடுகிறதாம்.

கையிலிருந்த டார்ச் விளக்கின் ஒளியைச் சுற்றிலும் படர விட்டேன். என்ன ஆச்சரியம்! அப்பாறையில் நூற்றுக்கணக்கான சின்னஞ் சிறிய லிங்கங் களைக் கண்டேன். அவற்றை மனிதன் செதுக்கி வைத்ததாகத் தோன்ற வில்லை. எல்லாம் சுயமாகத் தோன்றியவைதான். சந்தேகமில்லை.

என் ஆவல் பெருகியது. சற்றுப் பொறுமையுடன் ஆராய்ந்தேன். ஆகா! அற்புதத்திலும் அற்புதம்! அங்கு பல உருவங்களைக் கண்டு அதிசயித்துப் போனேன். எத்தனையோ கணபதிகளைக் கண்டேன். மீன் உருவங் களைக் கண்டேன். பாம்புகளைக் கண்டேன். ஆலமரங்களைக் கண்டேன். சிவ — பார்வதி தோற்றத்தைக் கண்டேன்.

மேகங்களிலும் பாறைகளிலும் மரப் பட்டைகளிலும் பழைய காரைச் சுவர்களிலும் சாதாரணமாக நம் கற்பனைக்கேற்ப உருவங்கள் தோன்றுவதை நாம் பார்த்திருக்கிறோம். வேறொரு கோணத்திலிருந்து பார்த்தால் அவை வேறு மாதிரித் தோற்றமளிக்கும். அது மாதிரி இருக்குமோ என்று முதலில் நினைத்தேன். ஆனால், உற்றுப் பார்க்கப் பார்க்க, அது கற்பனையோ பிரமையோ அல்லவென்பது உறுதியாகிறது. எல்லாம் கல்லில் தோன்றியவைதான். இன்னும் பல உருவங்கள் தோன்றியவண்ணம் இருக்கின்றன. அதிசயம், ஆனால் உண்மை! கோடீச்வரர் ஆலயத்திற்கு வருபவர்கள், இந்த குகைக்குள் ளும் வந்து தரிசித்துவிட்டுப் போகிறார்களாம். எங்களுக்கு முன்னால் வந்த யாரோ ஒரு பக்தர், வெண்மலர்களைக் கொண்டு வந்து, ஒவ்வொரு மூர்த்தியின் மீதும் வைத்திருந்தார்.

கோடீச்வரர் ஆலயத்தையும் அற்புதமான பாண்டவர் குகையையும் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பார்க்க முடியவில்லையே என்று வருத்தப் பட்டு, நான் பார்த்த காட்சிகளைப் பின்னர் அவரிடம் விவரித்தேன். அதைக் கேட்டு மகிழ்ச்சியுற்றார்.

மாலை மூன்றரை மணிக்கு நானும் ஸ்ரீநிவாசனும் முப்பத்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள **கர்ணப் பிரயாகை** என்ற இடத்தை நோக்கி டாக்சியில் பயணமானோம்.



உமாதேவி ஆலயம் (கர்ணப்பிரயாகை)

6

ஹரித்துவாரத்திலிருந்து பத்ரிநாத் செல்லும் மார்க்கத்தில் மொத்தம் ஐந்து சங்கமங்கள் இருக்கின்றன. அலகநந்தாவுடன் பாகிரதி சங்கமமாகும் தேவப்பிரயாகையையும், மந்தாகினி சங்கமமாகும் ருத்ரப்பிரயாகையையும் தரிசித்து அவற்றில் ஆனந்தமாக ஸ்நானம் செய்துவிட்டு நாம் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம். அடுத்து, பத்ரிநாத் சேரும் முன் அலகநந்தாவுடன் பிண்டர் நதி சேரும் கர்ணப்பிரயாகை, நந்தாகினி சேரும் நந்தப்பிரயாகை, கருட கங்கா சேரும் விஷ்ணுப்பிரயாகை என்ற மூன்று சங்கமங்களிலும் ஸ்நானம் செய்யப் போகிறோம்.

நாங்கள் கர்ணப்பிரயாகைக்கு வந்து சேரும்போது மாலை ஆறு மணியாகி விட்டது. பஸ் ஸ்டாண்டில் எங்கள் டாக்சி வந்து நின்றதுமே, குற்றால அருவியின் அருகில் நிற்பது போன்ற இரைச்சல் கேட்டது. இரும்புப் பாலத்திற்குக் கீழே நீரோட்டம் தடைப்பட்டு, சுற்றிச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

ருத்ரப்பிரயாகையிலிருந்து வரும்போதே வானம் இருட்டிக் கொண்டு சற்று உறுமிக் கொண்டிருந்தது. ஆனால்,

நாங்கள் கர்ணப்பிரயாகையில் வந்து இறங்கிய பிறகே மழை பிடித்துக் கொண்டது. அது அப்படி ஒன்றும் கனமான மழையில்லே.

நாங்கள் மழைக்காக ஒரு டீக்கடைக்குள் நுழைந்தோம். கடைக்கார ரிடம் பேசிக் கொண்டிருந்ததில், அருகிலேயே அவருக்குச் சொந்தமான விடுதி ஒன்று இருப்பதாக அறிந்து அதில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டோம்.

அது மாடி அறை. அங்கிருந்து பார்த்தால் சங்கமம் தெரிகிறது. தேவப்பிரயாகையிலும் ருத்ரப்பிரயாகையிலும் இருப்பது போன்று ஸ்நான கட்டமோ, சீரான படிக்கட்டுகளோ இல்லே. பெரியதும் சிறியதுமாகக் காணப்பட்ட கருங்கல் பாறைகளுக்கிடையே இறங்கிச் சென்று அமிழ்ந்து ஸ்நானம் செய்ய வேண்டும். ஒரு காலத்தில் அங்கு படித்துறைகள் இருந்து வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போயிருக்குமோ, என்னவோ!

வானத்திலிருந்து ஆயிரமாயிரம் வெள்ளிக் கம்பிகள் கீழே விடப்பட்டு, மெல்லிய திரையிட்டது போல் மழை சீராகத் தூறிக் கொண்டிருக்க, இருபுறமும் மலேகள் வான்சுவராக எழும்பியிருந்தன. எதிரே தெரிந்த மலேயில் பசுமையின் வளம் கொழித்தது.

இமாலய மலேத் தொடர் பார்ப்பதற்கு ஒரே மாதிரியில்லே. ஓரிடத்தில் ஒரே பாறுங்கல்லாகத் தாவரங்களற்று இருக்கிறது. மற்ருேர் இடத்தில் மண் மலேயாக இருக்கிறது. பிறிதோர் இடத்தில் வயல்களும், தாவரங்களும் மண்டிக் கிடக்கும் செழிப்புப் பூமியாக இருக்கிறது. சில இடங்களிலோ, மலேயே கண்ணுக்குத் தெரியாமல், ஒரே அடர்ந்த காடாகத் தோற்றமளிக்கிறது. இமாலயப் பயணம் 'போர்' அடிக்காமல் இருப்பதற்கு அவ்வப்போது மாறுபடும் இந்தத் தோற்றம்தான் முக்கிய காரணம் என்று எனக்குத் தோன்றியது.

எங்கள் அறையிலிருந்து எதிரிலுள்ள நீரோட்டத்தையும் பச்சைவண்ண மலேயையும் பார்த்துக் கொண்டிருந்ததில் எனக்கு நேரம் போனதே தெரிய வில்லே. ''யாராவது ஒரு பண்டாவைப் பார்த்து, நாளேக்கு உங்க அம்மாவின் திதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னீர்களே, வாங்க, போய்ப் பார்க்கலாம்'' என்று ஸ்ரீநிவாசன் அழைத்தபோதுதான் என் நினேவு இந்த உலகத்திற்குத் திரும்பியது.

மறுநாள் பதினெட்டாம் தேதி. என்னேப் பெற்ற தூயவளின் நினேவு நாள். இமாலயப் புண்ணிய பூமியில், இரு நதிகள் சங்கமம் ஆகும் புனித இடத்தில், அதிலும் கர்ணப்பிரயாகையில் அவளுக்காக சடங்குகள் செய்யப் போவது என் பாக்கியம்தான். சற்றும் முகம் சுளிக்காமல் வாழ்நாளெல்லாம் வாரி வாரிக் கொடுத்துக் கர்ணனேப் போல் கரம் சிவந்த அந்தப் புண்ணிய வதிக்குக் கர்ணப்பிரயாகையில் இப்படியொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தர்மதேவதையை நினேத்து நன்றிக் கண்ணீர் உகுத்தேன்.

சங்கமத்தருகில் ஒரு தேவி கோயில் இருக்கிறது என்றும், அங்குள்ள பண்டாவிடம் சென்று மறுநாள் சடங்கிற்கான ஏற்பாடுகளேப் பற்றிப் பேசலாம் என்றும் டீக்கடைக்காரர் தகவல் கொடுக்கவே, அங்கு சென்று பண்டாவைச் சந்தித்து எல்லா ஏற்பாடுகளும் செய்தேன்.


பண்டா கூறியிருந்தபடியே மறுநாள் காலை சரியாகப் பத்து மணிக்கெல்லாம் உமாதேவி கோயிலுக்குச் சென்றோம். சற்றுக் கீழிறங்கிச் சென்றால் 'ஷிவ்ஜி' என்றும் 'சங்கர பகவான்' என்றும் அழைக்கப்படும் சிவாலயம் இருக்கிறது. இரண்டு ஆலயங்களையும் தரிசித்து விட்டுக் காத்திருந்தோம்.

சரியாகப் பத்து அடித்து பத்து நிமிஷத்துக்குப் பண்டா அங்கு வந்தார்.

அலகநந்தா — பிண்டர்கங்கா சங்கமத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, அன்னையின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தினேன். உத்தமரான அந்தப் பண்டா, சிரத்தையுடன் சடங்குகளைச் செய்து வைத்தார்.

கர்ணன் தவம் செய்து, தானம் செய்த புண்ணியத் தலமாம் கர்ணப்பிரயாகை. அங்கு வெண்கோபுரத்துடன் நதிக்கரையில் அவனுக்கு ஒரு கோயிலும் இருக்கிறது. அது புதிய கோயில் என்றும், பழைய கோயில் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய் விட்டதாகவும் டீக்கடைக்காரர் கூறினர். மலைகளால் சூழப்பட்ட கர்ணப்பிரயாகை, இயற்கை அழகு என்னும் ஊஞ்சலில் குதூகலமாக ஆடிக் கொண்டிருக்கும் ஒரு சிற்றூர். மலை மீதுள்ள பாதையில் பஸ்கள் போவதும், பாதைக்கு மேலே உள்ள கிராமங்களுக்கு மக்கள் நடந்து செல்வதும், எட்டாத உயரத்தில் எப்படியோ ஏறி மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுகள் அசையாச் சித்திரமாகத் தோன்றுவதும், விளையாட்டுச் சிறுவர்கள் போல் எங்கிருந்தோ ஓடிவரும் மேகங்கள்

அலகநந்தா—பிண்டர்கங்கா சங்கமம் (கர்ணப்பிரயாகை)



மலை உச்சியைத் தழுவி முத்தமிட்டுச் செல்வதும் மிக ரம்மியமான காட்சிகள் அந்த வண்ண ஓவியக் காட்சிகளைக் கண்களில் நிரப்பி, உள்ளத்தில் பசுமை யாகப் பதித்து, புளகிதம் பொங்கிப் பூரிக்க, பிரியா விடைபெற்று அங்கிருந்து புறப்பட்டோம்.

இருபத்தோரு கிலோமீட்டர் பஸ் பயணம் செய்து, மாலை ஐந்து மணிக்கு நந்தப்பிரயாகை வந்து சேர்ந்தோம்.

இது நந்தகோபன் தவம் செய்த இடமாம். துஷ்யந்தனும் சகுந்தலையும் காதல் புரிந்து, காந்தர்வ விவாகம் செய்துகொண்ட இடம் என்றும் உள்ளூர் வாசிகள் பெருமையுடன் கூறிக் கொள்கிறுர்கள். இங்கு நந்தாகினியும் அலகநந்தாவும் சங்கமம் ஆகும் இடத்திற்கு எளிதாகச் செல்ல முடியாது. இங்கு ஸ்நான கட்டம் என்று தனியாக ஒன்றும் கிடையாது. கடைவீதியி லிருந்து நூறு கெஜம் நடந்து சென்று பின்னர் கீழிறங்கி, மிக ஜாக்கிரதையாகச் செல்ல வேண்டும்.


நானும் ஸ்ரீநிவாசனும் அன்று மாலையே ஒரு ஸ்நானம் செய்து விடலாம் என்று தீர்மானித்து, பெரிய வீரர்கள் போல் நடந்து சென்ளும். உலர்ந்த மணற்படுகை என்று நினைத்து நான் வேகமாக நடக்கத் தொடங்கினேன். சட்டென்று முழங்கால் அளவு புதைந்து விட்டேன். நல்லவேளை! பின்னுல் வந்த ஸ்ரீநிவாசன் என் கையைப் பிடித்து எப்படியோ வெளியேற்றி விட்டார். மேலே உலர்ந்து, உள்ளுக்குள்ளே ஈரமாயிருக்கும் அந்த மண் அன்று என்னை விழுங்கியிருக்கும். நெல்ல காலம் தப்பித்தேன். இனி அவ்வழி போவது புத்திசாலித்தனம் அல்ல என்று முடிவு செய்து நாங்கள் வெற்றிகரமாக வாபஸ் ஆனேம்!


மறுநாட் காலை நாங்கள் தங்கியிருந்த விடுதியின் காப்பாளரின் துணை யுடன் சங்கமத்திற்குச் சென்று ஸ்நானம் செய்தோம். மண்ணில் கால் படாமல் பாறைகளின் மீதே தாவித் தாவி, சங்கமத்தின் அருகில் சென்று, 'ஒரு மாதிரி' ஸ்நானம் செய்துவிட்டு வந்தோம். தண்ணீர் வேகமாக வந்து பாறைகளில் மோதும் அந்த இடத்தில் ஆழம் அதிகம். அசட்டுத் தைரியம் ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிடும்.

சண்டிகாதேவி ஆலயம்



கோபால் மந்திர்





அலகநந்தா—நந்தாகினி சங்கமம்

நந்தப்பிரயாகையில் பழமையான சண்டிகாதேவியின் கோயில் ஒன்று இருக்கிறது. அம்பிகை வெள்ளிக் கவசத்துடன் காட்சி தருகிருள். வலப்புறம் நந்தநாராயணர், லட்சுமிநாராயணர் உருவங்களும், இடப்புறம் சரஸ்வதி, சிவன், பார்வதி, கணபதி முதலியோரின் வடிவங்களும் காணப்படுகின்றன. பிராகாரத்தில் சிவலிங்கங்கள் இருக்கின்றன. ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தியும் எழுந்தருளி யிருக்கிருர். அந்தக் காட்டுப் பகுதியில்தான் நந்தகோப மகாராஜா தவம் செய்தாராம்.

அங்கு கோபால் மந்திர் என்ற கோபாலகிருஷ்ணன் ஆலயமும் இருக்கிறது. ராஜஸ்தானேச் சேர்ந்த வைஷ்ணவப் பிரம்மசாரி ஒருவர் ராமானுஜ சம்பிர தாயத்தில் அங்கு நித்திய பூஜைகள் செய்து வருகிருர். நியம நிஷ்டைகளேக் காத்துவரும் அவர், தன் இல்லத்தில் இருவேளேயும் பகவத்கீதை, சகஸ்ரநாம ஹோமங்கள் செய்து வருகிருர்.

ஆலயத்திலும், அவரது இல்லத்திலும் நிறைய சாளக்கிராமங்களும், சுதர்சன சக்கரங்களும் இருப்பதை எங்களுக்குக் காட்டினுர் அவர். அவற்றில் லட்சுமி நாராயணர், லட்சுமிநரசிம்மர் சாளக்கிராமங்கள் நிறைய இருந்தன. இவையெல்லாம் கைலாச மலேக்கருகில் கிடைப்பதாகக் கூறிய அவர், தானும் அங்கே சென்று சாளக்கிராமங்களேத் தேடி வந்திருப்பதாகவும் கூறினுர். சுமார் நூற்றைம்பது வருடங்களுக்குள் தோன்றிய ஆலயம் அது. அங்கு ஸ்ரீராமானுஜரின் படமும் ஸ்ரீஆண்டாளின் படமும் இருக்கின்றன. ஆண்டாளே 'கோதாம்பா' என்றே அந்த அர்ச்சகர் குறிப்பிட்டார்.

நந்தப்பிரயாகையில், நதிக்கரையில் வசிஷ்டேச்வர மகாதேவர் ஆலயம் ஒன்று இருந்ததாகவும், அது 1967-ம் ஆண்டில் வந்த வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்விட்டதாகவும் கூறினர்கள்.

பத்ரிநாத்துக்கு, ஹரித்துவார் வெளிவாசல். நந்தப்பிரயாகை, உள்வாசல். ''உண்மையில் பத்ரிநாத் புனிதப் பயணம் எங்கள் ஊரிலிருந்து தான் தொடங்குகிறது'' என்று பெருமையுடன் கூறினர் கோவிந்த் பிரசாத் நாட்டியால் என்னும் உள்ளூர்ப் பத்திரிகையாளர்.

கோவிந்த் பிரசாத் நாட்டியால், பத்ரிநாத்—கேதார்நாத் ஆலய கமிட்டியின் துணைத் தலைவர். அவர் பத்ரிநாத் தலத்தைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். பத்ரிநாராயணரைப் பூஜை செய்துவரும் 'ராவல்' என்னும் நம்பூத்ரி பிராம்மணர்கள் ஆதிசங்கரரால் நியமிக்கப்படவில்லை என்றும், ஜோஷி மடத்திலிருந்த தண்டி சந்நியாசிகள்தான் அதற்கான உரிமையைப் பெற்றிருந்தார்கள் என்றும் அவர் கூறினர். இதைப் பற்றி என்னிடம் மிகத் தீவிரமாக விவாதித்தார். தமது கருத்தை வலியுறுத்தும் வகையில் ஆராய்ச்சிகள் செய்து சில ஆதாரங்களையும் சேகரித்து வைத்திருக்கிறார் அவர். அதன் பிரதி ஒன்றை என்னிடம் தந்து, ''இதை உங்கள் சுவாமிஜிக்குப் படித்துக் காட்டுங்கள்'' என்று அதிகார தோரணையில் கூறினர்.

அவர் ஒரு 'டைப்'. எதையுமே அடித்துப் பேசினர். எல்லோரையும் தயவு தாட்சண்யமின்றி சாடினர். பார்ப்பதற்கு மொரார்ஜி தேசாயைப் போல் இருந்தார்.

நந்தப்பிரயாகையில் ராம் பிரசாத் பஹுகுணு என்ற பரம சாதுவையும் சந்தித்தேன். அவர் 'தேவபூமி' என்ற இந்தி வாரப் பத்திரிகையின் ஆசிரியர். உள்ளூர் அச்சகத்தில் ஓராயிரம் பிரதிகள் அச்சடித்து, அந்தப் பகுதியில் விநியோகித்துக் கொண்டிருக்கிறார். தற்போது உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சராக இருக்கும் பஹுகுணு தனது உறவினர் என்று பெருமையுடன் கூறிக் கொண்டார் அவர். சுவாமிகளைத் தரிசிக்க வேண்டும் என்றும், நந்தப்பிரயாகை வாசிகளுக்கு அருளுபதேசமாக இரண்டு வார்த்தைகளாவது அவர் கூறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் என்னிடம் கேட்டுக் கொண்டார். அந்த வார 'தேவபூமி'யில் சுவாமிகளின் யாத்திரையைப் பற்றி எழுதியிருப்பதாகக் கூறி அந்த இதழை என்னிடம் காட்டினர். அதில் 'ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்' என்பதற்குப் பதில் 'ஜயேந்திர பாரதி சுவாமிகள்' என்று தவருக இருப்பதை அவருக்குச் சுட்டிக் காட்டினேன் நான். அந்தத் தவற்றுக்கு வருந்துவதாகவும் அடுத்த வார இதழில் திருத்தம் வெளியிடுவதாகவும் கூறினர் பஹுகுணு.

மதியம் இரண்டு மணிக்கு மேல் புறப்பட்டு நந்தப்பிரயாகைக்கு ஐந்நூறு கிலோமீட்டர் முன்னதாக 'ஸோன்லா' என்ற இடத்திற்குச் சென்றோம். அங்குதான் ஸ்ரீமடம் முகாமிட்டிருந்தது. பஸ் பாதையிலிருந்து சற்று உயரமான இடத்தில் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன.

நாங்கள் சென்ற சமயம் பூஜை முடிந்து சுவாமிகள் தரிசனம் தந்து கொண்டிருந்தார். 'காம்ப்' புறப்படுவதற்கான ஏற்பாடுகளும் ஜரூராக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நந்தப்பிரயாகையில் இருக்கும் ஆலயங்களைப் பற்றியும் தலபுராணங் களைப் பற்றியும் நான் சுவாமிகளிடம் கூறிக் கொண்டிருந்தேன். சற்றுத் தொலைவில் ஓடாச்சேரி சுவாமிகள் நின்று கொண்டிருந்தார்.

அவரைச் சுட்டிக் காட்டி, 'இந்த சுவாமிகள் நேற்று தங்கிய 'காம்ப்'பில் எங்களை ரொம்பத் தவிக்க வைத்து விட்டார்' என்று சிரித்துக் கொண்டே கூறிய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், அங்கு நடந்ததைப் பற்றி விவரித்தார்.



இயற்கைக் காட்சிகளுக்குக் குறைவில்லை

முதல் நாள் மாலை இருட்டுகிற வேளையில் உள்ளூர் ஆசாமி ஒருவரிடம் வழியை விசாரித்துக்கொண்டு ஸ்நானத் திற்காக இவர் அலகநந்தாவுக்குச் சென் றிருந்தார். அதில் ஸ்நானம் செய்து விட்டு வருவதற்குள் நன்றாக இருட்டி விட்டிருக்கிறது. மேலே ஏறி வர வழி தெரியவில்லை. 'சிவசிவ' என்று அங்கேயே ஒரு பாறையின் மீது அமர்ந்து, இரவு முழுவதும் விழித்துக் கொண்டிருந்துவிட்டு, விடிந்ததும் ஸ்ரீமடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

இவரைக் காணுமல் 'காம்ப்'பில் ஒரே கலவரமாகி விட்டதாம். புதுப் பெரியவர் கவலையடைந்திருக்கிறார். பெரிய பொறுப்பல்லவா? மறுநாட் காலை சிரித்துக் கொண்டே வந்த சுவாமிகளைப் பார்த்து, ''என்ன, நேற்றிரவு இப்படிச் செய்து விட்டீர்களே?'' என்று கேட்டதற்கு, 'கங்கைக் கரையில் இரவு பூராவும் சிவ நாமத்தை ஜபித்துக் கொண்டு அமர்ந்திருக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே' என்றாராம். ''பசி எடுக்கவில்லையா?'' என்று ஒருவர் கேட்டபோது, ''பக்கத்தில் கறிவேப்பிலைச் செடியிருந்தது. அதை நிறையப் பறித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். உடம்புக்கு ரொம்ப நல்லது'' என்றாராம்.

தேகாபிமானத்தை மறந்தவர்களால்தான் அந்தப் பயங்கரக் காட்டில் அச்சமின்றிப் பொழுதைக் கழித்திருக்க முடியும். பின்னர் அந்த அனுபவத்தைப் பற்றி அத்தனை சாதாரணமாகப் பேசியிருக்கவும் முடியும்.

அன்று இரவு பதினுன்கு கிலோமீட்டர் தொலைவிலுள்ள **சமோலி** என்ற இடத்தில் காம்ப். உத்தரகண்டத்தை பௌரி கர்வால், தேரி கர்வால், உத்தர் காசி, சமோலி என்று நான்கு மாவட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். பத்ரிநாத், சமோலி மாவட்டத்தில் இருக்கிறது. சமோலி ஊர், நந்தப் பிரயாகையிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவிலிருக்கிறது.

மாலை மூன்றரை மணிக்கு 'காம்ப்'பிலிருந்து புறப்பட்டு இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டே நடந்துகொண்டிருந்தோம். வானளாவிய

நீர்வீழ்ச்சிகள் கொட்ட, சிற்ருறுகள் பாய்ந்து வர, எங்கள் குரலை மலைச் சிகரங்கள் எதிரொலிக்க, ஆனந்தமாக நடந்து கொண்டிருந்தோம்.

நந்தப்பிரயாகையின் எல்லையில், கோவிந்த் பிரசாத் நாட்டியாலும் ராம் பிரசாத் பஹுகுணுவும், மற்றும் ஐந்தாறு உள்ளூர்வாசிகளும் புதுப் பெரியவர்களை உற்சாகத்துடன் வரவேற்றனர். பின்னர் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி, கடைவீதியில் குழுமியிருந்த மக்களுக்கு சுவாமிகள் நல்லுரை வழங்கினுர்.

நந்தப்பிரயாகை எல்லையைக் கடக்கும் வரையில் அவ்வூர்வாசிகள் உடன் வந்தனர். ஒரு திருப்பத்தில் பயங்கரமான மலைச்சரிவு ஏற்பட்டிருந்தது. இருபக்கமும் பஸ்கள், லாரிகள், கார்கள் எல்லாம் நின்றிருந்தன. ராணுவ புல்டோஸர் பாதையைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் ஓர் ஓரமாக ஒதுங்கி, மெள்ள நடந்து சென்று விட்டோம்.

ஏழு மணி சுமாருக்கு ஓர் அபூர்வ காட்சியைக் கண்டோம். தொலைவில் ஓர் உயர்ந்த குன்று தெரிந்தது. அது ஜகஜ்ஜோதியாய் ஜொலித்தது. வண்ண வண்ண மின்விளக்குகள் நட்சத்திரங்களாக மின்னின. மல்லிகைப்பூச் சரங்கள் தோரணமாகத் தொங்குவது போல் மின் பல்புகள் பளிச்சிட்டன.

விசாரித்ததில் அதுதான் சமோலி என்று அறிந்தோம். சுற்றிலும் இருள் மண்டிக் கிடக்க, அந்த மலை மட்டும் பிரகாசமாகக் காட்சி அளித்தது. ஏதோ தேவலோகத்தைக் காண்பதைப் போல ஒரு பிரமையை அது ஏற்படுத்தியது.

இரவு எட்டு மணிக்கு சமோலியை அடைந்தோம். ஊர் அடங்கிவிட்டிருந்தது. கடைவீதியில் ஓரிரு கடைகளைத் தவிர மற்றவை யெல்லாம் அடைக்கப்பட்டிருந்தன. நாங்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடமும் இக்கடமாக இருந்தது. மழை வேறு பிடித்துக் கொண்டு விட்டது. நடந்த களைப்பின் காரணமாக எல்லோரும் அசந்து தூங்கி விட்டோம்.

மறுநாட் காலை நாலரை மணிக்கே எழுந்து புதுப் பெரியவர் தமது பயணத்தைத் தொடங்கி விட்டார்.

பதினேழாவது கிலோ மீட்டரிலுள்ள பீப்பல்கோட்டில் காலை பூஜை.

ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகளின் நந்தப்பிரயாகைப் பிரவேசம்






ஸ்ரீ கோபேச்வர் ஆலயம்

நானும் ஸ்ரீநிவாசனும் சாவகாசமாக ஆறு மணிக்கு எழுந்து அலகநந்தாவைத் தேடிக் கொண்டு புறப்பட்டோம். ஐஸைவிடக் குளுமையான அந்தத் தண்ணீரில் நாங்கள் குளிப்பதை அங்கிருந்த உள்ளூர்வாசிகள் அதிசயத்துடன் பார்த்தார்கள். குளித்துவிட்டு நாங்கள் வெறும் உடம்புடன் வருவதைக் கண்டபோது, அவர்கள் திகைத்தே போய் விட்டார்கள்.

அங்கெல்லாம் யாருமே நதி ஸ்நானம் செய்வதில்லை. எட்டி நின்று, கொஞ்சம் நீர் எடுத்துத் தலையில் தெளித்துக் கொண்டு நகர்ந்து விடுகிறார்கள். 'கங்கையைப் பார்ப்பதே புண்ணியம்' என்று சாஸ்திரத்தில் கூறியிருப்பதாக ஒருவர் என்னிடம் கூறினார்!

நாங்கள் தங்கியிருந்த கட்டடத்தில் ஓர் அறையில் ஓர் இளைஞர் குடியிருந்தார். மூன்றாவது மைலில் **கோபேச்வர்** என்ற ஊர் இருப்பதாகவும் அங்கு ஒரு பழமையான கோயில் இருப்பதாகவும் கூறி, எங்களை அங்கு அழைத்துச் செல்வதாகவும் கூறினார் அவர்.

கோபேச்வர், சமோலி மாவட்டத்தின் 'ஹெட் குவார்ட்டர்ஸ்' என்றும் அங்குதான் கலெக்டர் அலுவலகம் இருப்பதாகவும் நண்பர் கூறினார். சமோலியிலிருந்து சுமார் ஆயிரம் அடி உயரத்திலிருக்கும் கோபேச்வரைத்தான் முதல் நாள் இரவு ஜகஜ்ஜோதியாய்ப் பார்த்தோம் என்பது பின்னரே தெரிந்தது. அங்கு டாக்சியில் பயணம் செய்யும்போது மிக ரம்மியமான இயற்கைக் காட்சிகளைக் காண்கிறோம். பாதை வளைந்து வளைந்து ஏறிச் செல்லும்போது, வளம் கொழிக்கும் பள்ளத்தாக்குகளும் மேகம் சூழும் மலைச் சிகரங்களும் நம்மைக் கனவு உலகத்திற்கே அழைத்துச் செல்கின்றன.



ஆலயத்திலுள்ள பிருமாண்ட திரிசூலம்

கோபேச்வரில் நுழையும் போது நவீன பட்டணம் ஒன்றைக் காண்பது போன்ற எண்ணம் தோன்றுகிறது. மாவட்டத்தின் முக்கியமான அலுவலகங்கள் அங்கு இருப்பதால், பெரிய கட்டடங்களும் குடியிருப்புக்களும் தோன்றியிருக்கின்றன. சமோலியிலிருந்து மாணவர்களும் மாணவிகளும் டாக்சிகளிலும், பஸ்ஸிலும் வந்த வண்ணம் இருக்கின்றனர்.

பெரிய கடை வீதியில் நுழைந்து, சற்றுத் தொலைவு சென்று எங்கள் டாக்சி நின்றது. அங்கிருந்து கோபேச்வர் ஆலயத்திற்கு நடந்துதான் செல்ல வேண்டும்.

மேகங்கள் தவழ்ந்து விளையாடும் மலைத் தொடர்களைப் பின்னணியாகக் கொண்டு கம்பீரமாக நிற்கிறது, அந்தப் பழமையான ஆலயத்தின் விமான கோபுரம்.

உள்ளே சென்றோம். அமைதியான சூழ்நிலை. கருவறையில் சிறிய கோபேச்வர் லிங்கம் இருக்கிறது. பின்னால் தவக்கோலத்தில் பார்வதிதேவி காட்சி தருகிறாள்.

இந்தக் கோயிலின் வெளிப் பிராகாரத்தில் பத்தடி உயரத்தில் ஒரு பெரிய திரிசூலம் இருக்கிறது. அது இரும்பாலானது. அதில் பாலி மொழி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அசைத்தால் அது ஆடுகிறது.

அங்கு உறையும் மூர்த்திக்கு பசுவேச்வரர் என்ற பெயரும் உண்டு. தனது பசுக்களில் ஒன்று பால் தராததைக் கண்டு, அதைக் கண்காணித்தான் மாடு மேய்ப்பவன். அடர்ந்த காடாக இருந்த இந்தப் பகுதிக்கு அது வந்ததும், அங்கிருந்த ஒரு சிவலிங்கத்தின் மீது தினமும் தன் மடியிலுள்ள பாலை யெல்லாம் கறந்து விடுவதைக் கண்டு கோபமடைந்தான். அங்கிருந்த திரிசூலத்தைப் பெயர்த்து அந்தப் பசுவைத் தாக்க நினைத்தான். ஆனால், முடியவில்லை. பின்னர், சிவலிங்கத்தைப் பெயர்த்தெடுக்க முயன்றான். அப்போது சுவாமி அவன் முன் தோன்றி அவனுக்கு ஆசி வழங்கினாராம்.



ஸ்ரீ ஆதிசங்கரர் நிறுவிய ஜோதிமடம்

7

கோபேச்வரிலிருந்து மீண்டும் சமோலி வந்து, அங்கிருந்து பீப்பல்கோட்டிற்குப் பயணமானேம். அங்கு பாதையோரத்திலேயே சுவாமிகள் முகாமிட்டிருந்தார். அருகில் பெரியதோர் அருவி கொட்டிக் கொண்டிருந்தது. வானளாவிய மலைகளின் உச்சியில் நின்றிருந்த சிறுவர்கள் அங்கிருந்து எங்களை ஆர்வமுடன் வேடிக்கை பார்த்தனர். அவர்கள் எப்படித்தான் அங்கு ஏறிச் சென்றனரோ! ஒருவேளை அவர்களுடைய கிராமம் அங்குதான் இருந்ததோ!

இரண்டு மணிக்குப் பூஜை முடிந்தது. சுவாமிகளைத் தரிசிக்கவும், அவரிடம் பிரசாதம் பெற்றுக் கொள்ளவும் அவ்வூர் மக்கள் வெளியே குழுமியிருந்தனர். அவ்வழியே சென்ற ராணுவ லாரிகளும் அங்கு நின்றன. அவற்றிலிருந்த ராணுவ வீரர்கள் இறங்கி வந்து சுவாமிகளைத் தரிசிப்பதற்காகப் பொறுமையுடன் காத்திருந்தனர். அவர்களில் சில தமிழ் முகங்களையும் கண்டேன் நான்.

பூஜை முடிந்து, சுவாமிகள் எல்லோருக்கும் தரிசனம் தந்தார். ராணுவ வீரர்களிடம் தனித்தனியே நலம் விசாரித்து, 'அனுமான் சாலிஸ்' என்ற ஆஞ்சநேய கவசத்தின் சிறு பிரசுரத்தை அளித்து ஆசி கூறினர். எல்லையற்ற தொல்லைகளைப் பொருட்படுத்தாது, நம் எல்லைகளைக்

கண்காணிக்கும் நம் வீரத் திலகங்கள், இந்த மண்ணை மட்டுமா காத்து வருகிறார்கள்? பாரத மண்ணுக்கு வளம் சேர்க்கும் சமயத்தையும் பண்பாட்டையும் கலாசாரத்தையும் அல்லவா அந்நியர்களிடமிருந்து காத்து வருகிறார்கள்.

மணி மதியம் மூன்று. தோலை உரிக்கும் கடுமையான வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. நானும் ஸ்ரீநிவாசனும் பீப்பல்கோட்டி பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். அது முகாமிலிருந்து ஒரு பர்லாங் தொலைவு இருந்தது.

பீப்பல்கோட்டி பஸ் நிலையத்தில் ஜோஷிமட் செல்லும் பஸ்ஸில் ஏறி அமர்ந்தோம். ஆனால், அது புறப்படவில்லை. அங்கு நிறைய பஸ்களும் லாரிகளும் டாக்சிகளும் காத்துக் கிடந்தன. விசாரித்ததில் ஜோஷி மடத்தி லிருந்து வண்டிகள் வந்த பிறகுதான், இங்குள்ள வாகனங்கள் போக முடியும் என்று தெரிந்தது.

இதற்குப் பெயர் 'கேட்' ஸிஸ்டம். இங்கும் ஜோஷி மடத்திலும் இந்த 'ஒருவழிப் பாதை' முறை பின்பற்றப்படுகிறது. இங்கிருந்து ஒரே மலையேற்றம் தான். மிகக் குறுகலான பாதை. மிக ஆபத்தானதும் கூட. எனவே, இருபுற போக்குவரத்து அனுமதிக்கப்படுவதில்லை. அப்படியிருந்தும் எதிரில் வண்டிகள் வந்து விடுகின்றன. அந்த ஆறடிப் பாதையில் எப்படியோ அவர்கள் ஒதுங்கி வழி விடுகிறார்கள்.

ஒரு மணி கழித்து அந்தப் பக்கத்திலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக நிறைய வண்டிகள் வரத் தொடங்கின. பஸ்களில் பயணம் செய்தவர்களெல்லாம் கீழே இறங்கி சிரமப் பரிகாரம் செய்து கொண்டனர். ஆகாரத்திற்காக டீக்கடைகளை நோக்கி ஓடினார்கள். ஆடைகளில் அழுக்கேறி அலுப்பும் அசதியும் மிகுந்தவர் களாக அவர்கள் காணப்பட்டார்கள். வழியில் எங்கோ மாட்டிக்கொண்டு திண்டாடியிருக்கிறார்கள் என்பது அவர்களது முகங்களில் எழுதி ஒட்டப் பட்டிருந்தது.

சற்றைக்கெல்லாம் 'கேட்' திறந்து விட்டதற்கு அடையாளமாக எங்கள் பஸ் புறப்பட்டது. கீழே நின்றிருந்த நாங்கள் உடனே அதில் ஏறி அமர்ந்தோம்.

பீப்பல்கோட்டிலிருந்து ஜோஷி மடம் செல்லும் பாதையில் பயணம் செய்வது சற்றுப் பயமாகவே யிருந்தது. ஒவ்வொரு வளைவின் போதும், நெஞ்சு 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. எங்கள் டிரைவர் பஸ்ஸை ஓட்டிய விதமும் நம்பிக்கையளிப்பதாக இல்லை. எல்லோருக்கும் பத்ரி நாராயணர்தான் ஒரே நம்பிக்கை. **விஷால் பத்ரிகீ ஜெய்! கங்கா மாதாகீ ஜெய்!**

ஓரிடத்தில் கங்கா மாதா எங்கள் பாதையில் குறுக்கிட்டாள். மலையைப் பிளந்து கொண்டு அவள் பாய்ந்து கொண்டிருந்தாள். பாதையே கண்ணுக்குத் தெரியவில்லை. அதன் மீது எங்கள் பஸ் சென்றாக வேண்டும். நாராயணா!

அங்கு அடிக்கடி நீர் பெருக்கெடுத்து ஓடும் போலிருக்கிறது. அதற்காகக் கெட்டியான காங்கிரீட் போட்டிருந்தார்கள். ஆனால், பிரவாகத்தின் காரண மாக அது ஆங்காங்கே உடைந்து போயிருந்தது. பள்ளங்களில் சிறு சிறு சரளைக் கற்களும், கூழாங் கற்களும் சேர்ந்திருந்தன. எங்கள் பஸ் அந்த இடத்தைக்

கடப்பதற்குள் எங்களுக்கு உயிர் போய் உயிர் வந்தது. பிரவாகத்தின் வேகம் பஸ்ஸை நேரே செல்ல விடாமல், பக்கவாட்டில் தள்ளியது. பாதையின் விளிம்பிற்கே வந்து விட்டோம். எட்டிப் பார்த்தபோது குலை நடுங்கியது. மூவாயிரம் அடி ஆழத்தில் அலகநந்தா ஓடிக் கொண்டிருந்தது. கண்களை மூடிக் கொண்டேன். மீண்டும் கண்களைத் திறந்தபோது, ஜல கண்டத்தைக் கடந்து விட்டிருந்தோம்.

இரவு ஏழு மணி சுமாருக்கு ஜோஷி மடம் வந்து சேர்ந்தோம். ஊருக்கு ஒரு மைலுக்கு அப்பாலேயே பஸ்ஸை நிறுத்தி 'நடந்து போங்கள்' என்று சிறிதும் தயவு தாட்சண்யமின்றிக் கூறிவிட்டார் கண்டக்டர். சரியான குளிர். ஆறுயிரம் அடி உயரத்திலல்லவா இருந்தோம். ஒரு கூலியின் தயவால் கடைவீதிக்கு வந்து, பத்ரிநாத் கோயில் கமிட்டியினர் நடத்தும் விடுதியில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டோம்.

மறுநாட் காலையில் பார்த்தபோதுதான் ஜோஷி மடத்தின் ரம்மியமான சூழ்நிலையை முழுமையாக உணர முடிந்தது. அது ஓர் அருமையான மலை வாசஸ்தலம். கோட்டைச் சுவராகச் சுற்றிலும் மலைகள் ஓங்கி நிற்க, அவற்றுடன் வெண் மேகக் கூட்டங்கள் உறவாடி மகிழ்ந்தன. எங்கோ பள்ளத்தில் அலகநந்தா சிறு வாய்க்காலாக ஓட, அதன் கரையில் மலைப்பாதை மலைப் பாம்பாக வளைந்து வளைந்து சென்றது. கொலு பொம்மையாக ராணுவ லாரிகள் அதில் ஓடிக் கொண்டிருந்தன.


ஜோஷி மடம் என்றால், ஸ்ரீ ஆதிசங்கரர் நிறுவிய ஒரு மடம் இருக்கும், அதைச் சுற்றிப் பத்துப் பதினைந்து வீடுகள் இருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு, அந்த டவுனைக் கண்டபோது பிரமிப்பாகி விட்டது. 'ஜோஷி மட்' ஒரு ராணுவ தளம். மலையின் மீது கணக்கற்ற ராணுவக் கட்டடங்கள் காணப்படுகின்றன. அங்கு ராணுவ ஜீப்புகளும் லாரிகளும் போய் வந்த வண்ணம் இருக்கின்றன. கடை வீதியில் பெரியதும் சிறியதுமாக ராணுவ வாகனங்கள் இப்படியும் அப்படியும் பறந்து கொண்டிருக்கின்றன. ராணுவ வீரர்கள் கடை வீதியில் ஓயாமல் வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீ ஆதிசங்கரருக்கு ஞான ஒளி ஏற்பட்ட தலமாம் அது. எனவே அங்கு ஜோதி மடம் நிறுவினராம். ஜோதிர் மடம், நாளடைவில் ஜோஷி மடம் ஆயிற்று. அதுவே அந்த ஊருக்குப் பெயராகவும் நிலைத்து விட்டது.

ஜோஷி மடத்தில் பழ வகைகளைப் பதம் செய்து 'ஜாம்' தயார் செய்யும் ஆராய்ச்சிக்கூடம் ஒன்று இருக்கிறது. அதனருகில் ஒரு மேடை கட்டி அலங்காரக் குடை வைத்திருக்கிறார்கள். அங்கிருந்து அந்த ஊரின் அருமையான 'வ்யூ' கிடைக்கிறது. அந்த இடத்தில் அரை மணி அமர்ந்திருப்பதே பரவசமூட்டும் அனுபவமாக இருக்கிறது.

நாங்கள் ஸ்ரீ நரசிம்ம சுவாமி ஆலயத்தைக் காணச் சென்றோம். கடைவீதியில் இருந்து சற்றுக் கீழே இறங்கி, மக்கள் வாழும் பகுதிகளைக் கடந்து, அந்த ஆலயத்தை அடைந்தோம்.

ஏதோ ஒரு வீட்டுக்குள் நுழைவது போலிருந்ததே தவிர, ஆலயத்தினுள் செல்கிறோம் என்ற உணர்வேயில்லை. மதிற் சுவர்களோ, கோபுர வாசலோ, மண்டபங்களோ இல்லை.



ஸ்ரீநரசிம்மசுவாமி ஆலயம் (ஜோஷிமட்)

கருவறையில் ஸ்ரீ நரசிம்மமூர்த்தியின் சாளக்கிராமச் சிலை இருக்கிறது. அவர் வீராசனத்தில் அமர்ந்திருக்கிறார். அங்கு பத்ரிநாராயணர், உத்தவர், குபேரன், சண்டிகாதேவி, ராம, லட்சுமண, சீதா முதலியவர்களும் இருக்கிறார்கள். கருட பகவான் எழுந்தருளியிருக்கிறார்.

மேலே, ஹிரண்யனை வதம் செய்யும் பாவனையில், சேஷாசனத்தில் உக்ரநரசிம்மர் காட்சியளிக்கிறார். ஸ்ரீ ஆஞ்சநேயர், பிரும்மா, கிருஷ்ண விக்கிரகங்கள் இருக்கின்றன.

வெளியிலுள்ள திண்ணையில் லட்சுமியின் சிறு சிலை யொன்று இருக்கிறது. அது வேதவியாசர் ஆராதித்தது என்றும், ஆதிசங்கரரின் இஷ்டதேவதை என்றும் கூறுகிறார்கள்.

எதிரே திருமாலின் ஆலயம் ஒன்று தனியே இருக்கிறது. அதற்கு வெளிப்புறம், சந்நிதியை நோக்கியவாறு பித்தளையினாலான ஒரு பெரிய கருடன் வீற்றிருக்கிறார்.

கருவறையில் உறையும் விஷ்ணுமூர்த்தி, வாசுதேவன் என்ற திருநாமம் தாங்கியிருக்கிறார். அச் சிலாமூர்த்தியின் பிரபையில் தசாவதாரக் காட்சிகள் காணப்படுகின்றன. அருகில் ஸ்ரீதேவி, பூதேவி, லீலாதேவி, ஊர்வசிதேவி முதலியோர் இருக்கின்றனர். தனியே பலராமன் இருக்கிறார்.


நான்கு கரங்கள் கொண்ட இந்த மூர்த்தியின் மேல் வலக் கையில் கதையும், மேல் இடக் கையில் சக்கரமும், கீழ் இடக் கையில் சங்கும், கீழ்வலக் கையில் பத்மமும் இருக்கின்றன.


இக் கோயிலின் பிராகாரத்தில் பிரும்மா, இந்திரன், சந்திரன், சூரியன் முதலியவர்களுக்குச் சந்நிதிகள் இருக்கின்றன. அஷ்டபுஜ கணபதி எழுந்தருளியிருக்கிறார். வெள்ளைக் கல்லால் ஆன கௌரிசங்கர் சிலை அற்புதமாயிருக்கிறது. அங்கு நவதுர்க்கா ஆலயம் ஒன்றும் இருக்கிறது. ''சைலபுத்திரி, பிரும்மசாரிணி, சந்திரகண்டி, குஸ்மாண்டி, ஸ்கந்த மாதா, காத்தியாயினி, காளராத்திரி, மகா கௌரி, ஸித்திபுத்திரி'' என்று கூறியபடி அங்கிருந்த பண்டா ஒவ்வொரு சிலையாகச் சுட்டிக் காட்டினார்.

அறத்தின் ஆட்சி மங்கிப் போய், நல்லவர்கள் துயரடைய நேரும் போதெல்லாம் திருவவதாரம் செய்து இப்பூமியில் தர்மத்தை மீண்டும் நிலைநாட்டும் பரம கருணாமூர்த்தியான எம்பெருமான், சீற்றமே உருவெடுத்தது போல் ஸ்ரீ நரசிங்கனாகத் தோன்றினார். அது பொய்க் கோபம். மனித குலத்தை ரட்சிப்பதற்காகப் பகவான் வரவழைத்துக் கொண்ட கோபம் அது. ஆனால், அக்கோபத்தைக் கண்டு அண்ட சராசரமே நடுங்கியது.

அகங்காரச் சிந்தையால் அதர்மத்திற்கு வித்திட்ட ஹிரண்யனின் மார்பைப் பிளந்து, அவன் உள்ளத்திலும் அச்சம் குடிகொண்டிருந்ததைக் காட்டினாராம் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள எம்பெருமான். அதைக் கண்டு தேவாதி தேவர்கள் தங்கள் மணிக் கிரீடங்கள் பூமியில் படும்படி வணங்கித் தொழுதனராம். இன்றும் தொழுத வண்ணம் நின்று கொண்டிருக்கிறார்களாம். அத்தலம் 'நல் இமயத்துள்' இருக்கிறதாம். இந்த திவ்விய தேசத்தை திருப்பிரிதி என்று அழைக்கிறார் திருமங்கையாழ்வார். பத்து பாசுரங்களாலே மங்களாசாசனம் செய்து இத்திருப்பதியைப் போற்றிப் புகழ்ந்துள்ளார் அவர்.

'ஜோஷிமட்' கடைவீதியின் தோற்றம்





ஸ்ரீவாசுதேவன் ஆலயம்



ஸ்ரீவாசுதேவமூர்த்தி

இங்குள்ள காட்டுப் பன்றிகள் குனிந்து தங்களுடைய கொம்புகளால் மாணிக்கப் பாறைகளைப் பிளக்க, சிதறிய மாணிக்கக் கற்கள் ஒளி வீசிக் கொண்டே, நீர்வீழ்ச்சிகளில் அடித்துக் கொண்டு உருண்டு வருகின்றனவாம். இவ்வாறு ஒவ்வொரு பாசுரத்திலும் திருமாலின் பெருமைகளைப் பேசிக் கொண்டே, அன்று தாம் கண்ட 'ஜோஷி மட'த்தின் இயற்கைக் காட்சிகளைத் தீந்தமிழ்ச் சொற்களால் கவி நயத்துடன் அனுபவிக்கிறார் திருமங்கையாழ்வார். மற்றொரு பாசுரத்தில், வானத்திலே கறுத்த மேகக் கூட்டங்கள் நீர்க்கனத் தாலே ஓடமாட்டாமல் ஓரிடத்திலேயே நின்று கர்ஜிப்பதாகவும், அதைக் கேட்டு மலைப் பாம்புகள் தங்களுக்கு இரையாக யானைக் கூட்டங்கள் வருகின்றன என்று எண்ணுவதாகவும் அருமையான காட்சி யொன்றை நம் கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறார். ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியிலும் 'பிரிதி சென்று அடை, நெஞ்சே' என்று தம் மனத்தை அத்திருத்தலத்தின்பால் செலுத்தி, நம்மை யெல்லாம் அத்திவ்விய தேசத்திற்கு அழைத்துச் சென்று, பேரானந்த நிலை எய்தும்படித் தூண்டிவிடுகிறார்.

இங்குள்ள ஸ்ரீ நரசிம்மமூர்த்தி ஸ்ரீ ஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்யப் பட்டதாகக் கூறப்படுகிறது. அவர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீசக்கர யந்திரம் ஒன்று கோயிலில் இருந்ததாகவும், அது தற்போது அலகநந்தாவின் அடியில் இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

இந்த நரசிம்மமூர்த்தி மிகவும் சக்தி வாய்ந்தவராம். தம் முன் வந்து நிற்பவர்கள் செய்த பாவங்களை யெல்லாம் அவர் அறிவார் என்றும், நினைத்தால் அவை என்னென்னவென்று உரக்க அவரால் கூற முடியும் என்றும் பக்தர்கள் நம்புகிறார்கள். அதனால் அவரைத் தரிசித்தவர்கள் தாங்கள் செய்த பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்பதோடு, பின்னர் பாவம் செய்வதற்கே அஞ்சுவார்களாம்.

நரசிம்மருடைய கரம் ஒன்று மெல்லியதாகிக் கொண்டே வருகிறதாம். இறுதியாக அது இற்று விழும் போது பத்ரிநாத் கோயிலுக்குச் செல்லும் வழியில்



ஸ்ரீ கௌரிசங்கர்



அஷ்டபுஜ கணபதி

மலைகள் விழுந்து அப்பாதை அடைக்கப்பட்டு விடுமாம். அதற்குப் பிறகு பத்ரிநாராயணர், பாவிஷ்யபத்ரி என்ற இடத்திலோ ஆதி பத்ரி என்ற இடத்திலோ குடியேறிவிடுவாராம்.

ஸ்ரீ நரசிம்ம சுவாமியைத் தரிசித்துவிட்டு, ஸ்ரீ ஆதிசங்கரர் நிறுவிய ஜோதி மடத்தைக் காணச் சென்றோம். ஸ்ரீநரசிம்மர் கோயிலுக்கு, கடை வீதியில் இருந்து இடப்புறம் இறங்கிச் செல்ல வேண்டும். ஜோதி மடத்திற்கு வலப்புறம் மலையேறிச் செல்ல வேண்டும். ஆனால், அதிக உயரம் இல்லை.

நுழைவாயினுள் நுழைந்ததும் முதலில் ஸ்ரீ அன்னபூரண தேவியைத் தரிசிக்கிறோம். அமர்ந்த திருக்கோலம், நான்கு கரங்கள். சலவைக் கல்லாலான புராதன உருவச்சிலை.

வலப்புறம் திரும்பி சற்றுக் கீழிறங்கிச் சென்றால், பிரமாண்டமான கல்பக விருட்சத்தைக் காண்கிறோம். இதுவரை அம்மாதிரியான மரத்தை நான் கண்டதில்லை. அதன் இலை, அரச இலையைவிடப் பெரியதாக இருந்தது. ஸ்ரீசைலத்தில் ஒரு கல்லால மரத்தைக் காட்டி ஸ்ரீ ஆதிசங்கரர் அதனடியில் தபஸ் செய்ததாகக் கூறினார்கள். அதைப் போல் பன்மடங்கு பெரிதாக இருந்தது இது. சிவபெருமானின் ஜடாரூபமாக இருக்கும் இந்தக் கல்பக விருட்சம், துவாபர யுகத்திலிருந்து இங்கு இருந்து வருகிறதாம்.

இம்மரத்தடியில் ஒரு குகை யிருக்கிறது. அங்கு ஆதிசங்கரர் ஐந்து ஆண்டுகள் தவமிருந்து ஞான ஒளி பெற்றதாகவும் கூறப்படுகிறது. இங்குதான் ஸ்ரீ வியாச பகவான் அவருக்குத் தரிசனம் தந்தாராம்.

அந்தக் குகை பூட்டப்பட்டிருந்ததால் வெளியே அமர்ந்தபடியே அதை தரிசித்தேன். புண்ணிய பாரதத்தின் தென்மேற்குக் கோடியில், கொல்லூரு மூகாம்பிகை ஆலயத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் தபஸ் செய்த அறையில் சற்று நேரம் அமர்ந்திருக்கும் பேறு பெற்றேன். தற்போது, வடகிழக்குக் கோடியில் அவர் தவமிருந்த குகையின் வாயிலில் சற்று நேரம் இமை மூடிக் கரம் குவித்து அமர்ந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

அக்குகையில் ஒன்றுமேயில்லை. அது வெற்றிடமாக இருந்தது. அதைக் கண்டபோது ஸ்ரீ காஞ்சிப் பெரியவர், சீடர்களோடு கூடிய ஸ்ரீ சங்கர பகவானின் உருவச் சிலைகளை நாடெங்கும் பிரதிஷ்டை செய்து மண்டபங்கள் எழுப்பிக் கொண்டிருப்பது என் நினைவுக்கு வந்தது. இந்தக் குகையிலும் ஸ்ரீ சங்கரரின் சிலை ஒன்று வைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்துக் கொண்டேன். என்ன ஆச்சரியம்! பத்ரிநாத்துக்குச் சென்றபோது என் கனவு பலிப்பதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தன. அதைப் பற்றிப் பின்னர் கூறுகிறேன்.

குகைக்கருகில் ஒரு சிவாலயம் இருக்கிறது. சிவலிங்கத்திற்கு ஜோதீஷ்வர் என்ற திருநாமம். அங்கு கணபதி, பார்வதி, காலபைரவர், ஆஞ்சநேயர், வீரபத்திரர், நந்திகேச்வரர் முதலியவர்கள் இருக்கிறார்கள். அங்கோர் அகண்ட தீபம், ஜோதியின் வடிவமாக, ஞான ஒளியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வெளியே மிகப் பழமையான கணபதி சிலை யொன்றும் நாலைந்து நந்திகளும் இருக்கின்றன.

கல்பக விருட்சத்திலிருந்து நூறு அடி நடந்து சென்றால், ஸ்ரீ மடத்தை அடையலாம். நாங்கள் சென்றபோது அது வெறிச்சோடிக் கிடந்தது. விசாரிப்பதற்குக் கூட ஒருவருமில்லை. ஒரு பெரிய ஹாலில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய மரத்தாலான மண்டபம் ஒன்று இருந்தது. நான் சென்ற சமயம் அந்த மடத்தில் பூஜையும் இல்லை, ஆசாரிய சுவாமிகளும் இல்லை.


ஜோதி மடத்தில் ஸ்ரீ ஆதிசங்கரரின் படம் ஒன்று இருந்தது. அதற்கு ஒரு நமஸ்காரத்தைச் செய்து விட்டு அங்கிருந்து புறப்பட்டோம்.


இன்று தேதி செப்டம்பர் 21. நம் பயணம் தொடங்கி ஒன்பது நாட்கள் ஆகிவிட்டன. இமயத்தில் நாம் நூற்றைம்பது மைல்கள் வந்திருக்கிறோம். பத்ரிநாத்தை அடைவதற்கு இன்னும் இருபது மைல்கள் சென்றாக வேண்டும். பஸ்ஸில் சென்றால் இரண்டு மணி நேரத்தில் பத்ரிநாத்தை அடைந்துவிடலாம்.

ஸ்ரீ ஆதிசங்கரர் தவமிருந்த குகை



ஸ்ரீ ஜோதீச்வரர் ஆலயம்





ஜோதி மடத்தின் முன்புறத் தோற்றம்

ஆனல், நாங்கள் ஜோஷி மடத்தில் ஒரு நாள் தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்கு ஒரு முக்கிய காரணமும் இருந்தது.

பத்ரிநாத்திலிருந்து மூன்ருவது மைலில், **மாஞ** என்ற ஒரு சிறு கிராமம் இருப்பதாகவும், அங்கு 'வியாசகுஃபா' என்ற ஒரு குகை யிருப்பதாகவும், அங்கு நாங்கள் செல்ல வேண்டுமென்ருல் ஜோஷி மடத்திலுள்ள மாஜிஸ்டிரேட்டின் உத்தரவைப் பெற வேண்டும் என்றும் காப்டன் மேத்தா கூறியிருந்தார். அதன்படி மாஜிஸ்டிரேட்டிடம் அனுமதி பெற்று விட்டோம். ஆனல், அங்குள்ள ராணுவ அதிகாரியும் அதில் கையொப்பமிட வேண்டுமாம். அவரை மறுநாள் ஒரு மணிக்குத்தான் சந்திக்க முடியும் என்று கூறிவிட்டார்கள். எனவே, ஜோஷி மடத்தில் மற்ருேர் இரவு தங்க வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது.

அங்கு பொழுதை எப்படிக் கழிப்பது என்று யோசித்தபோது ஒரு ஐடியா தோன்றியது. அங்கிருந்து இரண்டாவது மைலில் **விஷ்ணுப்பிரயாகை** என்ற சங்கமம் இருக்கிறது. அதுதான் பத்ரிநாத்துக்கு முன்னுள்ள ஐந்து சங்கமங்களில் கடைசி சங்கமம். அங்கிருந்து ஏழாவது மைலில் பாண்டுகேச்வரம் என்ற ஊர் இருக்கிறது. அது மகாபாரதக் காவியத்தோடு சம்பந்தப்பட்ட ஊர். பாண்டவர்கள் அந்த ஊரிலிருந்துதான் சுவர்க்க யாத்திரையைத் தொடங்கினர்களாம். ஒரு டாக்சியை அமர்த்திக் கொண்டு பாண்டுகேச்வரம் சென்று, திரும்பும் வழியில் விஷ்ணுப்பிரயாகையில் ஸ்நானம் செய்துவிட்டு, இரவுக்குள் ஜோஷி மட்டிற்குத் திரும்பி விடுவது என்று முடிவு செய்து அங்கிருந்து புறப்பட்டோம்.



ஜோதி மடத்தின் நுழைவாயில்

விஷ்ணுப்பிரயாகை, ஜோஷி மடத்திலிருந்து ஆயிரம் அடி இறக்கத்தில் இருக்கிறது. செல்லும் வழியில், பாதையோரமாக ஒரு நினைவுச் சின்னம் கட்டப்பட்டிருந்தது. டாக்சியை நிறுத்தி அதில் எழுதப் பட்டிருந்ததைப் படித்தோம். நெஞ்சம் நெகிழ்ந்தது. அடுத்த கணம் நெஞ்சுயர்த்தி நின்றோம்.

நம் ராணுவத்தில் ஒரு சிக்னல் ஊழியராகப் பணியாற்றிய கே. கருணாகரன் என்ற தென்னகத்து வீரன், அங்கு நல்லடக்கம் செய்யப் பட்டிருந்த விவரம் அதில் கூறப்பட்டிருந்தது. 1972-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் தேதி, அங்கு தொலை பேசிக் கம்பிகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டு, அந்த இடத்திலேயே உயிர் நீத்தாராம் அவர். எல்லைப் பாதையைப் பாதுகாக்கும் பணியில் உயிர் நீத்த அந்த உத்தமனுக்கு நம் ராணுவம் செய்துள்ள மரியாதையின் சின்னம் அது. அந்த வீரமகனுக்கும், அவனைப் பெற்ற பாக்கியசாலிகளுக்கும் தலைவணங்கி விட்டு, ஒரு சொட்டு நன்றிக் கண்ணீருடன் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம் நாங்கள். இரும்பு வாராவதியைக் கடந்து, அருகில் இருந்த விஷ்ணுப்பிரயாகையைத் தரிசித்துக் கொண்டே பாண்டுகேச்வரத்தை நோக்கிப் பறந்தோம்.

இந்தப் பயணத்தை என்னால் மறக்கவே முடியாது. மாலைச் சூரியனின் மஞ்சள் வெயில் மலைகளின் மீது படிந்து, விதவிதமான வண்ணங்களை வாரி இறைத்து, ஜால வித்தைகள் புரிந்து கொண்டிருந்தது. வளைந்து வளைந்து சென்று கொண்டே இமயத்தின் வகை வகையான தோற்றப் பொலிவுகளைக் கண்களில் நிறைத்துக் கொண்டு, நீங்காத நினைவுகளை மனத்தில் பதித்துக் கொண்டு, பேரானந்தத்துடன் பயணம் செய்து கொண்டிருந்தோம். அற்புதக் காட்சிகளில் இருந்து கண்களை அகற்றி, ஒரு கணம் அதல பாதாளத்தில் ஓடும் அலகநந்தாவைக் கண்டதும் நம் வயிற்றைக் கலக்குகிறது. தொலைவில், பாதை ஓரத்தில் ஊர்ந்து கொண்டிருக்கும் பஸ்ஸைப் பார்க்கிறோம். ஐயோ! டிரைவர் சற்று நிதானம் தவறினாலோ, மலை சரிந்து விழுந்தாலோ என்ன கதி? நினைக்கும்போதே பகீர் என்றது. ஆனால், உடனேயே ஒரு நம்பிக்கை பிறக்கிறது. எல்லாம் நாராயணன் செயல். அவரைப் பிரார்த்தித்துக் கொள்வோம். பிரார்த்தனையைத் தவிர வேறு கதியில்லை. நடக்காது என்று நினைத்த பல அற்புதங்கள், பிரார்த்தனையால் நடந்திருக்கிறதே. **பத்ரி விஷால்கீ ஜெய்! கங்கா மாதாகீ ஜெய்!**

பத்ரிநாராயணரின் பெருங்கருணையால் பாண்டுகேச்வரத்தை நெருங்கி விட்டோம். இன்னும் ஒரு மைல்தான் இருக்கிறது.

அது 'கோவிந்த் காட்' என்ற இடம். அங்கு பஸ்கள் நின்றன. அவற்றிலிருந்து சீக்கியர்கள் இறங்கினர். அவர்களெல்லாம் இரண்டு மைல் தொலைவிலிருக்கும் குருத்வாராவுக்குப் போகிறவர்கள். ஹேமகுண்டம் என்ற சீக்கியரின் புனிதத் தலத்திற்குச் செல்கிறவர்களும் இவ்வழியாகத்தான் போக வேண்டும். பன்னிரண்டு மைல் கடுமையான நடைப் பயணம் அது. 14,500 அடி உயரத்தில் இந்த இடம் இருக்கிறது. சீக்கியரின் பத்தாவது குருநாதரான 'குருகோவிந்த் சிங்' தமது முற்பிறவியில் அங்கு தவம் புரிந்ததாக, அவரே எழுதியுள்ளதைக் குறிப்பாக வைத்துக் கொண்டு 1936-ம் ஆண்டு அந்தப் புனித இடத்தைக் கண்டு பிடித்தார்களாம்.

மலர்களின் பள்ளத்தாக்கிற்கும் (Valley of flowers) இவ்வழியேதான் செல்லவேண்டும். அங்கு முந்நூறு வகையான வண்ணப் பூக்கள் மலர்ந்திருக்குமாம். மனத்தைக் கொள்ளை கொள்ளும் மகோன்னதக் காட்சியாக இருக்குமாம் அது.

கோவிந்த் காட்டில் பஸ் நிற்குமிடத்திலிருந்து ஒரு மைல் தொலைவில், புராணப் பெருமைகள் வாய்ந்த பாண்டுகேச்வரம் என்ற சிற்றூர் இருக்கிறது. மலைப் பாதை உயரத்திலிருப்பதால், அங்கிருந்து ஊரைப் பார்க்கும்போது, நம் மனம் புராதன நாட்களுக்கே சென்று விடுகிறது. மகாபாரத நிகழ்ச்சிகள் சிந்தையில் குடியேற, மெள்ள நடந்து, கீழிறங்கிச் செல்கிறோம்.


எத்தனையோ சிந்தனைகள், எத்தனையோ எண்ண அலைகள்! பஞ்சபாண்டவர்களைப் பெற்றுப் புகழ் எய்திய பாண்டு மகாராஜா நடமாடிய மண்ணில் நடந்து கொண்டிருக்கிறோம் என்ற எக்களிப்பில் மிதந்து கொண்டிருந்தோம். மனைவியுடன் சிற்றின்பத்தில் ஈடுபட நாட்டம் கொண்டால், உயிர் துறக்க நேரிடும் என்று பாண்டுவிற்கு ஒரு சாபம் இருந்ததாம். அதன் காரணமாக அவர் மடிய நேரிட்ட இடம் இதுதானாம்.

பாண்டு மகாராஜா சங்கரனையும், ஸ்ரீநாராயணரையும் தொழுது வந்ததால், அங்கு அவர்களுக்குக் கோயில்கள் எழுப்பினர். அக் கோயில்களைக் காணத்தான் நாங்கள் வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தோம்.

குறுகிய சந்துகள், கரடுமுரடான பாதைகள், திடீர்த் திருப்பங்கள், எங்களை ஆச்சரியத்துடன் பார்த்த கிராம மக்கள், நாணத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்ட பெண்மணிகள், மிரட்சியுடன் பதுங்கிக் கொண்ட சின்னஞ் சிறுவர்கள், பாழடைந்த இல்லங்கள், அழுக்கேறிய ஆடைகள், புரியாத பேச்சுக்கள் — நாங்கள் நடந்து கொண்டிருந்தோம்.

ஸ்ரீநிவாசன் பேசிய இந்தி அவர்களுக்குப் புரியவில்லை; அவர்கள் பேசிய இந்தி ஸ்ரீநிவாசனுக்குப் புரியவில்லை!

கே. கருணாகரனுக்கு
நினைவாஞ்சலி



ஒரு பெண்மணி, வீட்டு வாசலில் மிளகாயை உலர்த்திக் கொண்டிருந்தாள். மேக்கப் போட்டுக் கொண்டு படப் பிடிப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு சினிமா நட்சத்திரம் போல் பேரழகுடன் தோற்றமளித்தாள் அவள். ஆனால் இது போலி அழகல்ல. எல்லாம் அசல். அந்த நிறம், அந்தக் கருவிழிகள், அந்தப் புன்னகை, அந்த நாணம், அப்பப்பா!

ஸ்ரீநிவாசனுக்கு ஒரு படம் பிடித்துக் கொண்டுவிட வேண்டும் என்று தோன்றியது. நல்ல போஸ் கிடைக்க வேண்டுமே என்பதற்காக அவளுடன் பேச்சுக் கொடுத்தார்.

''வீட்டில் ஆண்கள் யாராவது இருந்தால் கூப்பிடுங்கள், பேச வேண்டும்.''

''இல்லை, பத்ரிநாத்தில் இருக்கிறார்கள்.''


''அங்கே தரிசனத்திற்காகப் போயிருக்கிறார்களா?''

''இல்லை, வியாபாரம்.''

அதிகம் பேசவில்லை அவள். அளந்துதான் பேசினாள். நான் புரிந்து கொண்டேன். அந்த ஊரில் ஆடவர்களை அதிகமாகக் காண முடியவில்லை. அவர்களெல்லாம் சீசனுக்கு பத்ரிநாத் சென்று, வியாபாரம் செய்து விட்டு, பணம் சம்பாதித்துக் கொண்டு, பனி காலத்தில் கீழிறங்கி வந்து விடுவார்கள்

புராதனமான கல்பக விருட்சம் (ஜோஷிமட்)





கோவிந்த் காட்


போலிருக்கிறது. பிழைப்பைத் தேடி ஆண்கள் வெளியே போய்விடுவதால் பெண்டிர் வயல் வேலையையும் வீட்டு வேலையையும் கவனித்துக் கொள்கிறார்கள்.

ஸ்ரீநிவாசன் காமிராவைச் சட்டென்று அட்ஜெஸ்ட் செய்வதைப் பார்த்துவிட்ட அப்பெண்மணி தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். நாணிக்கோணிக் கொண்டு வீட்டுக்குள் ஓடி மறைந்து விட்டாள்.

பக்கத்து வீட்டில் ஒரு தொண்டு கிழவி இருந்தாள். அவளிடம், ''மந்திர் கிதர் ஹை?'' என்று கேட்டேன் நான். சற்றும் தடங்கலின்றி யாரிடமும் தைரியமாக இந்தியில் நான் கேட்பது இது ஒன்றுதான்! அவள், 'இப்படிப் போங்கள்' என்று சைகை காட்டிவிட்டுத் தன் வேலையைக் கவனித்தாள்.


பாண்டவ சகோதரர்கள், ஹஸ்தினபுரத்தை பரீட்சித் மகாராஜாவிடம் ஒப்படைத்துவிட்டு, தியானத்திலும் தவத்திலும் ஈடுபடுவதற்காக இந்த இடத்திற்குத்தான் வந்தார்களாம். 'அவர்கள் இங்கெல்லாம்தானே நடமாடியிருக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டே மகிழ்ச்சி பொங்க நடந்து கொண்டிருந்தேன் நான். சூழ்நிலையையும் பழமையின் சின்னங்களையும் கண்டபோது நமக்குப் பழக்கப்பட்ட நவ நாகரிகத்திற்கும் அங்குள்ள பழக்க வழக்கங்களுக்கும் சற்றும் சம்பந்தமிருந்ததாகத் தோன்றவில்லை. ஏதோ கனவு உலகத்தில் சஞ்சரிப்பது போலிருந்தது எங்களுக்கு.

இரண்டு பர்லாங் நடந்து ஊர்க் கோடிக்கு வந்தோம். அங்கு இரண்டு மிக மிகப் பழமையான கோயில்கள் இருந்தன. கருங்கல் கட்டடம்தான். ஆனால் மதிற் சுவர்களும் விமானங்களும் உடைந்து போய், பழுது பார்க்கப் படாமல் இருந்தன.



பாண்டுகேச்வரம் செல்லும் பாதையில் பஸ் போகிறது (அம்புக் குறி)

அடுத்தடுத்து இருக்கும் இவ்விரண்டு கோயில்களும் திறந்தேயிருந்தன. ஒன்று, யோகபத்ரிநாராயணர் ஆலயம். மற்றொன்று, வாசுதேவர் ஆலயம். இரண்டும் பஞ்சலோக விக்ரகங்கள் போல் இருந்தன. யோகபத்ரி ஆலயத்தின் முன், இடப்புறம் பழுதடைந்த கணபதி சிலையும், ஒரு சிவலிங்கமும், நந்தியும்



பாண்டுகேச்வரம்

இருக்கின்றன. அங்கு ஒழுங்காகப் பூஜை நடப்பதற்கான அறிகுறிகளே இல்லை. ''பண்டா யார்?'' என்று கேட்டதற்கு, இரண்டு சிறுவர்கள் எங்கேயோ ஓடிச் சென்று இருபது வயதான பையன் ஒருவனை அழைத்து வந்தார்கள். அவனிடம் தல புராணத்தைப் பற்றி விசாரித்துப் பார்த்தேன். அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை, பாவம்! 'திருதிரு'வென விழித்தான். ''நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து மே மாதம் முதல் வாரம் வரை பத்ரிநாத் ஆலயம் மூடப்பட்டிருக்கும்போது, இங்குள்ள உற்சவமூர்த்தி, பாண்டுகேச்வரத்திலுள்ள வாசுதேவர் ஆலயத்தில் வைக்கப்பட்டு ஆராதிக்கப்படும்'' என்று அந்தப் பையன் கூறினான். எதிரில் மற்றொரு கோயில் இருந்தது. அது பூட்டப்பட்டிருந்தது. திறந்து காட்டும்படி கேட்டதற்கு, அது குபேரன் கோயில் என்றும், ஆனால் தற்போது உள்ளே ஒன்றுமில்லையென்றும் கூறினான். மேலும் விளக்கம் கேட்டபோது, அந்த விக்ரகம் பத்ரிநாராயணர் கோயில் கருவறையில் இருப்பதாகவும், பனி காலத்தில் அதைக் கொணர்ந்து இந்தக் கோயிலில் வைத்து விடுவார்கள் என்றும் கூறினான்.

புராண நிகழ்ச்சிகளோடு மட்டுமின்றி, பத்ரிநாராயணர் ஆலயத்தோடும் தொடர்பு கொண்டுள்ள பாண்டுகேச்வரத்தைத் தரிசித்துவிட்டு, ஜோஷிமட் ஊரை நோக்கி மீண்டும் பயணமான போது, உடலிலும் உள்ளத்திலும் புத்துணர்ச்சி பொங்கிப் பெருகியது. மலைப் பகுதிகளின் காற்றைச் சுவாசிப்பதே உடலுக்கும் உள்ளத்திற்கும் தென்பூட்டுவதாக இருக்கிறது.

மாலை நாலரை மணிக்கு விஷ்ணுப்பிரயாகைக்கு வந்து சேர்ந்தோம். தௌலகிரியிலிருந்து வரும் தௌலி என்ற நதி அலகநந்தாவுடன் அங்கு சங்கமமாகிறது. நான்கு சங்கமங்களில் வெற்றிகரமாக ஸ்நானம் செய்த பிறகு இதை மட்டும் விட முடியுமா? ஆனால், அங்கு ஸ்நான கட்டங்களோ,

படிக்கட்டுகளோ காணப்படவில்லை. பாதையில் இருந்தபடியே எட்டிப் பார்த்தேன். இரண்டு நதிகளும் ஒன்றையொன்று மிகக் கடுமையாகத் தாக்கிக் கொண்டு, குமுறலோடும் உறுமலோடும் 'ஓ'வென இரைச்சலிட்டுக் கொண்டிருந்தன.

நாங்கள் தயங்கிக் கொண்டிருந்ததைக் கவனித்த ஒரு போலீஸ்காரர் எங்கள் உதவிக்கு வந்தார். அவர் அங்குள்ள பாலத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர். அப்போதுதான் சங்கமத்தில் குளித்துவிட்டு வந்திருக்கிறார்.

''உங்களால் இந்த இடத்தில் இறங்கி ஸ்நானம் செய்ய முடியாது. ஐம்பதடி மிக ஜாக்கிரதையாக இறங்கிச் செல்ல வேண்டும். என் பின்னால் வாருங்கள்'' என்று கூறி அழைத்துச் சென்றார் அவர். கால் விரல் வைக்கக்கூட முடியாமல் வழுக்கும் பாறையில் செங்குத்தாக இறங்குவது பெருமுயற்சியாகத் தான் இருந்தது. அந்த சாதுவான போலீஸ்காரர் எங்களுக்குக் கை கொடுத்து இறக்கிவிட்டு, பொறுமையுடன் சங்கமத்திற்கு அழைத்துச் சென்றார். நீரில் இறங்க வேண்டாம் என்று எச்சரித்து, பாறைகளின் மீதே அமரச் செய்தார். அங்கு வேகமாக வீசிய அலைகள் எங்கள் உடலை நனைத்தன. இல்லை, ஐஸ் அபிஷேகம் செய்தன!


குளிரால் உடல் முழுவதும் நடுங்க மேலே ஏறி வந்து, சங்கமத்தின் அருகில் உள்ள விஷ்ணு ஆலயத்தைத் தரிசனம் செய்து கொண்டோம். நாரத மகரிஷிக்கு நாராயணப் பெருமாள் அருள் வழங்கிய இடமாம் அது. ருத்ரப்பிரயாகையில் இருப்பது போல் இங்கும் சங்கமத்தில் ஒரு நாரதப் பாறை இருக்கிறது.

பாண்டுகேச்வரத்திலிருந்து ஜோஷி மட் திரும்பும் வழியில் ஒரு திருப்பம். அங்கு ஒரு ராணுவ ஜீப் நின்று கொண்டிருந்தது. இரண்டு ராணுவ அதிகாரிகள் மேற்பார்வையிட, இரண்டு மூன்று ஜவான்கள் பாதையின் குறுக்கே விழுந்திருந்த சிறு பாறைகளைச் சிரமப்பட்டு அப்புறப்படுத்திக் கொண் டிருந்தார்கள். என்னவென்று விசாரித்தோம்.

அங்கு வாழும் ஒரு குடும்பம்




சற்றுமுன் அங்கு மலை சரிந்து விழுந்திருக்கிறது. இரும்புப் பாறையாக இருந்த மலை எப்படிக் கற்கண்டுக் கட்டிகளாகப் 'பொல பொல'வென்று உதிர்ந்து விழுந்ததோ, புரியவில்லை! இரண்டு மணி நேரத்திற்கு முன்னால், நாங்கள் அந்த வழியாகத் தான் வந்திருக்கிறோம். திரும்புவதற்குள் இப்படி ஒரு விபத்து. எத்தனை பயங்கரமான மலை! எத்தனை ஆபத்தான பயணம்! அடுத்த கணம் என்ன நடக்கும் என்று தெரியாத நம் பொய்யான வாழ்க்கையை எத்தனை மெய்யாகப் பிரதி பலிக்கிறது இந்த இமயம். ஏ, இமயமே! உன்னைக் கண்டு நான் மலைக்கிறேன்; உன்னைக் கண்டு அஞ்சுகிறேன்; பயபக்தியோடு உன்னை வணங்குகிறேன்.



பாண்டுகேச்வரத்தில் ஒரு வீதி

அன்று சனிக்கிழமை. செப்டம்பர் 22-ம் தேதி. காலையில் எழுந்து குளித்து விட்டு, காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு, 'ஜோஷிமட்' கடைவீதியில் சுற்றிக் கொண்டிருந்தோம். கடை கடையாக ஏறி இறங்கினோம். கூலியாட்கள் சண்டை போட்டுக் கொண்டதை வேடிக்கை பார்த்தோம். இப்படியும் அப்படியும் வேகமாகப் போய்க் கொண்டிருந்த ராணுவ டிரக்குகளுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றோம். காலாற நடந்து, பழங்களைப் பதம் செய்து 'ஜாம்' தயாரிக்கும் தொழிற்சாலைக்குள் சென்று, அங்கு பணி புரிபவரைப் பேட்டி கண்டோம். அவர் அன்புடன் தந்த 'சாம்பிள்களை'யும் ருசித்தோம். தெரு ஓரத்தில் கட்டப்பட்டிருந்த வாராவதிச் சுவரில் அமர்ந்துகொண்டு, போகிற

ஸ்ரீ யோகபத்ரி, ஸ்ரீ வாசுதேவர் ஆலயங்கள்





ஸ்ரீ விஷ்ணுப் பிரயாகைக்கருகிலுள்ள
விஷ்ணு ஆலயம்



அலகநந்தா - தௌலி
நதி சங்கமம்

வர்களேயும் வருபவர்களேயும் கண் கொட்டாமல் பார்த்தோம். அவ்வழியே வந்த ஒரு கார்வாலி குடும்பத்தினர் ஸ்ரீநிவாசனே மிகவும் கவரவே, அவர்களே நிற்கச் சொல்லி போட்டோ எடுத்தார். பின்னர் சுற்றிலுமுள்ள மலேயுச்சி களேப் பார்த்து வியந்து கொண்டிருந்தோம். நதியின் அக்கரையிலுள்ள கோயில் ஒன்றிலிருந்து காற்றில் மிதந்து வந்த மணியோசையைக் கேட்டு ஆனந்தித்தோம். கண்ணுக்குத் தெரிந்த சின்னஞ்சிறு கிராமங்களின் பெயர்களே, அங்கு நின்றிருந்த ராணுவக் காவலாளியிடமிருந்து தெரிந்து கொண்டோம். இன்னும் என்னவெல்லாமோ செய்து பார்த்தோம். நேரம் ஆவதாகக் காணும். எங்களுக்கு மதியம் ஒரு மணி வரை அங்கு எப்படியாவது பொழுதைக் கழித்தாக வேண்டும். ஒரு மணிக்கு மேல்தான் ராணுவ அதிகாரியிடம் 'மாளு' கிராமத்திற்குப் போவதற்கான அனுமதி பெற முடியும்!

எப்படியோ ஒரு மணி ஆயிற்று. ஒரு மைல் நடந்து ராணுவ முகாமுக்குச் சென்ளும். எங்களே உள்ளேவிட மறுத்து விட்டார்கள். ஒரே கெடுபிடி. செக் போஸ்ட்டில் இருந்த காவலாளி, மாஜிஸ்டிரேட் 'எண்டார்ஸ்' செய்த விண்ணப்பத்தாளே எங்களிடமிருந்து பெற்று மற்ளுெரு ஜவானிடம் கொடுத்து, எங்களே அழைத்துப் போகச் சொன்ஞர். நாங்கள் அந்த ஜவானின் பின்ஞல் சென்ளும். கொஞ்ச தூரம் சென்றதும், எங்களே ஒரு மரத்தடியில் உட்காரச் சொல்லிவிட்டு, ஜவான் மட்டும் உள்ளே போஞர். பரீட்சை ரிசல்ட்டுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் போல் நாங்கள் காத்திருந்தோம். பதினேந்து நிமிடங்கள் கழித்து, அந்த ஜவான் திரும்பி வந்து, அதிகாரியின் கையொப்பம் இட்ட தாள்களே எங்களிடம் தந்தார். அப்பாடா..!

இரண்டரை மணிக்கு பஸ்ஸைப் பிடித்து, பத்ரிநாத்துக்குப் புறப் பட்டோம்.



தேவதர்சனி (பத்ரிநாத்தின் முதல் தரிசனம்)

8

பாண்டுகேச்வரத்திலிருந்து பத்ரிநாத் வரை ஒரே மலையேற்றம்தான். அடுத்து பத்து மைல்களில் நாம் நாலாயிரம் அடி ஏறுகிறோம். செங்குத்தான ஏற்றம். பயங்கரமான திருப்பங்கள். ஆனால், பஸ் டிரைவர் அநாயாசமாக ஓட்டுகிறார். பழக்கம் மட்டுமல்ல; அதைத் தைரியம் என்று கூடச் சொல்ல முடியாது. ஏதோ ஒரு நம்பிக்கை. அவரது நம்பிக்கையைப் பார்க்கும்போது நமது அச்சத்தைக் கண்டு நமக்கே ஒரு கூச்சம் ஏற்படுகிறது.

ஐந்தாவது மைலில், 'ஹனுமான்சட்டி' வந்தது. 'சட்டி' என்றால் தங்குமிடம் என்று பொருள். சிறு சத்திரமும், சில கடைகளும் இருக்கும். அந்தக் காலத்தில் நாற்றெண்பது மைல்களும் கால் நடையாகவே சென்றவர்கள், வழியில் இருக்கும் 'சட்டி'களை நம்பித்தான் சென்றார்கள். அங்கு இரவு தங்குவதற்கும், சிறிது ஆகாரம் செய்வதற்கும் வசதிகள் இருக்கும்; இப்போதும் இருக்கின்றன. ஹனுமான்சட்டி, பத்ரிநாத்துக்குச் செல்லும் பாதையில் உள்ள கடைசிச் சட்டி. அந்தக் காலத்தில் நடந்து சென்றவர்கள் அங்கிருந்து பத்ரிநாத் செல்லும் வரை வழியில் எங்குமே தங்க முடியாது. பன்னிரண்டு

ஆண்டுகளுக்கு முன்புவரை இதே நிலைதான். அதற்குப் பிறகுதான் ஜோஷி மடத்திலிருந்து பத்ரிநாத்துக்கு பஸ் பாதை அமைக்கப்பட்டது.

அது ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி நடமாடிய திருத்தலம். ஸ்ரீ ராமபிரானின் பட்டாபிஷேகம் நிறைவுற்றதும், சிறிய திருவடி இங்கு வந்து வசிக்கத் தொடங்கினாராம். அச்சமயத்தில்தான் அவரும், பீமசேனனும் சந்தித்து ஒருவரையொருவர் அறிந்து கொண்ட அற்புத நிகழ்ச்சி நடைபெற்றதாம்.

தங்களது வனவாசத்தின்போது, பத்ரிகாச்ரமப் பகுதியில் பாண்டவர்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒருநாள் திரௌபதி, சௌகந்திகா மலர் வேண்டும் என்று பீமசேனனிடம் கேட்டாள். ''எங்கிருந்தாலும் கொண்டு வருகிறேன்'' என்று உறுதியளித்துவிட்டுப் பீமன் புறப்பட்டான். இயற்கையின் சீற்றத்தையும், காட்டு மிருகங்களின் தொந்தரவுகளையும் எதிர்த்து முறியடித்துக் கொண்டு வெற்றி நடை போட்டு வந்து கொண்டிருந்தான் பீமன். அப்போது வலுவிழந்த வயதான குரங்கு ஒன்று குறுக்கே படுத்திருப்பதைக் கண்டான்: ''ஏ, கிழக் குரங்கே, நான் வருவது உன் கண்ணுக்குத் தெரியவில்லையா? மரியாதையாக எழுந்து ஓடு'' என்று உரக்க முழங்கினான்.

குரங்கு சற்றும் அசரவில்லை; அசையவுமில்லை. ஈனக் குரலில் பேசியது: ''அப்பா, நீ ஏன் இந்தப் பக்கம் வந்தாய்? இந்த மலைப் பிரதேசத்தில் நீ போவது நல்லது அல்ல. உனக்குப் பசியாக இருந்தால் இதோ, இந்தத் தோப்பிலுள்ள பழங்களைச் சாப்பிட்டு விட்டுத் திரும்பிப் போய் விடு.''

கடுங் கோபம் வந்தது பீமசேனனுக்கு.

''ஏ, குரங்கே! என்ன உளறுகிறாய்? எனக்கா புத்தி சொல்கிறாய்? என்னிடமா வாலாட்டுகிறாய்? நான் யார் தெரியுமா? பீமசேனன். வாயு குமாரன். நான் எங்கு வேண்டுமானாலும் போவேன். என்னை ஒருவராலும் தடுக்க முடியாது. மரியாதையாக எனக்கு வழி விடப் போகிறாயா? அல்லது உன் காதைப் பிடித்துத் திருகி, மலைக்கு அப்பால் தூக்கி எறியட்டுமா?'' என்று கேட்டான்.

ஜோஷி மட்டில் பார்த்த
ஒரு மலைவாசித் தம்பதி



குரங்கு சிரித்தது. நிதானமாக ஒரு கொட்டாவி விட்டது: ''பராக்கிரமசாலி பீமசேனா, எனக்கு மிகவும் தள்ளாமையாக இருக்கிறது. என்னால் சிறிது கூட நகர முடியவில்லை. தயவுசெய்து நீ என்னை எடுத்து, ஒரு ஓரமாக விட்டு விட்டு, உன் வழியே போ. நான் உனக்குத் தடையாக இருக்க விரும்பவில்லை'' என்றது.

அதைக் கேட்ட பீமன், நெருங்கி வந்து அலட்சியமாக அந்தக் குரங்கின்

வாலை முறுக்குவதற்காகக் குனிந்தான். ஒரு கையால் அதைத் தூக்கப் பார்த்தான்; முடியவில்லை. இரண்டு கைகளாலும் முயன்றான்; முடியவில்லை. முக்கினான்; முனகினான்; திணறினான்; திண்டாடினான். யானைகளைத் தூக்கிப் பந்தாடியவனால் அந்தக் கிழக் குரங்கின் வாலைக்கூட அசைக்க முடியவில்லை. அதைப் பார்த்துக் குரங்கு லேசாகச் சிரித்தது.



பீமன் வெட்கத்தால் மனம் குன்றினான். குரங்கின் முன் மண்டியிட்டான்: ''நீங்கள் சாதாரணக் குரங்கு அல்ல. இந்த வடிவத்தில் இருக்கும் நாங்கள் ஒரு கந்தர்வனா, அல்லது சித்த புருஷனா?'' என்று கேட்டான்.

ஹனுமான்சட்டி ஆஞ்சநேயர் கோயில்

உடனே குரங்கு எழுந்து நின்று இரு கரம் நீட்டி, பீமசேனனைத் தழுவிக் கொண்டது:

''பீமசேனா, நான் கந்தர்வனும் அல்ல, சித்த புருஷனும் அல்ல; நான் உன் சகோதரனான ஆஞ்சநேயன். நீ இந்தப் பக்கம் செல்வது ஆபத்து என்று அறிந்ததால், உன் பாதையின் குறுக்கே வந்து படுத்துக் கொண்டேன். நீ தேடிக் கொண்டு வந்த சௌகந்திகா மலர், இங்குள்ள நீரோடையின் கரையிலேயே இருக்கிறது, எத்தனை வேண்டுமானாலும் எடுத்துப் போ.''

இதைக் கேட்டதும் பீமசேனனின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. ஆஞ்சநேயரின் பாதங்களில் விழுந்து, தன் கர்வத்தை மன்னித்து அருளும்படிக் கோரி, தனக்கு அவருடைய விசுவரூப தரிசனத்தைக் காட்டும்படி வேண்டினான். உடனே அனுமனின் சரீரம் வளர்ந்தது. சுற்றிலுமுள்ள மலைகளையெல்லாம்விட உயர்ந்து நின்றார் அவர். அவரது முகம் மேக மண்டலத்தில் முட்டி நின்றது. ஆயிரம் கோடி சூரியன்கள் பிரகாசித்தது போல், அப் பிரதேசமே தேஜோமயமாய் விளங்கியது. அம் மாபெரும் சக்திக்கு முன்னால், சக்தியற்றவனாக, கண்களில் நீர் மல்க, ரோமாஞ்சலியுடன் இரு கை கூப்பி நின்றான் பீமசேனன்.

இறுதியில் பீமன் பிரியா விடை பெற்ற போது, ஸ்ரீ ஆஞ்சநேயர், பீமசேனனை மறுபடியும் இறுகத் தழுவிக் கொண்டு, ''சகோதரனே, சீக்கிரமே பாரதப் போர் தொடங்கப் போகிறது. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் கடும் போர் நிகழப் போகிறது. ஆனால் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களுக்கு நான் துணை நிற்பேன். போர்க்களத்தில் நீ சிங்கமாய்க் கர்ஜிக்கும்போது, என் குரலும் சேர்ந்து ஒலித்து, துரியோதனனின் படைகளை ஓட ஓட விரட்டும். நான் அர்ஜுனனின் தேர்க் கொடியில் வீற்றிருந்து, உங்களுக்கு வெற்றியைத் தேடித் தருவேன். மனம் தளராதீர்கள்'' என்று உறுதிமொழி அளித்தார்.

மலரைத் தேடி வந்த பீமனுக்கு, நிகழப் போகும் போரில் வெற்றி மாலைக்கான அச்சாரமே கிடைத்துவிட்டது. மலரோடு இந்த மகிழ்ச்சிச் செய்தியையும் எடுத்துச் சென்றான் அவன்.

எசமானனின் மாளிகை வாயிலில் காவல் இருக்கும் விசுவாசப் பணியாள் போல், பத்ரிநாராயணரின் சேவகனுக ஹனுமான்சட்டியில் அமர்ந்திருக்கும் ஆஞ்சநேய மூர்த்திக்குப் பாதையோரத்திலேயே ஒரு சிறு கோயில் இருக்கிறது.

பத்ரிநாத்தை நெருங்க நெருங்க, பூலோகத்தை விட்டு வைகுண்டத் திற்குச் செல்வது போன்ற உணர்வே ஏற்படுகிறது. சீதோஷ்ண நிலை திடீரென்று மாறிவிடுவதால், நம் உடலின் சில்லுப்பு, உள்ளத்தின் சிலிர்ப்புக்கு அடையாளமாக அமைந்து விடுகிறது. மலைகளும், காடுகளும், பள்ளத்தாக்கு களும், பாய்ந்து ஓடும் நீரும் நம்மோடு தோழமை பூண்டு உறவாடுவது போல் ஓர் ஐக்கிய பாவம் ஏற்பட்டு விடுகிறது. வாழ்க்கையின் இலட்சியத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற பிரமை நம்மை ஆட்கொள்கிறது.

அடேயப்பா! எத்தனை ஆண்டுகளாக 'பத்ரிநாத்' என்ற பெயர் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது! அங்கு போய் வந்தவர்களெல்லாம் கதை கதையாய்ச் சொல்லி எவ்வளவு ஆவலைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். 'காதால் கேட்பதோடு சரி, கட்டுரைகளைப் படிப்பதோடு சரி, படங்களைப் பார்ப்பதோடு சரி, அங்கெல்லாம் நம்மால் எப்படிப் போக முடியும்' என்று நான் நினைத்து ஏங்கிய நாட்கள் எத்தனையெத்தனை? அந்தப் பத்ரிநாத்தையா நான் நெருங்கிக் கொண்டிருக்கிறேன்? இன்னும் பத்து நிமிடங்களில் அப்புனிதத் தலத்தை நான் தரிசிக்கப் போகிறேனா? பத்ரிகாச்ரமப் புனித மண்ணை மிதிக்கப் போகிறேனா? உண்மையாகவா? என்னால் நம்ப முடியவில்லையே!

இதோ, தேவதர்சினிக்கு வந்துவிட்டோம். பல்வேறு மொழிகளில் எழுதப் பட்ட போர்டு கண்ணுக்குத் தெரிகிறது. அங்கிருந்து பார்த்தால் தொலைவில் பத்ரிநாத் ஊரும், ஆலயமும் தெரிகின்றன. உவகை மேலிடுகிறது. நெஞ்சம் பிரம்மானந்தத்தில் மிதக்கிறது. வைகுண்ட தரிசனம் கிடைத்து விட்டது.

''பத்ரிவிஷால் கி ஜெய்!''—பயணிகள் முழங்குகிறார்கள். 'நாராயணா, நாராயணா, நாராயணா'—நம் மனம் ஜபிக்கத் தொடங்குகிறது.

அண்ட சராசரங்களின் ஆத்மாவான நாராயணன், அனைவருக்கும் அடைக்கலமான நாராயணன் உறையும் பூமி அது. பிரணவ மந்திர சொரூபி யான மூலப் பொருள், உலக மக்கள் மீது பெரும் கருணை கொண்டு அஷ்டாட்சர மந்திரத்தை உபதேசித்தருள, நர நாராயணனாக எழுந்தருளி யிருக்கும் புண்ணிய பூமி. முற்பிறவியில் செய்த நல்வினையால், இப் பிறவியில் கிட்டிய சற்குருவின் துணையால் கிடைத்தற்கரிய பேறு பெற்றிருக்கிறோம். இங்கு நின்றபடியே மீண்டும் அத் திருத்தலத்தை ஒரு முறை தரிசித்துக் கொண்டு மேலே நடப்போம்.

எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்கு நடந்து சென்ற போது, கடுமையாகக் குளிரத் தொடங்கிவிட்டது. பஸ் நிலையத்திலிருந்து 'பஜனை ஆச்ரமம்' என்ற அந்த இடம் சுமார் ஒரு மைல் தொலைவு இருந்தது. அதற்கு எதிரில்தான், திங்கட்கிழமையன்று பத்ரிக்கு வரப்போகும் ஸ்ரீ காமகோடி புதுப் பெரியவர் முகாமிடப் போவதாக அறிந்தோம்.



பத்ரிநாத் ஊரை நோக்கி ....

பெட்டியிலிருந்த கம்பளி ஆடைகளை யெல்லாம் முதன் முறையாக வெளியே எடுத்து ஒன்றன் மீது ஒன்றாக அணிந்து கொண்டு வெளியே புறப்பட்டோம். அப்படியும் குளிர் அடங்குவதாகக் காணோம். 'ஜில்'லென்ற வாடைக் காற்று எங்களைத் தாக்கத் தொடங்கிற்று. ஐந்தரை மணிக்கே இருள் கவிந்து லேசாக மழை தூறிக் கொண்டிருந்தது. சுற்றிலும் உள்ள மலைகளெல்லாம் கறுத்து உயர்ந்து தவத்தில் ஆழ்ந்திருக்கும் மகரிஷிகளைப் போல் மௌனமாக அமர்ந்திருந்தன. அலகநந்தாவின் 'ஓ'வென்ற இரைச்சல் தேனிசைப் பின்னணியாக, வேத பாராயணமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

நூறடி நடந்து, பாலக்காட்டைச் சேர்ந்த மணி ஐயர் ஓட்டலுக்கு வந்து, சூடாக இரண்டு தோசைகள் சாப்பிட்டு, காப்பியும் குடித்தோம். பின்னர் இரவு சாப்பாட்டிற்கு அவரிடம் ஆர்டர் கொடுத்துவிட்டு, கோயிலை நோக்கிப் புறப்பட்டோம்.

அங்கிருந்து கோயில் ஒரு பர்லாங் தொலைவு இருக்கும். வடக்கு தெற்காக ஓடும் அலகநந்தாவின் கரையோரமாக நடந்து சென்று, இரும்புப் பாலத்தைக் கடந்து, மேற்குக் கரையை அடைந்தோம். அங்குதான் 'தப்தகுண்டம்' என்ற வெந்நீர் ஊற்றுக்குளம் இருக்கிறது. அந்த நேரத்திலும் ஒரிருவர் ஸ்நானம் செய்து கொண்டிருந்தனர். யாரோ கீழே அடுப்பு மூட்டி வெந்நீர் போட்டுக் கொண்டிருப்பது போல் அதில் ஆவி பறந்து கொண்டிருந்தது!

படிகள் ஏறிச் சென்ருேம். வண்ணச் சித்திர வேலைப்பாடுகள் மிகுந்த ஆலயத்தின் முன்வாசல் அற்புதமாகக் காட்சி அளித்தது. கையெடுத்துக் கும்பிட்டோம். அங்கு குழுமியிருந்த பக்தர்களின்'நாராயணு நாராயணு' என்ற பரவசக் குரல் காதில் விழுந்தது. தென்கோடி கேரளத்தில், குருவாயூரப்பன் கோயிலில் நாம் கேட்கும் அதே திருநாமத்தை வடகோடியிலும் கேட்க முடிந்தது. அதே உணர்ச்சிப் பெருக்கு; அதே பக்திபாவம். உச்சரிப்புத்தான் மாறுபட்டிருந்தது. மாறுபாடுகள் ஆயிரம் இருந்தாலென்ன? ஆண்டவனின் திருநாமம் இதர வேற்றுமைகளைத் தகர்த்து, உள்ளங்களை ஒருங்கிணைத்து, இமயம் முதல் குமரிவரை ஒரே புனிதத் தலமாக, புண்ணிய பாரதமாக விளங்கும்படிச் செய்திருக்கிறதே!

தரை மட்டத்திலிருந்து ஐம்பதடி உயரத்தில் ஆலயம் இருக்கிறது. படிகள் ஏறிச் செல்ல வேண்டும். அடைய முடியாத இலட்சியத்தை அடைந்து விட்ட பெருமிதத்தில் வேகமாக உள்ளே செல்கிருேம். கோபுர வாயிலில் இருக்கும் பெரிய கண்டாமணியைத் தலை நிமிர்ந்து பார்த்துக் கொண்டே செல்கிருேம்.

கிழக்கு பார்த்த கோபுர வாயில். திருச் சந்நிதியும் கிழக்கேதான் நோக்கிக் கொண்டிருக்கிறது. முன் மண்டபத்தில் கருட பகவான் சுவாமியை நோக்கியபடி எழுந்தருளி யிருக்கிருர். துவாரபாலகர்களும் இருக்கிருர்கள்.

முன் மண்டபத்தை இடித்துப் புதிதாகக் கட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. குறுக்கும் நெடுக்குமாகக் கம்புகள் நின்று கொண்டிருந்தன. அவற்றின் மீது இடித்துக் கொள்ளாமல் செல்லும்படி அங்கு கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தவர் கூறினர்.

உள்ளே அர்ச்சனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ பஜனைப் பாடல்கள் ஒலிபெருக்கியில் மிதந்து வந்து கொண்டிருந்தன. 'நாராயணு, நாராயணு, நாராயணு, பத்ரிநாராயணு!' என்று ஒரு சுகமான சன்னமான குரல் பாட, மற்றவர்களெல்லாரும் கோரஸாக உடன் பாடிக் கொண் டிருந்தனர்.

முதலில் கோயிலை வலம் வருவோம். கிழக்குப் பிராகார மதிற் சுவரிலுள்ள பிரும்மா, விஷ்ணு, சிவன் மூவரையும் முதலில் தரிசித்துக் கொள்கிருேம். அடுத்து ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி இருக்கிருர். அதற்கு அடுத்து ஸ்ரீ கணபதி. நான்கு கரங்களுடன் தவக் கோலத்தில் எழுந்தருளியிருக்கிருர் அவர். அவரது துதிக்கை வலப்புறமாகத் திரும்பி, இடக் கையில் இருக்கும் மோதகத்தை ருசி பார்த்துக் கொண்டிருக்கிறது.

தென் பிராகாரத்தில், வடக்கே பார்த்து ஸ்ரீ மகாலட்சுமியின் திருச் சந்நிதியிருக்கிறது. சிறு சாளக்கிராம சுயம்புமூர்த்தி அது. அலங்காரம் செய்து வைத்திருப்பதைப் பார்த்தால், பெரிய சிலை போல் தோற்றம் அளிக்கிறது. நான்கு கரங்கள் இருக்கின்றன. மேல் வலக் கை அபயஹஸ்தமாக இருக்கிறது. மேல் இடக் கையில் தாமரை மலர். கீழ் வலக் கையில் ஜபமாலை இருக்கிறது. நான்காவது கரத்தைத் தொடையில் வைத்துக் கொண்டிருக்கிருள். பக்கத்தில் ஸ்ரீதேவியும் இருக்கிருள். அங்கு சேஷ சாளக்கிராமமும் ஒன்று இருக்கிறது.

மகாலட்சுமி சந்நிதிக்கு அடுத்து, திண்ணையுடன் கூடிய ஒரு சிறு மண்டபம் இருக்கிறது. அங்கு கஜானு பெட்டியுடன் ஒரு வயதானவர் அமர்ந்து கொண்டு இருக்கிருர். நீளமான கம்பளிக் கோட்டும், தலைப்பாகையும் அணிந்து கம்பீரமாக இருக்கும் அவரைப் பார்த்தவுடனேயே கண்டிப்புமிக்க ஓர் ஆசாமி என்பது புரிந்துவிடுகிறது. அபிஷேகமோ, அர்ச்சனையோ, சகஸ்ரநாமமோ, அஷ்டோத்திரமோ, காணிக்கையோ எதுவாக இருந்தாலும் இவரிடம் பணத்தைக் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். எத்தனை கூட்டம் வந்தாலும் பொறுமையாகப் பணத்தை வாங்கி, நிதானமாக எண்ணிப் பார்த்து, சாவகாசமாக ரசீது கொடுக்கும் அவரிடம் எரிச்சல்பட்டுப் பயனில்லை. இரைச்சல் போட்டாலும் ஒன்றும் நடக்காது. நம்மைச் சட்டை செய்யமாட்டார். 'இருங்கோ இருங்கோ' என்ற தமிழ் வார்த்தையை மட்டும் கற்று வைத்துக் கொண்டிருக்கிருர் மனுஷன்!

அந்த மண்டபத்திற்குள் நுழைகிறோம். அதுதான் ஸ்ரீ ஆதிசங்கரரின் கத்தி—அதாவது ஆசனம். அங்கு மார்வாடித் திண்டு போல் ஒன்று போடப்பட்டிருக்கிறது. அதன் மீது வெள்ளியினுலான பத்ரிநாராயணரின் வெள்ளி விக்கிரகம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. முன்னுல் ஸ்ரீ ஆதிசங்கரரின் சலவைக் கல் சிலை ஒன்று இருக்கிறது. சுவரில் ஸ்ரீ காஞ்சிப் பெரியவரின் வண்ணப்படம் ஒன்றும் காட்சி தருகிறது. அங்கு ஒரு மூலையில் பெரிய பெரிய செப்பு, இரும்புப் பட்டயங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை பாண்டுகேச்வர யோக பத்ரி ஆலயத்தில் கண்டு எடுக்கப்பட்டவையாம். பாண்டு மகாராஜாவினுல் அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் அவற்றில் என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பதை இனிமேல்தான் கண்டுபிடிக்க வேண்டுமாம்.


அந்தப் பெரிய திண்டின் கீழே ஒரு காவி வஸ்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. அதை மிக ரகசியமாக எடுத்து எனக்குக் காட்டிய பண்டா, ''இது ஆதிசங்கராசாரியாரின் வஸ்திரம்'' என்று கூறினுர். நான் மெய்சிலிர்த்துப்

அலகநந்தாவும் பத்ரிநாத் ஊரும் (நாராயண மலையையும் நரமலையையும் காணலாம்)





ஆலயத்தின் முன் மண்டபம்



தெற்குப் பிராகாரம்

போனேன். ஒரு கணம் என்னென்னவோ நினைவுகளில் சிக்குண்டு, ஏதேதோ கற்பனைகளில் மூழ்கி ஸ்ரீ ஆதிசங்கர பகவானையே நேரில் தரிசித்த ஓர் உணர்வைப் பெற்றுப் புனிதனானேன்.

ஸ்ரீ ஆதிசங்கரர் கத்திக்கு எதிரே, கருவறைச் சுவரையொட்டி ஒரு நந்தி காணப்படுகிறது. மேற்குப் பிராகாரத்தில் பிரசாதம் விற்கும் இடம் இருக்கிறது. வடமேற்கு மூலையில் இடக்கையில் சஞ்சீவி மலையுடன் ஒரு பெரிய சலவைக்கல் ஆஞ்சநேயர் நின்று கொண்டிருக்கிறார். வலப் பிராகாரத்திலுள்ள தாழ்வார மண்டபத்தில் பஜனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. 'வீணை மகராஜ்' என்பவர் ஒரு கையால் ருத்ர வீணையை மீட்டிக் கொண்டு, மற்றொரு கையால் தாளம் போட்டுக் கொண்டே பாடிக் கொண்டிருந்தார். அங்கு அமர்ந்திருந்த நூறு பேர் கூடவே பாடிக் கொண்டிருந்தனர். 'ராமகிருஷ்ண நாராயண, கோவிந்த முராரே....' என்று பக்திச் சுவையுடன் அவர் மெய்யுருகப் பாடியது நம் நெஞ்சங்களைக் கரைய வைத்தது.


அடுத்து, க்ஷேத்திரபாலரும் கிழக்குப் பிராகாரச் சுவரில் மேற்கே பார்த்து சூர்யநாராயண மூர்த்தியும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

நாம் கோயிலை வலம் வந்தாகி விட்டது. சிறிய சுற்றுதான். பிராகாரமும் அதிக அகலமில்லை. திருவிழா நாட்களில் எப்படித்தான் இங்கே நெரிசலைக் கட்டுப்படுத்துகிறார்களோ?

கருவறைக்குச் செல்ல இரண்டு வழிகள் இருக்கின்றன. கிழக்குப்புறமாக வும் செல்லலாம். தென் பிராகாரத்திலுள்ள வழியாகவும் செல்லலாம். நாங்கள் இரண்டாவது வழியாகச் சென்றோம்.



ஸ்ரீ மகாலட்சுமி சந்நிதி



விமான தரிசனம்

அர்த்த மண்டபம் ஒரு சிறு அறை. மிகவும் சிரமப்பட்டு இருபது முப்பது பேர் அங்கு நெருக்கிக் கொண்டு நிற்கலாம், அவ்வளவுதான். வலப்புறம் ஒரு சிறு திண்ணை இருக்கிறது. அதில் இரண்டு மூன்று பண்டாக்கள் அமர்ந்து சகஸ்ரநாம பாராயணம் செய்து கொண்டிருந்தார்கள். உத்தரத்தில் பல ரகப் பட்ட ஆலய மணிகள் தொங்கிக் கொண்டிருந்தன. முன்னுல் இருப்பவர்கள் அமர்ந்தால்தான், பின்னுல் இருப்பவர்கள் நன்ருகத் தரிசனம் செய்ய முடியும்.

கருவறையினுள் 'ராவல்' என்று அழைக்கப்படும் கேரள நம்பூத்ரி பிரம்மச்சாரி பூஜை செய்து கொண்டிருந்தார். பத்ரிநாராயணருக்குப் பூஜை செய்யும் உரிமையைப் பெற்றிருப்பவர் அவர்.

பஞ்சக்கச்சம் கட்டி, நீளமான கறுப்புக் கோட்டு அணிந்து கொண்டிருந் தார் அவர். கிராப்புத் தலைதான். எடுப்பான நாசி. நல்ல சிவப்பு. முகத்தில் ஒருவித வசிகரமிருந்தது. அர்ச்சனை செய்து கொண்டே அவ்வப்போது பக்தர்கள் பக்கம் திரும்புகிருர். அவர்களில் ஓரிருவரை அடையாளம் கண்டு புன்முறுவல் புரிகிருர். சிலரை முன்னுல் வந்து அமரும்படிச் சைகை காட்டுகிருர். அதைப் பார்த்ததும் நமக்கு என்னவோ போலிருக்கிறது!

நாம் பத்ரிநாராயணரைப் பார்க்கிருேம். முக மண்டலம் மட்டும்தான் தரிசனமாகிறது. எத்தனை உற்று நோக்கினுலும் உருவம் தெளிவாகத் தெரிய வில்லை. வைர, வைடூரிய, மாணிக்க, மரகதக் கற்களாலான மணிமகுடம் மின்னுெளியில் மின்னி கண்ணைப் பறிக்கிறது. அற்புதமான வண்ண மலர் அலங்காரம் நெஞ்சை அள்ளுகிறது. இதுவரை மானசிகமாகக் கண்டு நம்



பூஜை செய்யும் ராவல்..

சிந்தையைப் பறி கொடுத்திருந்த மூர்த்தியை நேரில் தரிசித்த பெருமிதத்தால் உள்ளம் பூரிக்கிறது.

பூஜை முடிந்து தீபாராதனை நடை பெற்றது. அந்தத் திவ்ய மங்கள ஒளியில் அங்கிருக்கும் ஒவ்வொரு மூர்த்தியாகத் தரிசித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ நாராயணமூர்த்திக்கு இடப்புறம் தவக்கோலத்திலிருக்கும் நாராயணர் சிலையும் நரன் சிலையும் இருக்கின்றன. கை கூப்பியபடி நிற்கும் கருடனின் சிறு பஞ்சலோக விக்ரகம் இருக்கிறது. மார்பளவு உள்ள நாரத மகரிஷியின் சிறு விக்ரகமும், வலப்புறக் கோடியில் குபேரனின் விக்ரகமும் இருக்கின்றன. அப் பெரிய முகத்தில் மந்தஹாஸம் தவழ்ந்து கொண்டிருக்கிறது. அங்கிருக்கும் உத்தவரின் விக்ரகம்தான் ஆலயத்தின் உற்சவமூர்த்தி.

இரவில் பூஜை, அர்ச்சனைகளெல்லாம் முடிந்த பிறகு கடைசியாக 'கீத கோவிந்த்' நடைபெறுகிறது. பகவானின் பெருமைகளைப் பாடிக்கொண்டு ராவல், ஒவ்வோர் அலங்கார மாகக் களைய, சயனாரத்தி ஆகிறது. அப்போது ஸ்ரீ நாராயணமூர்த்தியின் சுயம்பு சாளக்கிராமச் சிலையை நாம் நன்ருகத் தரிசனம் செய்கிறோம். இரண்டு கைகளைக் கோத்துக் கொண்டு, தவ நிலையில் பத்மாசனத்தில் பகவான் அமர்ந்திருக்கிறார். ராவல், சந்தனக் காப்பு அலங்காரம் செய்கிறார். அந்தக் காட்சி நம் தாபங்களைப் போக்கி நெஞ்சைக் குளிர்விக்கிறது. அப்படியே பரமானந்தத்தில் திளைத்து, பக்தியில் லயித்துப் போகிறோம்.

அன்றாட வாழ்க்கையில் நாம் திட்டமிடாமலேயே சில நிகழ்ச்சிகள் நடைபெறும். அவற்றைப் பற்றிப் பின்னர் நினைத்துப் பார்க்கும்போது நமக்கு வியப்பு ஏற்படும். 'எல்லாம் தெய்வ சங்கல்பம்' என்று எண்ணி மன நிறைவு பெறுவோம். வாழ்க்கையில் ஒரு முறையாவது தரிசித்துவிட வேண்டிய பத்ரி நாராயணரை முதன்முறையாக நான் தரிசித்தது ஒரு சனிக்கிழமையன்றுதான். அன்று ஏகாதசி புண்ணிய தினமும்கூட. இது சிறிதும் எதிர்பாராத, திட்டமிடப்படாத ஏற்பாடு. யதேச்சையாக ஏற்பட்டதென்றாலும், இந்த அரிய வாய்ப்பைக் குறித்துப் புளகிதம் அடையாமல் இருக்க முடியவில்லை.

அன்றிரவு பத்ரிநாத்தில் சரியான குளிர். இண்டு இடுக்கில்லாமல் கதவுகளை எல்லாம் அடைத்து, இருந்ததையெல்லாம் எடுத்து மேலே போர்த்திக் கொண்டும் குளிரைச் சமாளிக்க முடியாமல் திண்டாடிவிட்டேன். இரவு

தூக்கமே வரவில்லை. செப்டம்பரிலேயே இப்படியிருந்தால், அக்டோபர், நவம்பரில் எப்படி இருக்குமோ? நினைக்கும்போதே நடுங்கியது!

அதிகாலை ஆறரை, ஏழு மணி இருக்கும். பத்ரிநாத்தில் ஓர் அற்புதமான காட்சியைக் கண்டேன். என் வாழ்நாளில் அதுவரை பார்த்திராத ஓர் அரிய காட்சி அது. வாழ்க்கை முழுவதும் மறக்க முடியாத மகோன்னதக் காட்சி. பத்ரி ஆலயத்திற்குப் பின்னால் இருக்கும் நாராயண மலைக்குப் பின்புறம் ஒரு மலைச் சிகரம் தெரிந்தது. அது வெள்ளியை உருக்கி வார்த்தது போல் தோற்றமளித்தது. சூரிய ஒளியில் அது 'பளிச் பளிச்'சென்று மின்னிய போது கண் கூசியது. சற்றைக்கெல்லாம் மேகக் கூட்டம் வந்து அதை மறைத்தது. அது விலகியதும் மீண்டும் அச் சிகரம் சூரியனைப் போல் பிரகாசித்தது.


அது நீலகண்ட பர்வதம். 21,600 அடி உயரம். பத்ரிநாத்தைவிட இருமடங்கு உயரமானது. இமயமலைச் சிகரங்களிலேயே இது மிகவும் அபாயம் மிக்கதாகும். மிகச் செங்குத்தான ஏற்றம். மலைச்சரிவுகளும் அதிகம்.

வருடம் முழுவதும் அங்கு பனி உறைவதால், அது ஐஸ் சிகரமாகவே இருக்கிறது. வெண்ணீறணிந்த சிவபெருமானாகவே நினைத்து நாங்கள் கன்னத்தில் போட்டுக் கொண்டோம். அழகுதானே ஆனந்தம்! ஆனந்தம் தானே ஆண்டவன்!

பத்ரிநாத்தின் சிறப்புக்களில் ஒன்று தப்த குண்டம் என்ற சுடுநீர் குண்டம். இயற்கையின் புரியாத புதிர்களில் இதுவும் ஒன்று. ஐஸ் நதியாக அலகநந்தா ஓடுகிறது! பக்கத்திலேயே கொதிக்கும் வெந்நீர் ஊற்றும் இருக்கிறது. பூகர்ப்ப விஞ்ஞானிகள் எத்தனையோ விளக்கங்கள் தருகிறார்கள். விளக்கங்கள் தந்துவிடுவதாலேயே இயற்கையின் மகிமை குறைந்து விடுமா? தங்கள் அறிவுக்குப் புலப்படாத இயற்கையின் அதிசயங்களை ஆண்டவனின் செயலாகக் கருதிப் போற்றி வணங்குவதில் தவறென்ன? எல்லாவற்றையும் அறிந்து விட்டதாக இறுமாந்திருக்கும் விஞ்ஞானி கூடத்தான் சில சமயம் மூக்கில் விரலை வைக்கிறார்; தலையைச் சொறிகிறார். நம்மையும் மீறிய சக்தி ஒன்று இருக்கிறது என்று அரை மனத்தோடாவது ஒப்புக்கொள்கிறார்.

சுடுநீரோடு அலகநந்தாவின் நீரைக் கலந்து ஸ்நானம் செய்வதுதான் மிக விசேஷமாம். அது விசேஷமோ இல்லையோ, அப்படிக் கலந்து குளித்தால் உடலுக்கு இதமாக இருக்கிறது. தப்த குண்டத்தில் கையையோ, காலையோ வைத்துவிட்டால் கொப்புளித்து விடும் போலிருக்கிறது. அது அத்தனை சூடு. பயந்தால், பயந்து கொண்டிருக்க வேண்டியதுதான். ஸ்நானம்

பூஜைக்குச் செல்கிறார்





அலகநந்தா ஸ்நான கட்டம்

செய்யவே முடியாது. 'டபக்'கென்று அதில் குதித்து விட வேண்டும். இடுப்பளவு ஆழம்தான். ஒரு கண நேரம் நம்மால் சூடு தாங்க முடியாது. அதைப் பொறுத்துக் கொண்டு விட்டால், பிறகு அந்நீரிலிருந்து எழுந்து வரவே மனம் வருவதில்லை. அத்தனை சுகமாக இருக்கிறது.

மூல குண்டத்தைத் தவிர, இரண்டு மூன்று சிறு குண்டங்களும் இருக்கின்றன. பெண்மணிகளுக்கென்று அடைப்புக்களுடன் ஒரு தொட்டியும் இருக்கிறது. எல்லாவற்றுக்கும் ஒரிஜினல் குண்டத்திலிருந்து நீர் விடப்படுகிறது. கடைசியில் எல்லா நீரும் அலகநந்தாவுடன் கலந்து விடுகிறது.

நான் வீம்புக்காக அலகநந்தாவிலும் குளித்தேன். பத்ரிநாத்தில் அலகநந்தா ஐஸ் ரயிலாக, எக்ஸ்பிரஸ் வேகத்தில் ஓடுகிறது. நீர் நம் மேலே படும்போது, கத்தியால் வெட்டுவது போலிருக்கிறது. காக்காய்க் குளிப்புத் தான். அதற்கு மேல் ஆசைப்படுவது அறிவீனம்.

தப்த குண்டத்தினருகில் நின்றுகொண்டிருந்தால் நன்ருகப் பொழுது போய்விடும். எல்லோரும் சமம் என்ற சமதர்ம தத்துவத்தை அங்கு நேரில் காணலாம். ஏழையாவது, பணக்காரனுவது; பெரிய மனிதனுவது, சிறிய மனிதனுவது; முற்போக்காவது, பிற்போக்காவது; துறவியாவது, சம்சாரியாவது—எல்லோரும் அங்கு ஒன்றுதான்.

எல்லோரும் ஸ்நானம் செய்துவிட்டு, நாராயணனின் திருநாமம் நாவில் துலங்க, படிகள் ஏறிச் சென்று, வலப்புறமுள்ள ஆதிகேதாரேச்வரரையும் இடப்புறமுள்ள ஸ்ரீ ஆதிசங்கரரையும் தரிசித்துக் கொண்டு பத்ரிநாராயணனின் தரிசனத்திற்காகச் செல்கிருர்கள்.



தப்த குண்டத்தில் சுடுநீர் ஸ்நானம்

பத்ரிநாத்தில் பிரதம அர்ச்சகருக்குத் தரப்படும் மரியாதை மற்ருேர் அதிசயம். 'ராவல்ஜி' என்று அழைக்கப்படும் பிரதம பூசாரி, பூஜைக்குச் செல்லும்போதும், பூஜை முடிந்து விடுதிக்குத் திரும்பும்போதும் வெள்ளித்தடி ஏந்திச் செல்லும் பாராக்காரர் முன்னே செல்ல, மரியாதையுடன் அழைத்துச் செல்லப்படுகிருர். அந்தக் காட்சியைக் காண்பவர்களுக்கு, மனித குலத்தின் பிரதிநிதியாக ஆறு மாதம் ஸ்ரீ நாராயணரைப் பூஜை செய்ய உரிமை பெற்றிருப்பவரின் மீது ஒரு தனி மரியாதையே ஏற்படும்.

பத்ரிநாத்தில் மனித உருவத்தில் நான் ஓர் அதிசயத்தைக் கண்டேன். அங்குள்ள ராமானுஜகூடம் என்ற அஷ்டாக்ஷரி க்ஷேத்திரத்தில் வசித்து வரும் பாட்டியைச் சந்தித்ததைத்தான் கூறுகிறேன்.

பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக அந்தப் பாட்டி அங்கு இருப்பதாகவும் ஆலயம் அடைக்கப்பட்டு அனைவரும் அவ்வூரைவிட்டு வெளியேறிவிடும் கடும் பனிக் காலத்தில் கூட அவர் அங்கேயே தங்கியிருப்பதாகவும் கேள்விப் பட்ட பிறகு அம் மூதாட்டியைத் தரிசிக்காமல் இருக்க முடியுமா?

சுமார் எழுபது வயது இருக்கலாம். உருண்டை முகம். உள்ளே பெருகும் ஆனந்தத்தின் அடையாளமாகப் பொக்கை வாய்ச் சிரிப்பு. பெரிய கம்பளியை உடலைச் சுற்றிப் போர்த்திக்கொண்டு வெயிலில் அமர்ந்து ஹாய்யாகக் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். நாங்கள் அவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு எதிரில் அமர்ந்தோம். காமிராவையும், டேப் ரிகார்டரையும் கண்டு மிரண்டு போய் சிறிது நேரம் எந்தக் கேள்விக்குமே பதில் சொல்ல மறுத்துவிட்டார். மெள்ள வாயைக் கிண்டிப் பேச வைத்தோம்.



நீலகண்ட சிகர தரிசனம்

திருச்சிராப்பள்ளியை அடுத்த நார்த்தமலையைச் சேர்ந்த பாட்டி அவர். பெயர் சாரதாம்பாள். குடும்பத்தைவிட்டு எப்போதோ தீர்த்த யாத்திரை புறப்பட்டு வந்திருக்கிறார். காசியில் தங்கிவிட வேண்டும் என்று சென்றாராம். ''இங்கே போகும்படி காசி விசுவநாதன் கையைக் காட்டினான், வந்துட்டேன்'' என்கிறார்.

தன் குடும்பத்தைப் பற்றியோ, ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்த காரணத்தைப் பற்றியோ பாட்டி எதுவும் பேசத் தயாராயில்லை.

குடும்பச் சூழ்நிலையைப் பற்றி அறிவதற்காக, ''உங்களுக்கு யாராவது லெட்டர் போடுகிறார்களா?'' என்று சாமர்த்தியமாகக் கேட்டார் ஸ்ரீநிவாசன்.

''எனக்கு ஒருத்தரும் லெட்டர் போடறதில்லே. நானும் யாருக்கும் எழுதறதில்லே'' என்று பதிலுக்குச் சாமர்த்தியமாகச் சொல்லித் தப்பித்துக் கொண்டு விட்டார் பாட்டி.

''பந்தம் சொந்தம் எல்லாத்தையும் விட்டுட்டேளா?'' என்று கேட்டேன்.

''ஆமா! யாருக்கு யார் சொந்தம்? செத்தா நம்மகூட யார் வரப் போறா? வரபோது யாரோட வந்தோம்? போறபோது யாரோட போகப் போறோம்?'' என்று பெரிய வேதாந்தக் கருத்தை மிக எளிதாகத் தூக்கிப் போட்டார் பாட்டி. எத்தனை அனுபவம்! எத்தனை ஞானம்!

சிரித்துக் கொண்டே மேலும் கூறினார்: ''பந்தம் எது? சொந்தம் எது? நம்ம நிழல் நம்ம பின்னாலேயே இருக்கு. நம்மோட பாவம் புண்ணியம் ரெண்டும்தான் நம்மைத் தொடர்ந்து வரது, வேறென்ன?''

பெரிய ஞானாசிரியன் ஒருவர் முன் அமர்ந்து உபதேசம் கேட்கும் உணர்வு தான் எனக்கு ஏற்பட்டது.

'எல்லாம் பகவான் செயல், என் செயல் இல்லே' என்று அடிக்கடி கூறும் அந்தப் பாட்டி, தன் ஆகாரத்தைத் தானே சமைத்துக் கொள்கிருர். அவரே காய்கறித் தோட்டம் போட்டுப் பயிர் செய்கிருர். நான் சென்ற சமயம், காய்கறிகளே யெல்லாம் நறுக்கி உலர வைத்திருந்தார். அவற்றை எடுத்து டப்பாக்களில் வைத்துக் கொண்டு விடுவாராம். ஊர் வெறிச்சோடிக் கிடக்கும் அடுத்த ஆறு மாதத்திற்கு அதுதானே ஆகாரம்!


பாட்டிக்கு நடமாட்டம் குறைந்துவிட்டது. கோயிலுக்குச் செல்லக்கூடத் தள்ளவில்லேயாம்.

அவர் எதற்கு ஆண்டவனேத் தேடிக்கொண்டு செல்ல வேண்டும்? தன்னே அறிந்து, ஆத்ம ஞானம் பெற்று, அந்த ஆண்டவனேடு ஐக்கியப்பட்ட நிலேயில் ஆனந்தமாகக் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிருர். உயிருக்குப் பயப்படுகிறவர்களெல்லாம் ஊரைவிட்டுச் சென்ற பிறகும் தன்னுயிரை நாராயணனுக்கு அர்ப்பணமாக்கிவிட்டு, தன் குடில் உறை பனியால் மூடப்பட்டாலும் சிறிதும் கவலேயின்றி, அவனே கதியென்று அங்கு தன்னந் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தப் பாட்டி, தென்னகத்தையும் வடநாட்டையும் மட்டும் இணேக்கவில்லே. ஜீவாத்மா, பரமாத்மாவின் ஐக்கியத்திற்கும் ஓர் அடையாளமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிருர்.

அவரது அறையில் நாலேந்து சுவாமி படங்கள் மாட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. அக் கண்ணுடிகளில், எதிரிலுள்ள மலேயும், புஷ்பச் செடிகளும் பிரதிபலிக்கின்றன. ''அதைப் பார்த்துக் கொண்டு நிம்மதியா என் காலத்தைக் கழிச்சிண்டிருக்கேன்'' என்று சாரதாம்பாள் பாட்டி கூறிஞர்.

ஒன்பது மாதங்கள் கழித்து நான் இரண்டாவது முறையாக பத்ரிநாத் சென்ற போதும் சாரதாம்பாள் பாட்டியைச் சந்தித்தேன். நான் அந்த ஆச்ரமத்திற்குச் சென்றபோது மாலே ஏழு ஏழரை இருக்கும். அறையின் கதவு

''எல்லாம் பகவான் செயல்....''





சாரதாம்பாள் பாட்டி

தாளிட்டிருந்தது. கதவைத் தட்டினேன். ''யார்?'' என்று குரல் கொடுத்து விட்டு, பாட்டி வந்து கதவைத் திறந்தார்.

''எங்களைத் தெரிகிறதா பாட்டி?'' என்று கேட்டவுடனேயே தெரிந்து கொண்டு விட்டார். ''நீங்க முன்னே வந்திருந்தேளே, தெரியறது'' என்று சொல்லிவிட்டு அழகாக பொக்கை வாய்ச் சிரிப்பு சிரித்தார்.

''சமையல் ஆகிக் கொண்டிருக்கா?'' .... என்று விளையாட்டாகக் கேட்டேன்.

''ஆமாம்..... என்னமோ பண்ணிண்டிருக்கேன். எதையாவது ரெண்டு வாயிலே போட்டுக்க வேண்டாமா?'' என்று கேட்டு மீண்டும் சிரித்தார்.

''எப்படித்தான் இங்கே தனியா உட்கார்ந்துண்டு காலத்தைக் கழிக்கறேளோ..? நான் ஊர்லே போய்ச் சொன்னு எல்லாரும்ஆச்சரியப்படறு'' என்று பேச்சுக் கொடுப்பதற்காக நான் ஏதோ கூறினேன்.

''ஏகாந்தத்தை அனுபவிக்கக் கொடுத்து வெச்சிருக்கணும். அது கிடைச்சுப் போச்சுன்னு வேறே ஒண்ணுமே வேண்டாம்..... அதுலே ருசி வந்துடுத்துன்னு அப்புறம் வேறே ஒண்ணுமே பிடிக்காது'' என்று ஆனந்த வாழ்க்கையின் ரகசியம் உள்ளடங்கிய ஒரு பெரிய தத்துவத்தை மிகச் சாதாரணமாகக் கூறிவிட்டார் பாட்டி.

சிறிது நேரம் அங்கே நின்றிருந்தேன். பாட்டி ஒன்றும் பேசுவதாக இல்லை. அவரது ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பி விட்டேன். அவரது ஏகாந்தத்தைக் கலைத்த பாவம் நமக்கெதற்கு?



ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பத்ரிநாராயணரைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்புகிறார்

9

செப்டம்பர் 24-ம் தேதி, திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு மேல் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பத்ரிநாத் எல்லைக்குள் காலடி எடுத்து வைத்தார். அப்போது அந்தப் பள்ளத்தாக்கு இளம் வெய்யிலில் நீராடிக் கொண்டிருந்தது. பனிப் படலம் மெல்லிய திரையாகப் படர்ந்திருந்தது. குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. வேத கோஷம் முழங்க, வாத்தியங்கள் ஒலிக்க, பூர்ணகும்ப, ஆலய மரியாதைகளுடன் சுவாமிகள் வரவேற்கப்பட்டார். ஆலய நிர்வாகிகளும், உள்ளூர்ப் பிரமுகர்களும், வர்த்தகப் பெருமக்களும், ஸ்ரீமடத்துச் சிப்பந்திகளும் பின்தொடர, புதுப் பெரியவர் புன்னகை தவழும் முகத்துடன் நிதானமாகவும், கம்பீரமாகவும் நடந்து வந்து, ஸ்ரீமடம் முகாமிட்டிருந்த விடுதிக்குள் நுழைந்த காட்சி மறக்க முடியாததாக இருந்தது. மகரிஷிகளும் மாமனிதர்களும் நடமாடிய பத்ரிகாச்ரமத்தில், ஸ்ரீ ஆதிசங்கரரின் திருநாமத்துடன் தொடர்பு கொண்டு, நம் ஆன்மிக வரலாற்றுடன் பிணைக்கப்பட்டு, தென் கேரளத்தை வடக்கு எல்லையுடன் இணைத்து, பாரதத்தை ஒருமைப் படுத்தியுள்ள புனிதத் தலத்தில், ஸ்ரீ ஆதிசங்கர பகவானின் வழித்தோன்றல் எழுந்தருளிய காட்சியைக் கண்டவர்கள் பெரும் பேறு பெற்றவர்களாவார்கள். அன்னாரைத்

தரிசிக்கவும், அவரது அருளாசியைப் பெறவும் அங்கு குழுமியிருந்தவர்களின் கண்களில் தேங்கி நின்ற நன்றியுணர்ச்சி, அவர்களுடைய உள்ளங்களில் பொங்கியெழுந்த மகிழ்ச்சிக்கு அடையாளமாக இருந்தது.

அனைவருக்கும் தரிசனம் தந்தருளிய பின்னர், புதுப் பெரியவர் அவசர அவசரமாகப் பத்ரிநாராயணரின் தரிசனத்திற்காகப் புறப்பட்டார். நர நாராயண மலைகளைப் பெருமிதத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு, இயற்கைக் காட்சிகளைப் பூரிப்புடன் ரசித்துக் கொண்டு சுவாமிகள் நடந்து வந்தபோது, உள்ளூர்வாசிகள் அவரைப் பிரமிப்புடன் பார்த்தார்கள். தென்னகத்திலிருந்து அவர் பாத யாத்திரையாக வந்துள்ளதைக் குறித்து ஒருவரோடு ஒருவர் ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டார்கள்.

அலகநந்தாவின் மீதுள்ள இரும்புப் பாலத்தைக் கடந்து, தப்தகுண்டத்திற்கு வந்து, முறையாக சங்கல்ப ஸ்நானம் செய்து, மடி உடுத்திக் கொண்டு, கௌரி காளை முழங்க, ஸ்ரீ ஆதிகேதாரேச்வரரையும், ஸ்ரீ ஆதிசங்கரரையும் தரிசித்துக் கொண்டு, ஸ்ரீ பத்ரிநாராயணரின் ஆலயத்திற்குச் சென்றார். நுழை வாயிலில் நின்றிருந்த ஆலயக் கமிட்டி நிர்வாக அதிகாரி திரு. பி.எஸ். மேத்தாவும், பிறரும் சுவாமிகளைச் சகல மரியாதைகளுடன் உள்ளே அழைத்துச் சென்றார்கள். அர்த்த மண்டபத்தில் நின்று, ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன், ஸ்ரீ பத்ரி நாராயணரைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள், தங்கள் பிறவியின் பெரும் பயனை எய்தி விட்டதாகவே கருதினார்கள். தவக்கோலத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ நாராயணப் பெருமானின் மெய்யுருவில் மனம் லயித்து, தியானத்தில் ஆழ்ந்து, உள்ளம் ஒன்றிவிட்ட நிலையில், புதுப் பெரியவர் தம்மை மறந்து, கருவறை வாயிலில்

சுவாமிகளின் பத்ரிநாத் பிரவேசம்




அசையாமல் நின்றிருந்த திருக்கோலம், அனைவரது உள்ளத்திலும் பக்தியுணர்வைத் தூண்டுவதாகவே அமைந்திருந்தது.

அங்கு சற்று நேரம் பேரமைதி நிலவியது. எல்லோர் உள்ளங்களிலும் ஒலித்துக் கொண்டிருந்த நாராயணப் பெருமந்திரத்தின் ஸ்தூலத் திருவுருவை கண் எதிரே கண்டவுடன் கண்களை மூடி, இதயத்தில் இருத்தி, இன்ப உணர்வில் கட்டுண்டு அனைவரும் நின்றிருந்தபோது, தேனம்பாக்கம் சிவாஸ்தானத்தில் மூலவராக அமர்ந்திருக்கும் மௌனகுருமூர்த்தி அங்கு மானசீகமாகக் காட்சி தந்தார். உலகிற்கோர் நற்குருவாய்த் தோன்றி, மனித குலம் உய்யும் பொருட்டுத் தம் உத்தமச் சீடரை, உற்சவ மூர்த்தியாய்த் தல யாத்திரை செய்வித்துக் கொண்டிருக்கும் அம் மூல சக்தியைத் தரிசித்த பெருமிதத்தில் நெஞ்சம் நெகிழ, கண்கள் பனிக்க, பக்திப் பெருவெளியில் மிதந்து கொண்டிருந்தோம்.

ஸ்ரீமடத்தின் சார்பில் ஸ்ரீ பத்ரி நாராயணருக்கு விலையுயர்ந்த சால்வை யும், காசுமாலையும் வழங்கப்பட்டன. ராவல் அவற்றை மிகவும் மரியாதை யுடன் பெற்றுக் கொண்டு, பக்தி சிரத்தையோடு சுவாமிக்குச் சாத்தினர். பின்னர், மங்கள ஆரத்தி காட்டினர். அப்போது வெண்கலமணிகள் மங்கல நாதம் எழுப்பின. சங்கும் மத்தளமும் ஒலித்தன. அச் சிறு அறையை நிறைத்துக் கொண்டு அங்கு குழுமியிருந்தவர்கள், மௌனம் கலைந்து, 'நாராயணா நாராயணா' என்று உரக்க ஜபிக்கத் தொடங்கினர்கள்.

அர்த்தமண்டபத்தில் பக்தர்கள் நிரம்பி வழிந்தது போலவே, அனைவரது உள்ளங்களிலும் உணர்ச்சி வெள்ளம் பொங்கிப் பெருகியது. ஸ்ரீ மடத்தைச்


பட்டணப் பிரவேசக் கோலாகலக் காட்சி



சேர்ந்த பண்டிதர்கள் புருஷசுக்தம், ஸ்ரீ நாராயண உபநிஷத் முதலியவற்றைப் பாராயணம் செய்தனர். அந்த மந்திர உச்சாடனம் அச் சிறு அறையில் ரீங்கார மாய் எதிரொலித்து ஓங்கார நாதப் பெருவெள்ளமாய் அலை பாய்ந்தது. மாமந்திர வடிவாய் அமர்ந்திருந்த ஸ்ரீ நாராயணப் பெருமான், விசுவ ரூபம் எடுத்து, நர நாராயண மலைகளையும் விட ஓங்கி உயர்ந்து அனைவரையும் அருள் பாலித்தார். அதன் அடையாளமாக ராவல், புதுப் பெரியவர்களுக்குச் சந்தன புஷ்பப் பிரசாதங்களை வழங்கினார். அவற்றைப் பெற்றுக் கொண்டு, கண்களில் ஒற்றிக் கொண்டவர், அத் திருச் சந்நிதியைவிட்டு அகல மனம் இல்லாதவராய்ச் சற்று நேரம் மூலவரையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மெள்ளத் திரும்பி வெளி மண்டபத்திற்கு வந்தார். 'பத்ரி விஷால்கி ஜெய்' என்ற பக்தர்களின் முழக்கம் அலகநந்தாவின் பேரிரைச்சலோடு கலந்தது.

பின்னர், ஸ்ரீ சுவாமிகள் பக்தர் குழாம் புடைசூழப் பிராகாரத்தை வலம் வந்தார். ஸ்ரீ மகாலட்சுமியைத் தரிசித்துக் கொண்டு ஸ்ரீ ஆதிசங்கரர் கத்தி யிருக்கும் அறைக்குள் நுழைந்தார். ஜோஷி மடத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் தவம் இருந்த குகையை நான் பார்த்ததைப் பற்றி சுவாமிகளிடம் அங்கு குறிப்பிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதனுள் சீடர்களோடு கூடிய ஸ்ரீ ஆதிசங்கர பகவானின் திருவுருவைப் பிரதிஷ்டை செய்வது மிகவும் பொருத்தமாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என்று என் மனத்தில் தோன்றிய எண்ணத்தை அவரிடம் தெரிவித்தேன். அப்போது அருகில் நின்றுகொண்டிருந்த நிர்வாக அதிகாரி பி.எஸ். மேத்தா, அப்படியோர் எண்ணம் தங்களுக்கு ஏற்கெனவே இருப்பதாகவும், அதற்கான மூர்த்தியும் தயாராக இருப்பதாகவும் கூறினார். ஆனால், அங்கு அப்படியொரு சிலையை வைப்பதற்குப் பதில், ஸ்ரீ ஆதிசங்கரரின் திருப் பாதங்களைப் பிரதிஷ்டை செய்தாலே போதும் என்ற ஒரு வலுவான

ஆலயத்தில் வரவேற்பு





பிரும்ம கபாலம்

கருத்து நிலவி வருவதாக சற்று மனத் தாங்கலுடன் மேத்தா கூறிவிட்டு, புதுப் பெரியவரின் ஆலோசனையைத் தாம் அறிய விரும்புவதாகக் கூறினர். புதுப் பெரியவர் ஒரு கணம் சிந்தித்து, ''மூர்த்தியையும் வையுங்கள்; திருப் பாதங்களையும் வையுங்கள்'' என்று கூறி, அப் பிரச்னையை மிக எளிதாகத் தீர்த்து வைத்து விட்டதைக் கண்டு ஆச்சரியமடைந்த மேத்தா, 'அச்சா' 'பகுத் அச்சா' என்று சிரித்துக்கொண்டே கூறினர்: ''ஸ்ரீ ஆதிசங்கரரின் மூர்த்தியை மட்டும் வைத்தால் போதாது. அவரோடு நான்கு சிடர்களையும் வையுங்கள். ஸ்ரீ சங்கரரின் மூர்த்தி சற்றுப் பெரியதாகவும் சிடர்களின் சிலைகள் சிறியவையாகவும் இருக்க வேண்டும். எல்லோர் கைகளிலும் தண்டம் இருக்க வேண்டும்'' என்று சுவாமிகள் கூறியவுடன், 'அச்சா அச்சா' என்று கூறி, மேத்தா அதை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டார்.

ஆலய தரிசனம் முடிந்து முகாமிற்குத் திரும்பிய சுவாமிகள், ஸ்ரீசந்திர மௌளீச்வரருக்குப் பூஜை செய்து, அனைவருக்கும் தீர்த்தப் பிரசாதம் வழங்கினர். பின்னர், மாலை வரையில் உள்ளூர்வாசிகளுக்கும், வெளியிலிருந்து வந்திருந்தவர்களுக்கும் தரிசனம் தந்தார்.

அன்று காலை நாங்கள் அனைவரும் பிரும்ம கபாலம் என்ற இடத்தில், மறைந்த எங்கள் மூதாதையர்களுக்கும், பிரிந்துவிட்ட உறவினர்களுக்கும், இழந்துவிட்ட உயிருக்குயிரான தோழர்களுக்கும் நினைவாஞ்சலி செலுத் தினேம். நம் பாரதத்திலேயே பிண்டதானம் செய்து, திதி கொடுப்பதற்கு இதைவிடச் சிறந்த இடம் கிடையாது என்கிருர்கள். நாம் அறிந்தோ,

அறியாமலோ செய்த பாவங்கள் எல்லாம் இவ்விடத்தில் துடைக்கப்பட்டு விடுகின்றனவாம்.

இந்த இடம் பத்ரிநாத் ஆலயத்திற்குத் தென்புறம் சுமார் இருநூறு அடி தொலைவில் இருக்கிறது. மேடு பள்ளங்கள் நிறைந்த ஒரு பெரிய பாறையைத்தான் பிரும்ம கபாலம் என்கிறார்கள். அதை அணைத்துக் கொண்டுதான் அலகநந்தா ஓடுகிறது.

கோபாவேசத்தில் சிவபெருமான் ஒரு சமயம் பிரும்ம தேவனுடைய ஐந்தாவது தலையைக் கொய்தார். ஆனால் அந்தக் கபாலம் அவருடைய கையில் நன்றாக ஒட்டிக்கொண்டு விட்டது. எத்தனை உதறினாலும் கீழே விழவில்லை. உலகம் முழுவதும் சுற்றித் திரிந்துவிட்டு, பத்ரிநாத்துக்கு வந்து, நாராயணரைக் குறித்துப் பிரார்த்தித்தார். இக்கட்டான நிலையிலிருந்த தம்மைக் காத்தருளும் படி மன்றாடினார். ஸ்ரீ நாராயணனின் கருணை அவர் மீது விழுந்தது. அடுத்த கணம் பிரும்மாவின் சிரம் அவர் கையைவிட்டு நழுவிக் கீழே விழுந்தது.

பிரும்ம கபாலத்தைக் குறித்து மற்றொரு கதையும் கூறப்படுவது உண்டு. மகாவிஷ்ணு திருப்பாற்கடலில் யோக நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம் இரண்டு அசுரர்கள், வேதங்களைக் காத்துக் கொண்டிருக்கும் பிரும்மதேவனைத் துன்புறுத்தினார்கள். அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. யோக நித்திரையை விடுத்து தம் உதவிக்கு வரும்படி திருமாலைப் பிரார்த்தித்தார் அவர். ஸ்ரீ நாராயணமூர்த்தியும் அவ்விதமே செய்தார். வினை நீங்கிய பிரும்மதேவன் இந்த இடத்தில் இருந்துகொண்டு, மீண்டும் உலகைச் சிருஷ்டித்தார்.

பத்ரிநாத்துக்கு வருபவர்கள் மகா சங்கல்பம் செய்து, பிரும்ம குண்டத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, பிரும்ம கபாலத்தில் பிண்டதானம் செய்வதைக் கிடைத்தற்கரிய வாய்ப்பாகக் கருதுகிறார்கள். பத்ரிநாராயணருக்கு நைவேத்தியம் செய்யப்படும் சாதத்தை விலை கொடுத்து வாங்கி வந்துதான் இங்கு பிண்டங்கள் வைக்க வேண்டும். பித்ரு பட்சத்தில், பிண்ட தானம் செய்வது மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

பிரும்ம கபாலத்தில் பிண்டம் அளிப்பது இதர இடங்களில் அளிப்பதைவிட ஆயிரம் மடங்கு பலன் உள்ளதாகக் கருதப்படுகிறது. நாம் பத்ரிக்கு வருகின்றோம் என்று தெரிந்ததும், நம் முன்னோர்களின் ஆவிகள் முன்னதாகவே அங்கு வந்து, நம் வருகைக்காகவும், நாம் அளிக்கப் போகும் பிண்டங்களுக்காகவும் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்குமாம்.

மாலை நான்கு மணிக்கு ஸ்ரீ பத்ரிநாராயணரின் ஆலயத்தில், ஆலயக் கமிட்டியினரின் சார்பில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதி சுவாமிகளுக்கு ஒரு வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது. உத்தரப் பிரதேசத்தின் நயமான இந்தியில் சுவாமிகளை வரவேற்றுப் பேசினார் மேத்தா. அனைவருக்கும் நன்கு புரிந்த எளிமையான இந்தியில் சுவாமிகள் அதற்குப் பதில் அளித்தார். அதைக் கேட்டு அங்கு குழுமியிருந்தவர்கள் அகமகிழ்ந்தனர்.

அன்று இரவு, பத்ரிநாராயணரைப் பக்தி சிரத்தையுடன் ஆராதித்து வரும் அர்ச்சகர் ராவல் என்ற கேரள நம்பூத்ரி பிரும்மசாரியை நான் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன்.



சுடுநீர்த் தீர்த்தத்தில் சுவாமிகள் நீராடுகிருர்

அப்போது ஆலயத்தில் அன்றுடம் நடைபெறும் ஆராதனை முறைகளைப் பற்றியும், அங்கு நடைபெறும் திருவிழாக்களைப் பற்றியும் நவம்பர் மாதத்தில் ஆலயத்தை மூடும் சடங்குகளைப் பற்றியும், மே மாதத்தில் தரிசனத்திற்காக மீண்டும் திறக்கப்படும் வைபவத்தைப் பற்றியும் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். இடையிடையே அவர், ஆலயக் கமிட்டியினரால் தாம் அலட்சியத்துடன் நடத்தப்படுவதைப் பற்றிச் சற்று மனக் குறையுடனேயே பேசினுர்:

''நாங்கள் ஒரு காலத்தில் பத்ரிநாத்தின் ராஜாவாக (King of Badrinath) கருதப்பட்டோம். தற்போது ஆலயக் கமிட்டியின் பணியாளாக (Servant of the Temple Committee) நடத்தப்படுகிறேம்'' என்று அவர் கூறியபோது கிடைத்தற்கரிய பெரும்பேறு பெற்றிருப்பவர் என்று நாம் கருதும் ஒருவரின் இதயத்தின் அடித்தளத்தில் மிக ஆழமாகப் பதிந்திருக்கும் துன்பக் கீற்றை — வேதனை மிகுந்த ஏக்கத்தைக் கேட்டு நான் மனம் வருந்தினேன்.

பல சமயங்களில் நம் கற்பனைக்கும், நாம் நேரில் பார்ப்பதற்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கும். இது ஆலய தரிசனத்திற்கும் பொருந்தும். புத்தகங்களில் படித்தும், பிறர் சொல்லக் கேட்டும், நம் மனத்தில் உருவாகியிருக்கும் சில தலங்களையும் ஆலயங்களையும் காணும் போது நமக்குச் சற்று ஏமாற்றம் ஏற்படுவது உண்டு. பாரதத்தின் புனிதத் தலங்களில் மிக முக்கியமான ஊரான காசியைப் பார்த்துவிட்டு வருபவர்கள்,


சுகாதாரக் கண்ணோட்டத்தில், அருவருப்புடன் அந்த ஊரை விமர்சிப்ப தைக் கேட்கும்போது நமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். திருவேங்கட முடையான் உறையும் திருப்பதிக்கு 'உல்லாசப் பயணிக'ளாக வரும் 'பிக்னிக்' கோஷ்டிகளையும், கருவறையில் அர்ச்சகர்கள் போடும் இரைச்சலை யும், வெளியே இரகசியமாகப் பணம் பெற்று, 'அதர்ம' தரிசனம் செய்து வைக்கும் பணியாட்களையும் காணும்போது, புண்ணியம் சம்பாதிக்கச் செல்பவர்கள் புழுங்கிய மனத்துடனேயே திரும்புவார்கள்.

கால ஓட்டத்தில், ஆலய தரிசனத்திற்கு வரும் கூட்டம் பெருகப் பெருக, வியாபார நோக்கம் பரவப் பரவ, பணம் குவியக் குவிய, அவ்வூரின் மதிப்பு வேகமாக மாறுகிறது. சூழ்நிலையின் அமைதி கெடுகிறது. ஆலய நிர்வாகத்தில் மாசு படிகிறது. சிறுசிறு முணுமுணுப்புக்கள் கருத்து வேற்றுமைகளாக வெடித்து சர்ச்சைகளைக் கிளப்பி, அங்கு நிலவ வேண்டிய தெய்விகத் தூய்மைக்கு ஊறு விளைவிக்கத் தொடங்குகின்றன. அர்ச்சகரும், அறங்காவலரும், ஆலயநிர்வாகிகளும், அரசின் பிரதிநிதிகளும் ஒட்டி உறவாடி, ஒரே மனத் துடன் ஆண்டவன் தொண்டில் ஈடுபடுவதற்குப் பதில், ஆளுக்கொரு பக்கமாக இழுத்து வாதப் பிரதிவாதங்களை வளர்த்து, ஓயாமல் வழக்காடிக் கொண் டிருப்பதைக் காணும்போது, மனம் சற்று வேதனையடையாமல் இருக்க முடியாது. எனது பயணங்களின் போது, ஏதோ ஒரு காரணத்திற்காக கோர்ட்டுக்குப் போகாத கோயில்களைப் பார்ப்பதே அபூர்வமாக இருக்கிறது. சில இடங்களில் உட்பூசல்களும், கட்சிப் பிணக்குகளும், பணப் பித்தும், பேராசையும், பதவி வெறியும் நாட்டிலுள்ள அரசியல் அவலங்களையும் கூடத் தோற்கடிப்பதாக இருக்கின்றன. இம்மாதிரியான செய்திகள் காதில் விழும் போதெல்லாம் மனம் வெதும்பி, உள்ளம் புழுங்கி, நெஞ்சு வெடிக்க, ''ஆண்டவா! இது என்ன சாபக்கேடு? பக்தி இயக்கத்தின் பாசறைகளில், பாவத்தின் நிழல் படிவதை எவ்வாறு நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று நான் கேட்பது வழக்கம். அப்போதெல்லாம் ஆண்டவன் என்னைப் பார்த்துச் சிரிப்பது போல்தான் எனக்குத் தோன்றும்.


''ஆலயத்தில் நீ மனிதனைப் பார்க்கவந்தாயா, என்னைப் பார்க்க வந்தாயா? உலகிலுள்ள போட்டி பொறாமைகளையும் சண்டை சச்சரவுகளையும் சிறுமைகளை யும் கேவலங்களையும் மறந்து, உன் ஆத்ம லாபத்திற்காகவும் மனச்சாந்திக் காகவும் என்னைத் தரிசிக்க வருகிறாய்; இந்த இடத்திலும் அவற்றைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும் நீ அல்லவா பாவம் செய்தவனாகிறாய்? தங்கள்



கார்கள் நிற்குமிடம்



கடை வீதி



ஸ்ரீ பத்ரி நாராயணர் ஆலயம், அலகநந்தா நதி, தப்த குண்டம், வராக சிலா, நாரத சிலா, நாரத குண்டம், கருடசிலா முதலியவை தரிசனமாகும் தோற்றம்

திருத்தொண்டை மறந்து, நடப்பது ஒன்றும் எனக்குத் தெரியாது என்று நினைத்து, தவறு இழைக்கும் இவர்களெல்லாம் கர்ம வினையால்தான் அவ்விதம் செய்கிறார்கள். அவர்களை சிட்சிப்பதையும், ரட்சிப்பதையும் என் பொறுப் பாக்கிவிட்டு நீ கடைத்தேறும் வழியைப் பார். என் சொரூபத்தை உண்மை யாக உணர்ந்து, என்னைச் சத்தியமாகத் தரிசித்து விட்டால் வேறு எதுவும் உன் கண்ணில் படாது; காதிலும் விழாது'' என்ற உபதேச மொழிகள் கருவறையிலிருந்து புறப்பட்டு என் காதுகளில் எதிரொலிக்கும்.

எனவே, செல்லும் இடங்களில் என் காதில் விழும் பிற செய்திகளைப்பற்றி அதிகம் கவலைப்படாமலிருக்கப் பழகிக் கொண்டு வருகிறேன் நான். வலியத் தேடிக் கொண்டு போகாவிட்டாலும், அவர்களாகவே வந்து சொல்லும்போது அசட்டையாக இருந்துவிட முடிகிறதா?

பத்ரிநாத்தின் நுழைவாயிலாகக் கருதப்படும் நந்தப்பிரயாகையிலேயே ராவல்ஜிக்கு எதிராக ஒரு சக்தி உருவாகி வருவதை ஜி.பி. நாட்டியால் என்ற ஒரு பத்திரிகை நிருபரின் மூலம் அறிந்து கொண்டேன். பத்ரிநாத்துக்கு வந்ததும், ஆலய நிர்வாகத்தினர் மீது தமக்குள்ள மனத்தாங்கல்களை ராவல்ஜி கூறக் கேட்டேன். உள்ளூர் பண்டாக்களின் மனக் குறையையும் ஒருவாறு புரிந்து கொண்டேன். பொதுவாக நாட்டில் பரவி வரும் 'மண்ணுக்குரிய மைந்தர்கள்' மனப்பான்மை பத்ரியிலும் வேரூன்றி வருவதை உணர்ந்து கொண்டேன்.

இவர்கள் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்; பத்ரிநாராயணரைத் தரிசிக்க வரும் அனைவரும் வேற்றுமைகளை மறந்து,

இப்புண்ணிய பாரத மண்ணிற்குரிய மைந்தர்களாகவே தங்களைக் கருதுகிறுர்கள் என்பதில் நாம் பெருமிதம் கொள்ளலாம். திருப்பதியைப் போன்றே, இங்கும் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களை, பல மொழி பேசுபவர்களைக் காண்கின்றேம். வாழ்க்கையின் பல்வேறு நிலையிலுள்ளவர்களையும் அங்கு சந்திக்க முடிகிறது. வளம் கொழிக்கும் செல்வந்தர்கள் முதல், பஞ்சைப் பராரிகள் வரை அத்திருச் சந்நிதியில் பார்க்க முடிகிறது. நாகரிக மேன்மக்கள் முதல் மலைக் காட்டுப் பாமர மக்கள் வரை ஆலயத்தில் நடமாடுகிறுர்கள். இந்துக்கள் மட்டுமா வருகிறுர்கள்? பௌத்தர்களும், ஜைனர்களும்கூட வந்து வழிபாட்டுச் செல்கிறுர்கள்.

உத்தரகண்டம் என்று அழைக்கப்படும் இமாலயக் கடுவால் பகுதியில், பத்தாயிரம் அடி உயரத்தில் அமையப் பெற்றிருக்கும் இந்த உன்னதத் தலம், சரித்திர புராண காலங்களுக்கெல்லாம் முன்பிருந்தே புகழுடைந்திருக்கிறது. பத்ரிகாச்ரமத்தை, 'உலகிலுள்ள புனிதத் தலங்களுள் முதன்மையானது' என்று மகாபாரதம் வருணிக்கிறது.

தேவப்பிரயாகை, ஜோஷிமட் போன்றே பத்ரிநாத்தும் ஸ்ரீ வைணவர்கள் போற்றித் தொழும் நூற்றெட்டு திவ்ய தேசங்களில் ஒன்ருகும். பெரியாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடிப் புகழ்ந்து சிறப்பித்துள்ள புண்ணியத் தலம் அது.

மூப்பின் முதிர்ச்சியால் உடல் தளர்ந்து, கண் பார்வை மங்கி, கூனிக் குறுகிக் கால் தடுமாறும் நிலை வருவதற்குள் ஒரு முறையாவது அத் திருத் தலத்திற்குச் சென்று வரவேண்டும் என்று பத்துப் பாசுரங்களில் நம் மனம் கரைய மன்றுடும் திருமங்கை ஆழ்வார், 'வதரி வணங்குதுமே' என்று தம் மனத்திற்கு அன்புக் கட்டளையிடுகிறுர். வேறு பத்து பாசுரங்களால், அலகநந்தா கங்கையின் மகிமையையும், ஸ்ரீ நாராயணப் பெருமானின் பெருமைகளையும் பொங்கிப் பூரிக்கப் புகழ்பவராய், 'கங்கைக்கரையின் மேல் வதரியாச்ரமத்துள்ளானே' என்று அறை கூவுகிறுர்.

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள ஸ்ரீ மகாவிஷ்ணு, நாராயண ரிஷி ஆகவும் நர ரிஷியாகவும் திருவுருக்கொண்டு இத்தலத்திற்கு வந்து தவமிருந்தாராம். இவர்களிருவரும் பிரும்மாவின் திருக் குமாரனை தர்மராஜனுக்கும், தட்சப்பிரஜாபதியின் திருக்குமாரத்தியான மூர்த்திதேவிக்கும் மைந்தர்களாகப் பிறந்தார்களாம்.

பகவான் மனிதனுக்கு நாராயணப் பெரு மந்திரத்தை உபதேசித்தருளவும், வேதங்கள் என்ற அரும் செல்வத்தை வாரி வாரி வழங்கவும், தம்மையே நாராயணனுகவும் நரனுகவும் இரண்டாகப் பிரித்துக் கொண்டார். பரமாத்மா—ஜீவாத்மா தத்துவத்தை விளக்குவதாகவே இத் திரு அவதாரங்கள் அமைந்திருக்கின்றன.

ஜீவாத்மா, தன்னைப் பரமாத்மாவினின்றும் வேறில்லை என்று உணர்ந்து மூலப் பொருளுடன் ஐக்கியப்படுத்திக் கொள்ளும் பாவத்தை 'ஞானம்' என்றும் அப்பெரு நிலையை 'ஞானநிலை' என்றும் கூறுவார்கள். பத்ரிநாராயணர் இந்த ஆத்ம ஞானத்தைப் போதிப்பதாலேயே பத்ரிகாச்ரமம், 'ஞானபூமி'யாகக் கருதப்படுகிறது.

ஸ்ரீ நாராயணப் பெருமான் கடுமையான தவத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட மகாலட்சுமி, பதரி மரமாக (இலந்தை மரம்) மாறி அவருக்குப் பாதுகாப்பாக நின்றுளாம். அதனுல், அந்த ஆச்ரமத்திற்கு 'பதரிகாச்ரமம்' என்ற பெயர் ஏற்பட்டதாம். ஒரு காலத்தில் இப் பகுதி இலந்தைக் காடாக இருந்ததால் இந்தப் பெயர் ஏற்பட்டது என்றும் கூறப்படுகிறது.

உலக நலனுக்காகவே தவயோகத்தில் ஆழ்ந்திருக்கும் இவ்விரு ரிஷிகளை யும், தேவரிஷியான நாரதர் காணவந்த கதை மகாபாரதத்தில் சாந்தி பர்வாவின், நாராயணீயப் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது.

நாரதர், நர நாராயணர்களைப் பார்த்து, ''நீங்கள் யார்? எதற்காக இத்தனை கடுமையானதொரு தவத்தில் ஆழ்ந்திருக்கிறீர்கள்?'' என்று கேட் டாராம். அதற்கு அவர்கள் நாரதரைத் திருப்பாற்கடலிலுள்ள சுவேத தீபத் திற்குச் செல்லும்படி கூறினுர்களாம். அவ்வாறே நாரதர் திருப்பாற் கடலுக்குச் சென்று, பள்ளிகொண்ட பெருமானைத் தரிசித்தார். அப்போது மகாவிஷ்ணு, நர நாராயணர்கள் தம்முடைய அம்சமே என்று கூறினுர். அதைக் கேட்ட நாரதர் புனிதராகி, பத்ரிகாச்ரமத்திற்குத் திரும்பி அவர்கள் அருகிலேயே அநேக ஆண்டுகள் தங்கி தியானத்தில் ஆழ்ந்திருந்தாராம்.

இன்றும் நாரதமுனி, நர நாராயணர்களுக்குப் பூஜை செய்து வருவதாக நம்பப்படுகிறது. பத்ரிநாராயணருக்கு ஆறு மாதம் மனித பூஜையும், ஆறு மாதம் தேவ பூஜையும் நடைபெறுகிறதாம். ஆலயம் மூடப்பட்டுவிடும் ஆறு மாதங்களும், தேவர்களின் சார்பில் நாரதர் பூஜை செய்கிருராம். அதன் அடையாளமாகவே கருவறையில் நாரதரின் விக்கிரகம் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

நாரதர் அங்கு தவம் இருந்ததன் அடையாளமாக ஆலயத்திற்கு நேர் கீழே, அலகநந்தாவின் கரையில் 'நாரதசிலா' என்ற பாறை ஒன்றும் இருக்கிறது. அதை அடுத்துள்ள நாரத குண்டத்திலிருந்துதான் ஸ்ரீ ஆதிசங்கர பகவான், பத்ரிநாராயணரின் சாளக்கிராமச் சிலையைக் கண்டெடுத்து, தப்த குண்டத்தின் அருகிலுள்ள 'கருடசிலா'வுக்கு அருகில் ஆலயம் அமைத்தாராம். அது கால வெள்ளத்தால் கரைந்து போய், தற்போது உள்ள இடத்தில் அக்கோயில் மாற்றப்பட்டதாம். அங்கு கருட பகவான் தவம் இருந்ததற்கு அடையாளமாக, 'கருடசிலா'வைக் காட்டுகிருர்கள். இந்தப் பாறைக்குப் பின்புறம் ஸ்ரீசைதன்ய மகாப் பிரபுவுக்குத் தற்போது ஒரு சிறு கோயில் எழுப்பப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ நாராயண ரிஷியும், ஸ்ரீ நர ரிஷியும், ஸ்ரீ கிருஷ்ணனுகவும் அர்ஜுன னுகவும், பின்னர் அவதாரம் செய்ததாக மகாபாரதம் கூறுகிறது. பாரதப் பெரும் போரின் மத்தியில் பரமாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணன், ஜீவாத்மாவான அர்ஜுனனுக்கு ஞான உபதேசம் செய்தருளுவதாகப் பகவத் கீதை அமைந்துள்ளது.

ஸ்ரீமத் பாகவதத்திலும் பத்ரிகாச்ரமத்தின் மகிமை விரிவாக எடுத்துரைக் கப்பட்டுள்ளது.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, பூமியில் தமது தர்மப் பணிகளெல்லாம் முடிந்து சுவர்க்கம் போவதற்கு முன் தமது உத்தம சீடரான உத்தவரை அழைத்து, ''நீ பத்ரிகாச்ரமம் செல். அது என்னுடைய ஆச்ரமம். அங்கு அலகநந்தாவில் ஸ்நானம் செய்து, துறவுக் கோலம் பூண்டு, புலன்களை வென்று, என் உபதேச மந்திரங்களை மனத்திற்குள் மனனம் செய்து கொண்டிரு. இறுதியில் என்னுடன் ஐக்கியமாகி விடுவாய்'' என்று கூறினார்.

அதன்படியே உத்தவர், துவாரகையைவிட்டுப் புறப்பட்டு, பத்ரிகாச்ரமம் வந்து சேர்ந்தார். அங்கு நரநாராயணர்கள் தவத்தில் ஆழ்ந்திருந்ததைக் கண்டு, மெய்த்தவம் இயற்றி, இறுதியில் தாமும் பகவானுடன் ஐக்கியமாகிவிட்டார்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பரம சீடராயிருந்து, பக்தியாலும் சேவையாலும் அவரோடு கலந்துவிட்ட உத்தவரின் மூர்த்தியே அந்த ஆலயத்தில் உற்சவ மூர்த்தியாய் இருந்து வருகிறது.

நாராயண ரிஷி கடும் தவம் இருப்பதைப் பார்த்து இந்திரனுக்குப் பொறுக்கவில்லையாம். பல வழிகளிலும் அவருக்குத் தொந்தரவு கொடுத்தானும். கடைசி ஆயுதமாக, அவரை மயக்கி, அவருடைய உறுதியைக் குலைப்பதற்காகப் பேரழகிகளான அப்சரஸ் ஸ்திரீகளைக் கொண்டு வந்து அவர் எதிரில் நிறுத்தினானும்.

பார்த்தார் நாராயண ரிஷி. லேசாகச் சிரித்தார். தம் தொடையைத் தட்டினார். அதிலிருந்து பேரழகியான ஓர் அதிசய மங்கை வெளி வந்தாள். அழகு தேவதைகள், அவளைக் கண்டு பொறாமை அடைந்தார்கள். என்ன, இப்படியும் ஓர் அழகியா? இயற்கையின் வசீகர லாவண்யமெல்லாம் அவள் திருவதனத்தில் அப்படியே குடிகொண்டு விட்டதோ!

தேவலோகவாசிகளான அப்சரஸ் பெண்மணிகளெல்லாம் வெட்கித் தலைகுனியும் வண்ணம் ஒய்யார எழிலுடன் நின்ற அந்த மங்கையைக் கண்டு இந்திரன் திகைத்து நின்றான். 'மதி மயக்கும் இத்தகைய ரூபவதி தம்மிடமே இருந்தும் நிலைகுலையாமல் இருக்கும் மகா புருஷரின் தியானத்தையா நான் கலைக்கப் பார்த்தேன்?' என்று தன்னையே நொந்து கொண்டான். அவருடைய மகிமை புரியாமல் தவறிழைத்துவிட்ட தன்னை மன்னித்தருளும்படி நாராயண ரிஷியிடம் வேண்டினான்.

நாராயணரின் தொடையிலிருந்து தோன்றிய அப் பெண்மணிதான் ஊர்வசி. 'ஊரு' என்றால் தொடை என்று பொருள். அதிலிருந்து தோன்றியவளாயிற்றே!

பத்ரிதலத்தை 'ஊர்வசி பீடம்' என்றும் 'நாரத க்ஷேத்ரம்' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

ஆலயத்திற்குத் தெற்கில் ஒரு பர்லாங்கில் ஊர்வசிக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. அங்கு நான் செல்லவில்லை. ஆனால், வடக்கே ஒரு மைலிலிருக்கும் இந்திரதாரா என்ற ஒரு சிறு கிராமத்திற்குச் சென்றேன். அங்கு வசிப்பவர்கள் ஊர்வசியின் சந்ததிகள் என்று தங்களைக் கூறிக் கொள்கின்றனர்.



மாதா மூர்த்தி ஆலயம்

ஸ்ரீ பத்ரிநாராயணரின் ஆலயம் எப்போதும் 'கலகல' வென்றிருக்கிறது. காலையில் ஏழு மணிக்கு ராவல்ஜி என்று அழைக்கப்படும் நம்பூத்ரி அர்ச்சகர், அவருக்கென்று பிரத்யேகமாக அமைக்கப்பட்டிருக்கும் வெந்நீர் குண்டத்தில் ஸ்நானம் செய்துவிட்டு பூஜைக்கு வந்துவிடுகிறார். பின்னர் நிர்மால்ய தரிசனம், அபிஷேக தரிசனம், திருமேனி தரிசனம், அலங்கார தரிசனம், ஆரத்தி தரிசனம் என்று ஸ்ரீ நாராயணப் பெருமானின் திவ்விய மங்களக் காட்சி அற்புதங்கள் அடுத்தடுத்து தொடர்கின்றன. இவை அனைத்தும் முடிவதற்கு ஒன்பதரை, பத்து மணியாகி விடுகிறது.

அங்கு அமர்ந்து, அபிஷேக ஆராதனைகளைக் காண்பதற்குக் கண் கோடி வேண்டும். முதலில் கலச பூஜைகள் செய்துவிட்டு ராவல்ஜி, அபிஷேகம் செய்யத் தொடங்குகிறார். எண்ணெய், ஆட்டா மாவு, பால், தயிர், தேன், நெய், சர்க்கரை நீர், சந்தனம், குங்குமப்பூ நீர் என்று ஒன்றன்பின் ஒன்றாக அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. பின்னர், பூஜை செய்யப்பட்ட கலச நீரால் அபிஷேகம் ஆகிறது. இறுதியாக அத்தர் அபிஷேகம். அது முடிந்த பிறகு, திருமுகமண்டலத்தைத் தவிர, திருமேனி முழுவதும் சந்தனக் காப்பு நடைபெறுகிறது. அதற்கு மேல் மலர்களாலும் ஆபரணங்களாலும் கண்கவர் அலங்காரம் செய்கிறார் ராவல். 'திருமேனி தரிசனத்தின்போது நாம் கண்ட அந்தச் சிறிய மூர்த்தியா, இப்படி மாறிவிட்டது' என்று நாம் பிரமிக்கும் வகையில் அந்த அலங்காரம் அமைகிறது.

10

பதினென்றரை மணிக்கு அடுத்த பூஜை நடைபெற்றதும், சரியாகப் பன்னிரண்டு மணிக்குக் கோயிலை அடைத்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு, நான்கு மணிக்குத்தான் தரிசனம். இரவு எட்டு, எட்டரை வரை அஷ்டோத்ர சகஸ்ரநாம அர்ச்சனைகள் நடைபெறுகின்றன. கடைசியாக கீதகோவிந்தம் என்ற சயனாரத்தி நடைபெறுகிறது. இரவு மங்களாரத்தி முடிந்த பிறகு, மலர்களையும் நகைகளையும் ஒவ்வொன்றாகக் களைந்து, சந்தனத்தை மட்டும் விட்டு வைத்து, கருவறையை மூடிவிடுகிறார் ராவல்ஜி. மறுநாள் காலை நிர்மால்ய தரிசனத்தின்போது அந்தச் சந்தனத்தை எடுத்து உருண்டையாக உருட்டி, திருப்பாதங்களில் ஒற்றி வைத்துவிடுகிறார். பின்னர் அதுதான் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

மாலை நேரத்தில், பத்ரிநாத் ஆலயத்திற்குள் செல்பவர்கள், அங்கு சூழ்ந்து பரவும் நாராயண நாமாவளியையும், காதில் தேனாகவும், உள்ளத்தில் கரும்புச் சாறாகவும் பாய்ந்து பரவசப்படுத்தும் பஜன் பாடல்களையும் கேட்டு மெய்சிலிர்த்துப் போவார்கள். வடக்குப் பிராகாரத்தில் நடைபெறும் அந்தப் பஜனை கோஷ்டியில் தாங்களும் கலந்து கொண்டு பக்தியில் கரைந்து, தாளம் போட்டுக் கொண்டு பாடும் பேரின்ப அனுபவத்தைப் பெறுகிறார்கள்.

அப்படியொரு தேவகானத்தை வழங்கும் சாதுவை 'வீணா மகராஜ்' என்று அழைக்கிறார்கள். அம்முதியவர் கண்களை மூடி, தமது ருத்ர வீணையின் சுருதியோடு, தமது ஆன்மாவின் ஆதார சுருதியை ஒருமைப் படுத்தி, இதயக் குரலை இழைய வைத்து, பக்திக் குழைவுடன் 'பத்ரிநாராயண, நாராயண, நாராயண' என்று பாடும்போது, நமது நாடி நரம்புகளை யெல்லாம் சுண்டியிழுக்கிறார். அவரது உருவத்தையும், அவரது தூய்மையான பக்தியையும் பார்த்த போதும், அவரது சன்னமான சாரீரத்தையும், மெய்யுருகும் பாவத்தையும் கேட்ட போதும், மறைந்துவிட்ட புதுக்கோட்டை கோபாலகிருஷ்ண பாகவதரைத்தான் நான் நினைத்துக் கொண்டேன். 'அப்பா' என்று அழைக்கப்பட்ட பாகவதர், ஸ்ரீ தியாகராஜ கிர்த்தனையையும் ஜயதேவரின் அஷ்டபதியையும் ஜீவகளையோடு இசைத்து, அபிநயம் பிடித்து, சலங்கை ஒலிக்க, பித்தனாகக் குதித்துப் பாடி நம்மை எல்லாம் மகுடியில் மயங்கி ஆடும் நாகங்களாக்கிய நாட்கள் என் நினைவுக்கு வந்தன.

அந்த சாதுவின் பெயர் சுவாமி பர்வதிகர். தற்போது, அவர் திவ்வியத் தலங்களில் தங்கி, தமது கலையை படைத்தவனின் திருப்பாதங்களில் சமர்ப் பித்து, இன்பம் கண்டு வருவதாக அறிந்தேன். பத்ரிநாத் சீசன் தொடங்கியதும் இங்கு வந்து விடுவாராம். கோயிலை ஒட்டி அவர் தங்குவதற்கு ஓர் அறை அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் பார்க்கவும் பழகவும் மிக எளிமையானவர். அவரது அடக்கமான தோற்றமும், அமைதியான முகமும், மிருதுவான பேச்சும், கனிவு நிறைந்த கண்களும், அவர்பால் நம்மை அன்பும் பக்தியும் கொள்ளச் செய்கின்றன. அவர் தம்மை 'தாசன்' என்றே குறிப்பிட்டுக் கொள்கிறார். இரவில் பூஜையை முடித்துவிட்டுப் பிராகாரத்தை வலம் வரும் ராவல்ஜி, ஒரு மலர் மாலையை தாசருக்குப் பிரசாதமாக அளித்து விட்டுச் செல்கிறார்.


வீணா மகராஜின் பஜன் பாடல்களைக் கேட்பவர்கள், அதில் ஐக்கியப்பட்டுப் போய்விடுகிறார்கள். வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவங்களில் ஒன்றாகி

விடுகிறது அது. அங்கு அமர்ந்து அப் பாடல்களைக் கேட்கும்போது நாராயணத் திருநாமத்தின் மகிமையையும், பத்ரிநாராயணரின் பெருமையையும், பத்ரிநாத் திருத்தலத்தின் புராண வரலாற்றையும், அலகநந்தா நதியின் புகழையும் நாம் அறிந்து கொள்வதோடு, பக்தியுணர்வைத் தூண்டுவதில் இசைக்குள்ள சக்தியையும் புரிந்து கொள்கிறோம்.

செப்டம்பர் 25-ம் தேதி, செவ்வாய்க்கிழமை காலை எட்டு மணிக்கு நாங்கள் வடக்கே மூன்று மைலிலிருக்கும் 'மானு' கிராமத்தை நோக்கிப் புறப் பட்டோம். எங்களுடன் அருமைத் தோழன் கண்ணனும் சேர்ந்து கொண்டார். ஸ்ரீ காஞ்சிப் பெரியவரின் சேவையையே வாழ்வின் பெரும் லட்சியமாக்கிக் கொண்டுவிட்ட கண்ணனை, நான் முதன் முதலில் 1957-ம் ஆண்டு சென்னையில் சந்தித்தேன். அன்று முதல் இன்றுவரை மாமுனிவரின் கருணையால் நல்ல நட்பிற்கோர் இலக்கணமாய் நாங்கள் பழகி வருகிறோம். பத்ரி யாத்திரையின் தொடக்கத்திலிருந்தே அவர் கலந்து கொள்ள முடியாதது எனக்குப் பெருங் குறையாகத்தான் இருந்தது. இடையில் வந்து சேர்ந்து கொண்ட அவரை நான் முதன் முதலில் நந்தப்பிரயாகை 'காம்ப்'பில்தான் சந்தித்தேன். பின்னர் புதுப் பெரியவரின் குழுவோடு வந்த அவரை மீண்டும் பத்ரியில்தான் சந்தித்தேன். ''மானு கிராமத்திற்குச் சென்று வியாச குகையைக் காணப் போகிறேன்'' என்று கூறியதும் அவரும் என்னுடன் சேர்ந்து கொண்டார்.

அன்று எங்களுக்கு வழிகாட்டி, ராமச்சந்திர யோகி என்னும் ஒரு சாது. அவர் காஞ்சீபுரத்தைச் சேர்ந்தவர். வடநாட்டிலும், இமாலயத்திலும் அவர் யாத்திரை செய்யாத தலமே இல்லை எனலாம். அமர்நாத், கைலாஸ், மானஸ ரோவர் எல்லாம் பார்த்தவர். அப்போது பத்ரிநாத்தில் தங்கியிருந்தார். 8

இந்திரதாரா கிராமம்



தமிழ் பேசியதாலும், சுற்றிலுமுள்ள இடங்களெல்லாம் அவருக்கு அத்துபடியாகி யிருந்ததாலும் அவருடன் அவ்வப்போது பேச்சுக் கொடுத்து, அவரை எங்கள் 'கைடு' ஆக்கிக் கொண்டேன். அவர்தான் ஆந்திரா ஆச்ரமத்திலுள்ள சாரதாம்பாள் பாட்டியைப் பற்றி எனக்குக் கூறி, அங்கு அழைத்துச் செல்வதற்கும் முன்வந்தார்.

நாங்கள் பேசிக்கொண்டே நடந்தோம். வெய்யில் காய்ந்து கொண்டிருந்தாலும், குளிர்ந்த காற்றும் வீசிக் கொண்டிருந்தது. ஸ்வெட்டர், ஷால் எல்லாமே தேவையாயிருந்தன.

அரை மைல் நடந்திருப்போம். ''அதுதான் பிருகு மகரிஷி தபஸ் செய்த இடம். அங்கே ஒரு குகை இருக்கிறது. பார்க்கணுமா?'' என்று கேட்டார் ராமச்சந்திர யோகி. ''ஓ,முடிந்தவற்றைப் பார்த்து விடுவோமே'' என்று கூறி, அவர் பின்னுலேயே நடந்தோம்.


பிருகு மகரிஷி ஒரு சமயம் நாராயணனை மார்பில் உதைத்தாராம். கருவறையில் இருக்கும் மூல மூர்த்தியில் அந்த அடையாளம் இருப்பதை ராவல்ஜி எங்களுக்குச் சுட்டிக் காட்டினுர்.

சிறு குன்றின் மீதுள்ள பிருகு மகரிஷி தவமிருந்த குகைக்குள் சென்றோம். அங்கே ஐந்தாறு சாளக்கிராமங்களும், ராதாகிருஷ்ண விக்ரகமும், லட்சுமி விக்ரகமும் இருக்கின்றன. அருகிலேயே வசித்துவரும் முகுந்தாச்சாரி சுவாமி என்ற சாது அங்கு பூஜை செய்து வருகிறுர். சென்னை சௌகார்பேட்டையில் சிலரைத் தமக்குத் தெரியும் என்று பெருமையுடன் கூறிக்கொண்ட அவர், எங்களை அன்புடன் உபசரித்து அருமையான டீ தயாரித்துக் கொடுத்தார்.

பிருகு மகரிஷி குகை



இந்திரதாரா கிராமத்தில் ஒரு குடும்பத்துடன்





பத்ரிநாராயண தாசர்—விஷ்ணு மகராஜ் என்ற சுவாமி பர்வதிகர்

அடுத்து, நாங்கள் மாதா மூர்த்தி கோயிலைக் காணப் புறப்பட்டோம். செல்லும் வழியில், நாராயணப் பர்வதத்திலிருந்து நீர்த் தாரைகள் விழுவதையும், சூரிய ஒளியில் அவை உருக்கிவிட்ட வெள்ளியாக மின்னுவதையும் கண்டு ரசித்தோம். இவற்றைப் போன்றே, எதிர்ப்புறமுள்ள நரபர்வதத்திலிருந்து பனி உருகி,நான்கு தாரைகளாக விழுகின்றன. அவற்றை ருக்,யஜுர், சாம, அதர்வண வேதங்களாகக் கூறுகின்றனர்.

இந்திரதாரைக்குச் சமீபத்தில்தான் இந்திரன் தவமிருந்ததாகக் கூறுகிறார்கள். அதைப் போன்றே, பிருகுதாரையும் மார்க்கண்டேயதாரையும் இருக்கின்றன.

இந்திரதாரைக்கு அருகிலிருப்பதுதான் 'இந்திரதாரா' கிராமம். இங்கு பத்துப் பதினைந்து வீடுகள் இருந்தன. அங்கு வசிப்பவர்கள், அருகிலுள்ள நிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டுப் பிழைக்கிறார்கள். சிறுவர்கள், மலைமீது ஆடு மாடுகள் மேய்க்கிறார்கள். பெண்கள், புல்லை வெட்டிப் பெரிய பெரிய சுமைகளாக முதுகில் சுமந்து வருகிறார்கள். பெண்மணிகள் வீட்டில் கம்பளி ஆடை நெய்கிறார்கள். எல்லோரும் சுறுசுறுப்பா யிருக்கிறார்கள்.

அம் மலைச்சாதி மக்கள் கள்ளங்கபடற்றவர்கள். நம்மைக் கண்டதும் 'ஜெய் சீதாராம்' என்கிறார்கள். அங்கு 'குட்மார்னிங்'கோ 'நமஸ்தே'யோ கிடையாது. நாமும் பதிலுக்கு 'சீதாராம்' என்று கூறிவிட்டால் அவர்கள் ஆனந்தத்தில் பூரித்துப் போகிறார்கள். 'நாம் எங்கு வாழ்ந்தாலும், எப்படி வாழ்ந்தாலும் ஒரே பாரதக் கலாசாரத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் கிராமத்திற்கு வரும் உங்களுக்கு உள்ளன்புடன் நல்வரவு கூறுகிறோம்' என்பதைத்தான் 'ஜெய் சீதாராம்' என்ற வரவேற்பு தெளிவுபடுத்துகிறது. கன்னியாகுமரி முனையையும், இமாலய உச்சியையும் ராமனும் கிருஷ்ணனும்தானே இணைக்கிறார்கள்!

இந்திரதாரா கிராமத்தில் வசிப்பவர்கள் தங்களை ஊர்வசியின் சந்ததிகள் என்று கூறுவதை ஒருவகையில் ஒப்புக் கொள்ளத்தான் தோன்றுகிறது. அந்தப் பெண்மணிகள் அத்தனை அழகாக இருக்கின்றார்கள். அந்த நிறமும், அந்த மருட்சியும், அந்தப் புன்சிரிப்பும், அந்த நாணமும் அசாதாரணமாகக் காணப் படுகின்றன. வளம் கொழிக்கும் மண்ணில் வகைவகையான வண்ணங்களுடன் தோன்றி, இயற்கையின் வனப்பைக் கூட்டும் வாச மலர்களைப் போல், இமயத்தின் இணையில்லா எழிற் செல்வங்களாகப் பிறந்து, அதன் வரம்பற்ற வசீகரத்திற்கு அழகு சேர்க்கும் அணிகலன்களாக இவர்கள் திகழ்கிறார்கள். வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த நான்கு ஐந்து இளம் பெண்கள் எங்களைக் கண்டு, 'களுக்'கென்று சிரித்து, தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். ''உன் பெயர் என்ன?'' என்று ஒவ்வொருவராகக் கேட்டேன். 'ராஜேஸ்வரி, தனேஸ்வரி, சரஸ்வதி, மாலா' என்று பதில் வந்தது. எல்லாம் நம் பக்கத்துப் பெயர்கள்தான்!

இந்திராதாராவிலிருந்து ஒரு மைல் நடந்து மாதா மூர்த்தி கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். நர, நாராயண ரிஷிகளின் தாயாரின் கோயில் அது.

அன்னை தவக்கோலத்தில் அமர்ந்திருக்கிறாள். நான்கு கரங்கள் கொண்ட மூர்த்தி அது. அங்கு நித்திய பூஜை நடைபெறுவதாகத் தெரியவில்லை. செப்டம்பர் மாதம் வாமன துவாதசியன்று, பத்ரிநாராயணரின் உற்சவமூர்த்தி இங்கு எழுந்தருளுகிறார். அப்போது பூஜை நடைபெறுமாம்.

நர, நாராயணர்கள் தவத்திற்காக பத்ரிகாச்ரமம் வந்து வெகு நாட்களாகி விட்டதால், பெற்றோருக்குக் கவலை ஏற்பட்டுவிட்டதாம். அவர்களைத் தேடிக்கொண்டு வந்த மாதா மூர்த்தி, மைந்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பத்ரிகாச்ரமத்தின் எல்லையிலேயே தங்கிவிட்டாளாம்! இவர்களும் பர்வதங்களாக அங்கேயே தங்கிவிட்டார்களாம். இப்படி ஒரு கதை சொல்லுகிறார்கள். 'தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை'த் தரிசித்தவர்கள், அத்தெய்வத் தாயையும் தரிசிப்பது கிடைத்தற்கரிய புண்ணியம் அன்றோ!

மாதா மூர்த்தி ஆலயத்திலிருந்து பார்த்தால் தொலைவில் 'வசுதாரா' நீர்வீழ்ச்சி, ஒரு மெல்லிய வெண்மைக் கீற்றாகத் தெரிகிறது. அது நானூறு அடி உயரத்திலிருந்து விழுகிறது. அஷ்டவசுக்கள் தவமிருந்த இடமாம் அது. அலகாபுரியிலிருந்து கொட்டும் அந்த நீர்வீழ்ச்சிதான் அலகநந்தாவாகப் பிரவகிக்கிறதாம்.

மாதா மூர்த்தி கோயில், அலகநந்தாவின் தென் கரையிலிருக்கிறது. அங்கிருந்து சற்றுத் தொலைவில் அலகநந்தா சரஸ்வதி நதியுடன் கலக்கும் சங்கமம் இருக்கிறது. அதற்கு 'கேசவப்பிரயாகை' என்று பெயர். இந்த சங்கமத்தினருகில் ஒரு தொங்கு பாலம் இருக்கிறது.அதைக் கடந்துதான் மானா கிராமத்திற்குச் செல்ல வேண்டும். அந்தப் பாலத்தின் மீது நடக்கும்போது, உடல் நடுங்குகிறது. அதன் ஆட்டம் அச்சத்தைத் தூண்டுகிறது. அதன் இரு கோடியிலும் துப்பாக்கியுடன் காவல் புரியும் ராணுவ வீரர்களின் கழுகுப் பார்வை நம் அச்சத்தை அதிகப்படுத்துகிறது. 'பாஸ்' இல்லாமல் ஒருவரும் அந்தப் பாலத்தைக் கடக்கவோ, மானா கிராமத்திற்குள் நுழைந்து விடவோ முடியாது.

அது இந்தப் பகுதியில் கடைசி இந்தியக் கிராமம். அங்கிருந்து இருபது மைல் கடந்தால், சீனாவின் ஆதிக்கத்திலுள்ள திபெத்தின் எல்லை வந்து விடும். எனவேதான் நம் எல்லைப் பாதுகாப்புப் படை கண்கொத்திப் பாம்பாக எந்நேரமும் இங்கு கண்காணித்துக் கொண்டிருக்கிறது.

ராணுவத்தினரின் கெடுபிடிக்கும், கேள்விகளுக்கும் ஒருவாறு ஈடு கொடுத்துக் கொண்டே, நாங்கள் அந்தக் கடைசிக் கிராமத்தில் காலடி எடுத்து வைத்தோம்.

''நீங்களெல்லாம் நம்ப ஆனந்த விகடனிலிருந்தா வந்திருக்கீங்க?''



ஊர்வசி பரம்பரை

அந்த உயரத்தில், அந்த எல்லையோரத்தில், அந்தக் கடைசிக் கிராமத்தில் ஒரு தமிழ்க் குரலைக் கேட்டது அலகநந்தாவின் நீரைவிடக் குளுமையாக இருந்தது.

திரும்பிப் பார்த்தோம். அப்படி விசாரித்த தமிழர் ஒரு ராணுவ வீரர்.

பகைவர்களிடமிருந்து பாரத எல்லையைக் காப்பதற்காகப் பனிமலையில் பணி புரிந்து கொண்டிருக்கும் அந்த ராணுவ வீரர், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது அவரிடம் பேச்சுக் கொடுத்ததில் தெரிந்தது. நாங்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் என்று கேள்விப்பட்டதும், விகடனைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தாராம் அவர். தேவைப்பட்டால் எங்களுக்கு உதவியாயிருக்கலாம் என்ற நல்லெண்ணத்துடனேயே அப்படி விசாரித்தாராம்.

''இங்கே 'செக்கிங்' அதிகங்க. காமிராவுக்கு 'பர்மிட்' வாங்கிக்கிட்டு வந்திருக்கீங்களா?'' என்று கேட்டார் அந்தத் தமிழ் ஜவான்.

''அதெல்லாம் தயாராக வைத்திருக்கிறோம்'' என்று ஜோஷி மட்டில் மாஜிஸ்டிரேட்டிடமும், ராணுவ அதிகாரியிடமும் வாங்கிய பர்மிட்டை அவரிடம் காட்டினேன் நான். அதைத் தவிர, பத்ரிநாத் கோயில் கமிட்டியின் நிர்வாக அதிகாரி பி.எஸ். மேத்தா கொடுத்திருந்த சிபாரிசுக் கடிதமும் இருந்தது.

வியாச குகைக்குச் செல்லும் வழியில், ஒரு ராணுவ 'செக் போஸ்ட்' இருந்தது. அங்கு எங்களைத் தடுத்து நிறுத்தி, பர்மிட்டைக் காட்டச் சொன்னார்கள். நான் பெருமையோடும் தன்னம்பிக்கையோடும் என்னிடமிருந்த காகிதங்களை எடுத்துக் காட்டினேன். ஒரு ஜவான் அவற்றை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றார். சற்றைக்கெல்லாம் அவர் வெளியே வந்து,



வியாச குகை இருக்கும் மார்ணு கிராமம்

''நீங்கள் போய்க் குகையை வேண்டுமானுல் பார்த்துவிட்டு வரலாம். போட்டோ எடுக்க அனுமதி கிடையாது'' என்ருர். எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஸ்ரீநிவாசனுக்கு அடக்க முடியாத கோபமே வந்துவிட்டது:

''நாங்கள் போட்டோ எடுக்கவும் அனுமதி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறோம். நான் வந்து அதிகாரியிடம் பேசுகிறேன்'' என்று இந்தியில் 'கடபுடா' வென்று இரைச்சல் போட்டார்.

தமிழ் ஜவான் அவரைச் சமாதானம் செய்துவிட்டு, ''நான் உள்ளே போய்ப் பேசிப் பார்க்கிறேன்'' என்று கூறி அதிகாரியிடம் சென்ருர். நாங்கள் வெளியே காத்திருந்தோம். ஸ்ரீநிவாசனுக்குப் படபடப்பு அதிகமாயிற்று.

தமிழ் ஜவான் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வந்தார்:

''சார், அவர் ரொம்ப மொரட்டு ஆளா இருக்காரு. கண்டிப்பா போட்டோ எடுக்கக் கூடாதுங்கிருரு. விகடனைப் பத்தியும் இந்தக் கட்டுரை யோட 'வேல்யூ'வைப் பத்தியும் அவருக்கு எத்தனை எடுத்துச் சொன்னுலும் புரியலே'' என்று அலுத்துக் கொண்டார்.

''அப்படின்னு நாங்க வாங்கிட்டு வந்த பர்மிட்டுக்கு அர்த்தமே இல்லையா?'' என்று கேட்டேன்.

''இது இங்கே வர்றத்துக்குத்தான் பர்மிட். போட்டோ பர்மிட் கொடுக்க ஜோஷி மட்டில் ஒத்தருக்கும் அதிகாரமில்லையாம். காமிராவை இங்கேயே வெச்சிட்டு நீங்க மூணுபேரும் குகையைக்கண்ணுலே பார்த்துட்டு வரலாமாம்.''

''மன்னுங்கட்டி! இதுக்கா இத்தனை காமிராக்களைச் சுமந்துகிட்டு வந்தேன். நீங்க வேணுமானு போய்க் குகையைப் பார்த்துட்டு வாங்க, நான் வரலே'' என்றார் ஸ்ரீநிவாசன். அவருக்கு ஒரே எரிச்சல். தாங்க முடியாத ஏமாற்றம். ரொம்பவும் சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டார்.

கடைசி முறையாக முயற்சி செய்து பார்க்கலாம் என்று உள்ளே செல்ல அனுமதி பெற்று, அதிகாரியைச் சந்தித்து மன்றாடினேன். அவர் 'கல்'லாக இருந்தார்.


''இது நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்த விஷயம். தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்து பயனில்லை'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் அவர். அதோடு விடவில்லை. என் கையிலிருந்த குறிப்பெடுக்கும் சிறிய நோட் புத்தகத்தை வாங்கி, ''இதில் என்ன எழுதியிருக்கிறீர்கள்?'' என்று சந்தேகத்துடன் கேட்டார். நான் படித்துச் சொல்லி, விளக்கம் கூறிய பிறகுதான் அதை என்னிடம் தந்தார். உளவு அறியும் 'இன்ட்டலிஜின்ஸ்' பிரிவைச் சேர்ந்தவராயிற்றே, எளிதில் விட்டுவிடுவாரா?


கடமை தவறாத அந்த அதிகாரிக்கு நன்றி தெரிவித்துவிட்டு, நாங்கள் வியாச குகையை நோக்கி நடந்தோம். வருந்தி வருந்தி அழைத்தும், ''இங்கிருந்து ஓரடி கூட எடுத்து வைக்கமாட்டேன்'' என்று தீவிர சத்யாக்கிரகியைப் போல் எழுந்திருக்கவே மறுத்து, தன் காமிராக்களுக்குக் காவலாக அங்கேயே பழியாக உட்கார்ந்து விட்டார் ஸ்ரீநிவாசன். நானும் கண்ணனும் மட்டும் புறப்பட்டுச் சென்றோம்.

வியாச குகைக்கு அருகில், வலப்புறம் 'கணேச குகை' என்று சிறு வெண்ணிற மண்டபம் ஒன்றைக் காட்டினார்கள். வெளியே பத்ரிநாராயணரின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. உள்ளே, வலக்காலைக் குத்திட்டுக் கொண்டு மகா கணபதி உட்கார்ந்திருக்கிறார்.

வியாச பகவான் மகாபாரதக் கதையைச் சொல்ல, ஸ்ரீ விநாயகப் பெருமான், உடைந்த தன் தந்தத்தினால் அதை ஓலைச் சுவடியில் எழுதியதாகப் படித்திருக்கிறோம். அம்மாதிரியான சித்திரங்களையும் பார்த்திருக்கிறோம். மகாகணபதி இந்தச் சிறு குகையில்தான் தங்கி வியாசருக்கு உறுதுணையாயிருந்து அருந்தொண்டாற்றினாராம்.

மானாகிராமத்தில் வியாச குகை இருக்குமிடம்
(வெள்ளை வட்டத்திற்குள் குகை தெரிகிறது)





ஸ்ரீ கணேச குகை

வியாச பகவான் எந்தக் குகையில் அமர்ந்து மகாபாரதத்தையும், பதினெட்டுப் புராணங்களையும், பிரும்ம சூத்திரத்தையும் எழுதினரோ, எந்தக் குகையில் வேதங்களை வகைப்படுத்தி, வரிசைப் படுத்தி, நான்கு பிரதானப் பகுதிகளாகப் பிரித்துத் தந்தாரோ, அந்தக் குகையை நோக்கி இப்போது நாம் நடந்து கொண்டிருக்கிறோம்.

பத்ரிகாரண்யத்தில் பராசரரின் திருமகனுய்ப் பிறந்து, பதராயணர் என்ற காரணப் பெயர் பெற்ற வியாச முனிவர் இந்து சமயத்திற்கும், கலாசாரத்திற்கும், பாரத சமுதாயத்திற்கும், வேத நெறியைப் பின்பற்றும் பரம்பரையினருக்கும் மூல புருஷராக விளங்குபவர். மகாவிஷ்ணுவின் மறு அவதாரமாகக் கருதப்படுபவர். சிதறிக் கிடந்த வேதங்களைத் திரட்டித் தர்ம வாழ்வுக்கு வழி வகுத்து அளித்ததால், 'வேத வியாசர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். விஷ்ணு புராணத்திலும், விஷ்ணு சகஸ்ரநாமத்திலும் அவர் புகழ் ஏற்றம் பெற்றிருக்கக் காண்கிறோம். அவரின்றி, மகாபாரதக் கதையை நாம் அறிந்திருக்கப் போவதில்லை. மகாபாரதம் இல்லாவிட்டால், புண்ணிய பாரதத்தின் வரலாறு இருண்ட காவியமாக மறைந்து போயிருக்கும். எனவே, ஆன்மிக உலகம், வியாச பகவானுக்குப் பெருங்கடன் பட்டிருக்கிறது.

அந்தப் புராண புருஷர் நடமாடிய மண்ணில் நடந்து கொண்டிருக்கிறோம் என்ற எண்ணமே உடலில் புல்லரிக்கச் செய்தது. அதுவே புராண காலத்தில் மணிபத்ர ஆச்ரமம் என்றழைக்கப்பட்ட இடம். 'மானுகான்' என்ற பெயர் கொண்ட கிராமம்தான், தற்போது மாணு என்று சுருங்கியிருக்கிறது.

இந்தியாவின் இந்தக் கடைசிக் கிராமம் புண்ணியம் செய்த பூமி. அங்கிருக்கும் ஒரு பெரிய பாறையில் இருக்கும் ஒரு குகையில்தான் வியாச மகரிஷி அமர்ந்து செயற்கரிய பணிகள் ஆற்றியிருக்கிறார். அந்தக் குகை இதோ கண்ணுக்குத் தெரிகிறது.

நிமிர்ந்து பார்த்தேன். ஓர் ஆலயக் கோபுரம் போல் அதன் சிகரம் அமைந்திருப்பதைக் கண்டேன். இது இயற்கையெழுப்பிய மகோன்னத கோபுரம். மனிதன் கட்டியது அல்ல.

அது மட்டுமா? அந்தப் பாறையின் அமைப்பே விநோதமாக இருக்கிறது. புத்தகங்களோ, ஓலைச் சுவடிகளோ ஒன்றன்மீது ஒன்று ஒழுங்காக அடுக்கி வைத்தாற்போல் காணப்படுகிறது. வியாச பகவான் எழுதிய புராணங்களுக்கு அடையாளமாக அது அமைந்திருப்பதால் 'வியாஸ புஸ்தக்' என்று அது போற்றி வணங்கப்படுவதாக அறிந்தேன். சற்று நேரம் அங்கேயே தலைவணங்கி நின்றேன்.

மாணா கிராமத்தில் நின்று பத்ரிநாராயணர் உறையும் திசையைப் பார்க்கிறார் வியாசர். எதிரில் சரஸ்வதி நதி ஓடுகிறது. அதற்கும் அப்பால் நர, நாராயண மலைகள் கம்பீரமாக நிற்கின்றன. தமது மகாபாரதத்தைத் தொடங்குகிறார். அருமையானதொரு சுலோகம் பிறக்கிறது:

நாராயணம் நமஸ்கிருத்ய
நரம் சைவ நரோத்தமம்
தேவீம் சரஸ்வதீம் வ்யாசம்
ததோ ஜயமுதீரயேத்!

நர, நாராயணர்களையும் சரஸ்வதி தேவியையும் வணங்கிவிட்டுத் தன் வெற்றிக் காவியத்தைத் தொடங்குகிறார் மாமுனிவர்.


அமர சுலோகம் பிறந்த குகையின் வாயிலில் தற்போது நின்று கொண்டிருக்கிறோம். குளிர்ந்த காற்று, ஆதவனின் கடுமையைத் தணித்துக் கொண்டிருந்தது.

சிமெண்டும் சுண்ணாம்பும் கருங்கல்லும் செங்கல்லும் அந்தக் குகைக்கு நாகரிகப்பூச்சு தந்திருக்கின்றன. வெளியே இருபுறமும் குட்டித் திண்ணைகள். ஏதோ ஒரு கிராமத்து வீடு போல் இருக்கிறது.

உள்ளே சென்று பார்க்க வேண்டும் என்று உள்ளம் துடிக்கிறது. ஆனால் கதவு பூட்டப்பட்டிருக்கிறது. அதில் யாரோ ஒரு சாது வசிக்கிறாராம். அவர் பூட்டிக் கொண்டு வெளியே சென்றிருக்கிறார். அக்கம் பக்கத்தில் விசாரித்துப் பார்த்தோம். அவர் எங்கே சென்றிருக்கிறார் என்பதோ, எப்போது திரும்புவார் என்பதோ யாருக்குமே தெரியவில்லை. அட கடவுளே, இது என்ன சோதனை!

மாணாகிராமத்தில் தாயும் சேயும்





வியாச குகை

மணி பன்னிரண்டு இருக்கும். நாங்கள் இரண்டு மணிக்குள் பத்ரிநாத் திரும்பியாக வேண்டும். மூன்று மணிக்கெல்லாம் புதுப் பெரியவர் அங்கிருந்து புறப்படப் போகிறார். அந்தக் குழுவுடன் கண்ணன் சென்றாக வேண்டும். குகையில் வசிக்கும் சாது வரும் வரையில் காத்துக் கொண்டிருப்பது முடியாத காரியம். அவர் அன்று திரும்புவார் என்பது என்ன நிச்சயம்?

எனக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. நினைத்துக் கொண்டால் வரக்கூடிய இடமா இது? வாழ்க்கையில் ஒரு முறை இங்கு வருவதற்கே பெருமுயற்சி செய்தாக வேண்டுமே! தெய்வ அருள் இருந்தால்தான் அந்த முயற்சியும் பலனளிக்கும்!

எனக்கு அழுகை வராத குறை. 'வியாச பகவான் அமர்ந்த குகைக்குள் காலடி எடுத்து வைக்கக் கொடுத்து வைக்கவில்லையே' என்ற பெரும் ஏக்கம் என்னுள் குடிகொண்டது. காஞ்சிப் பெரியவரை நினைத்துக் கொண்டேன். 'இத்தனை தூரம் என்னை அழைத்துக் கொண்டு வந்துவிட்டு, குகையையும் தரிசிக்கச் செய்துவிட்டு, அதனுள் செல்ல முடியாமல் ஏன் செய்கிறீர்கள்? காரணம் உங்களுக்குத் தெரியும். ஆனால், கிடைத்தவரையில் மகிழ்ச்சி. இங்கு இருந்தபடியே நமஸ்கரித்துவிட்டு, அத் திருப்தியுடனேயே திரும்புகிறேன். வேறு நான் என்ன செய்ய முடியும்?' என்று மனத்தில் எண்ணிக்கொண்டே அக் குகை வாசலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்தேன்.

அடுத்த கணம்.. 'டேரோ' 'டேரோ' என்ற குரல் கேட்டது. திரும்பினேன். தொலைவில், பள்ளத்தாக்கில் வந்து கொண்டிருந்த சாது ஒருவர், 'அங்கேயே இருங்கள், இதோ வந்துவிடுகிறேன்' என்பதுபோல் சைகை காட்டிக் கொண்டே எங்களை நோக்கி வெகு வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தார்.


உணர்ச்சி வசப்பட்ட என் உடலெல்லாம் ஆடியது. காஞ்சிப் பெரியவரின் பெருங் கருணையை நினைத்துக் கண்ணீர் மல்கினேன். கதியற்று நிராதரவாய் நிற்கும்போது கை கொடுத்து உதவும் கண்கண்ட தெய்வம் அல்லவா, அக் கருணாமூர்த்தி!

அந்தச் சாது வந்தார். கதவைத் திறந்தார். எங்களை உள்ளே அழைத்துச் சென்றார். அமரச் செய்தார். அன்போடும் ஆதரவோடும் பேசினார். சில ஆண்டுகளாகத் தாம் அங்கு வசிப்பதாகவும், அக் குகையை நவீன முறையில் மாற்றி அமைத்துக் கட்டியதாகவும் கூறினார்.

ஆறடிக்குப் பத்தடி உள்ள ஓர் அறை அது. அங்கு ஒரு திண்ணையில் வியாச பகவானின் நவீன உருவச் சிலை ஒன்று இருந்தது. வட்ட வடிவத்தில் பழங்காலக் கற்கள் இரண்டு இருந்தன. அவற்றில் இனம் கண்டு கொள்ள முடியாத மனித உருவங்கள் கோடுகளாக வரையப்பட்டிருந்தன. மற்றொரு சிறு பாறையில் ஏதோ எழுத்துக்கள் காணப்பட்டன. அவற்றைத் தாம் அங்கு கண்டதாகவும், அவற்றின் காலத்தை ஆராய்ச்சியாளர்கள்தான் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும் என்றும் கூறினார் அந்தச் சாது.

எண்ணங்கள் அடங்கி, நினைவுகள் அழிந்து, உள்ளார்ந்த அமைதியில் ஆழ்ந்தேன். ஆன்மிக அணுக்களால் ஊட்டம் பெற்று அங்கு வட்டமிடும்

குகைக்குள்.....



மின்னலைகள் சிந்தையைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற பிரார்த்தனை யுடன் மௌனமாகச் சிறிது நேரம் அங்கேயே அமர்ந்திருந்தேன். பின்னர், வியாச பகவானை மனத்தில் தியானித்து, குகைக்குள்ளும் ஒரு நமஸ்காரம் செய்துவிட்டு, நாங்கள் அந்தச் சாதுவிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டோம்.

சென்னைக்குத் திரும்பியதும், வழக்கம் போல் தேனம்பாக்கம் சென்று காஞ்சிப் பெரியவரிடம் என் யாத்திரையைப் பற்றியெல்லாம் விரிவாகக் கூறினேன். வியாச குகையைப் பார்க்கச் சென்ற அனுபவத்தை விவரித்துவிட்டு, அத்தனை தொலைவு சென்று, போட்டோ எடுக்காமல் திரும்ப நேர்ந்தது பெரிய குறையாக இருக்கிறது என்ற என் மன வருத்தத்தையும் வெளிப்படுத்தினேன். அதைக் கேட்டுப் பெரியவர் லேசாகச் சிரித்துக் கொண்டார்.

அதன் பொருள் எனக்கு அப்போது புரியவில்லை. பின்னரே விளங்கியது.

பெரியவரின் அருளாசியால் ஒன்பது மாதங்களுக்குள் சற்றும் எதிர் பாராதவகையில் மீண்டும் வியாச குகைக்குச் செல்லும் பாக்கியம் பெற்றேன். இம்முறை டில்லியில் இரண்டு நாள் தங்கி, பாதுகாப்பு இலாகா அதிகாரிகளைச் சந்தித்து, வியாச குகையைப் படம் எடுக்க அனுமதி பெற்றுக் கொண்டு சென்றேன். ஆனால், அந்தக் கடிதம் கையிலிருந்தும் குகையைப் படம் எடுக்க மறுபடியும் எனக்குச் சில தடைகள் ஏற்பட்டன. கடைசி நிமிடத்தில் அவையும் விலகி, என் முயற்சி வெற்றிகரமாக முடிந்தது.

ஸ்ரீ காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன் பத்ரிநாத் யாத்திரை மேற்கொண்டதன் பலனாகக் கிடைத்தற்கரிய தரிசனங் களும், மறக்க முடியாத அனுபவங்களும் பெற்றுத் திரும்பும் அரும் வாய்ப்புக் கிட்டியது. செல்லும் வழி நெடுகிலும், இதிகாசப் புராணத் தொடர்பான பல சின்னங்களையும், ஆலயங்களையும் கண்டு பரவசம் அடைந்ததோடு, அங்கெல் லாம் வாழும் எளிய மக்களின் உள்ளத் தூய்மையையும் உடன்பிறந்த குணப் பண்புகளையும், உயரிய கலையுணர்வையும் பார்த்துப் பேரானந்தம் அடைந்தேன். நான் காணக் கொடுத்து வைக்காத 'பாண்டவ நடனம்' போன்ற கலைநிகழ்ச்சி களைக் கண்டு ரசித்த ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், பின்னர் என்னிடம் அவற்றைப் பற்றி ஆர்வத்துடன் எடுத்துக் கூறியதை என்னால் மறக்கவே முடியாது. நான் கண்ட காட்சிகளை சுவாமிகளிடமும், சுவாமிகள் கண்டவற்றை என்னிடமும் மாறி மாறிப் பரிமாறிக் கொண்டதை இந்த யாத்திரையின் சுவாரஸ்யமான அனுபவமாகக் கருதுகிறேன் நான். எல்லாவற்றுக்கும் மேலாக பஞ்சாட்சரப் பெருமந்திரத்தை மானிடருக்கு உபதேசிக்கவும், வேதஞானப் பெருநிதியை மனித குலத்திற்கு வழங்கவும், நர, நாராயண ரிஷிகளாக அவதாரம் எடுத்த திருமால், ஆச்ரமம் தேடி, தவமியற்ற வந்த தேவ பூமியில் சிவபெருமானின் அவதாரமாகக் கருதப்படும் ஸ்ரீ ஆதிசங்கரரின் மரபில் வந்த ஆசாரியப் பெருமகனுருடன் தங்கியிருக்கும் நல்வாய்ப்பினைப் பெற்ற இனிய நாட்களை நினைத்து நினைத்து இறும்பூது எய்துகின்றேன்.

பன்னெடுங் காலமாக அங்கு வாழ்ந்து புனிதம் கூட்டிய மாமுனிவர்களும் தரிசித்து அருள் பெற்ற மெய்யடியார்களும், யாத்திரை சென்று பயனடைந்த

ஆத்திகப் பெருமக்களும், பத்ரிநாராயணனின் தரிசனத்தை நம்முள் ஓர் இதயத் தாபமாக வளர்த்து விட்டிருக்கிறார்கள். அண்மைக் காலமாக அங்கு சென்று வந்தவர்கள் தங்கள் அனுபவங்களை எழுதி நம் ஆர்வத்தை மேலும் தூண்டி விட்டிருக்கிறார்கள். யாத்திரை முடித்துத் திரும்பியவர்கள் அதைப் பற்றிப் பேசிப் பேசி 'நாமும் அங்கெல்லாம் போவோமா?' என்ற ஏக்கத்தையும் கிளறி விட்டிருக்கிறார்கள்.

அக் காலத்தில் ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத்துக்குக் கால்நடையாகவே சென்றவர்கள், பல இன்னல்களுக்கு ஆளாகி, பல சோதனைகளைக் கடந்து, உயிரைப் பணயம் வைத்துப் பயணத்தை மேற்கொண்டவர்கள். அவர்கள் பட்ட சிரமங்கள் இப்போது செல்பவர்களுக்கு இருக்கவே இருக்காது. முன்பு பஸ், தேவப்பிரயாகை வரையில்தான் செல்லுமாம். பின்னர், ஸ்ரீநகர், ருத்ரப்பிரயாகை, பிப்பல்கோட்டி, ஜோஷிமட் என்று படிப்படியாக பஸ் பாதை விரிவாக்கப்பட்டு, தற்போது பத்ரிநாத் வரையில் பஸ்ஸிலேயே செல்லும் சௌகரியம் செய்து கொடுத்திருக்கிறார்கள். பஸ் நிலையத்திலிருந்து ஒரு பர்லாங் நடந்து, பாலத்தைக் கடந்தால் கோயிலை அடைந்து விடலாம். காரில் செல்பவர்கள் இன்னும்கூட அருகில் செல்லலாம்.

மலைப் பாதையில் பயணம் செய்யும்போது முதலில் மலைப்பாகத்தான் இருக்கிறது. ஆனால், போகப் போக அது பழகி விடுகிறது. அந்தப் பகுதி 'கடுவாலி' டிரைவர்கள் மேடு பள்ளங்களையும், பயங்கரத் திருப்பங்களையும், திடீர் வளைவுகளையும் பார்த்து ஜாக்கிரதையாக ஓட்டுகிறார்கள். எத்தனை வேகமாகப் போனாலும் அவர்களுக்கு நல்ல 'கண்ட்ரோல்' இருக்கிறது. தென்னாட்டில் திருப்பதி, நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, மைசூர் மலைகள்முதலியவற்றில் ஓட்டிப் பழக்கப்பட்டவர்கள், இமாலயத்திலும்எளிதாக ஓட்டிவிடலாம் என்று தயவுசெய்து நினைத்துவிட வேண்டாம். அந்தப் பள்ளத்தைப் பார்த்தவுடனேயே குடல் நடுங்கும்; மலைச் சரிவுகளைக் காணும்போதே நெஞ்சு பதறும்; கை கால்கள் உதறும்! தென்னாட்டிலிருந்து ஒரு கோஷ்டியினர் மினி பஸ் ஒன்றைக் கொண்டு வந்திருந்தார்கள். அந்த டிரைவர் கொஞ்சதூரம் வந்துவிட்டு, 'நம்மாலே முடியாது சார்' என்று பயந்து திரும்பிவிட்டதைப் பார்க்க நேர்ந்ததால் இதைச் சொல்கிறேன்.

பத்ரிநாத் செல்ல நினைப்பவர்கள் டில்லிக்குப் போய், அங்கிருந்து ரிஷிகேசத்திற்கு ரயிலிலோ, பஸ்ஸிலோ, டாக்சியிலோ செல்ல வேண்டும். அங்கெல்லாம் டாக்சியில் ஐந்து ஆறு பேரை ஏற்றி, வாடகையைப் பங்கு பிரித்துப் பெற்றுக் கொள்கிறார்கள். வசதி உள்ளவர்கள் ரிஷிகேசத்திலிருந்தும் பத்ரிநாத்துக்கு டாக்சி அமர்த்திக் கொள்ளலாம். போய் வர ஆயிரம் ரூபாய்க்குள் ஆகும். பஸ் சர்வீசும் இருக்கிறது. முதல் நாளே சென்று 'சீட்' ரிசர்வ் செய்து கொள்ளலாம். பஸ்ஸில் முதல் கிளாஸ், இரண்டாம் கிளாஸ், மூன்றாம் கிளாஸ் என்று இருக்கிறது. முதல் இரண்டு கிளாஸ் பிரயாணிகளுக்கும் முன்வரிசைகளில் இடம் ஒதுக்கப்படுகிறது. கோஷ்டியாக வருபவர்கள் தனி பஸ்களும் ஏற்பாடு செய்து கொள்ளலாம். செல்லும் வழியில் ஆகாரத்திற்குக் கஷ்டம் இருக்காது. ருத்ரப்பிரயாகை, ஸ்ரீநகர், ஜோஷி மட்டில் நல்ல ஓட்டல்கள் இருக்கின்றன. பழ வகைகள் கிடைக்கின்றன. இரவு தங்குவதற்கான விடுதி வசதிகளும்இருக்கின்றன. சப்பாத்தி, சப்ஜி பிடிக்காதவர்களுக்கு சாதமும்


தயிரும் கிடைக்கின்றன. பத்ரிநாத்திலும் தங்குவதற்கு நிறைய விடுதிகள் இருக்கின்றன. கவலையே வேண்டாம். இன்னும் நிறையக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். குளிருக்குப் பயந்து பெரிய படுக்கைகள் எடுத்துப் போக வேண்டாம். கடைகளில் 'ரஜாய்' வாடகைக்குக் கிடைக்கிறது. இரண்டு வாங்கிக் கொண்டு கீழே ஒன்றைப் போட்டுப் படுத்து, நமக்கு மேலே ஒன்றைப் போர்த்திக் கொண்டு விட்டால் எந்தக் குளிரும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. சாப்பாட்டுக்கும் ஓரிரண்டு நல்ல ஓட்டல்கள் இருக்கின்றன. பாலக்காட்டைச் சேர்ந்த மணி ஐயர், 'மெட்ராஸ் ஓட்டல்' வைத்திருக்கிறார். அவரிடம் சொன்னால், நமக்கு வேண்டியதைச் செய்து போடுவார். அந்த இடத்தில் வற்றல் குழம்பும், மிளகு ரசமும், அப்பளமும் வேண்டுமானால் பணத்தைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. கேட்டதைக் கொடுத்துதான் ஆக வேண்டும்.

பத்ரிநாத் செல்வதற்கு ஜூன் முதல் அக்டோபர்வரை சௌகரியமான மாதங்களாகும். மே மாதம் இரண்டாவது வாரத்திற்குள் திறந்து, நவம்பர் மாதம் மூன்றாவது வாரத்திற்குள் அந்தக் கோயிலை மூடி விடுகிறார்கள். அது திறக்கப்படும் தேதியும் மூடப்படும் தேதியும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றன. ஆறு மாதங்கள் அப் பகுதி முழுவதும் உறைபனியால் மூடப்பட்டிருக்கும். அப்போது ஊரையே காலி செய்து கொண்டு எல்லோரும் கீழே வந்து விடுகிறார்கள். உற்சவ மூர்த்தியை பாண்டுகேச்வரத்திலுள்ள ஆலயத்திற்கு எடுத்துச் சென்று விடுகிறார்கள். ஆனால், ராவல்ஜி அங்கு போவதில்லை. அவர் கேரளாவுக்குச் சென்று விடுகிறார்.

சாதாரணமாக நவம்பர் 16, 17, 18 மூன்று நாட்களில் ஒரு நாள் கோயிலை மூடுகிறார்கள். அதற்கு இரண்டு முகூர்த்தங்கள் கூடியிருக்க வேண்டுமாம். அன்று ராவல், ஒரு பெண்மணியைப் போல் உடை உடுத்தி, மகாலட்சுமி கோயிலில் பூஜையை முடித்துக் கொண்டு, சந்தனக் காப்போடு அம்பாளை அப்படியே எடுத்துச் சென்று, பத்ரிநாராயணருக்கு அருகில் வைத்து விடுகிறார். பின்னர், சுவாமிக்குக் காலையில் செய்த மலர் அலங்காரத்தைக் கலைத்து, மூர்த்தியின் மீது நெய்யைத் தடவி, கம்பளியால் போர்த்தி, இரும்புக் கவசத்தால் மூடி விடுகிறார். அந்தக் கம்பளியை மானா கிராமத்திலுள்ள பெண்கள் நெய்துஅனுப்புகிறார்களாம். பின்னர், ஒரு தாம்பாளத்தில் நிறைய நெய்யை விட்டு, அதில் கனமான திரியை வைத்து விளக்கேற்றி வைக்கிறார். பிறகு கதவை மூடி சீல் வைத்து விட்டு வந்து விடுகிறார். ஆறு மாதங்கள் கழித்து, கருவறைக் கதவைத் திறக்கும்போது, அந்த ஜோதி எரிந்து கொண்டிருக்குமாம்.


நர, நாராயண ரிஷிகள் ஏற்றி வைத்த ஞான ஒளி அல்லவா? இன்றென்ன, அது என்றென்றும் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

முதல் பாகம் நிறைவுறுகிறது


யமுனோத்ரி
கங்கோத்ரி
கோமுக்
ஹேமகுண்ட்
மானா
பத்ரிநாத்
கேதார்நாத்
ஜோஷிமட
உத்தரகாசி
பிப்பல்கோட்டி
குப்தகாசி
கோபேச்வர்
சமோலி
தராசு
நந்தப்பிரயாகை
கர்ணப்பிரயாகை.
ருத்ரப்பிரயாகை
தெஹ்ரி
கீர்த்திநகர்
ஸ்ரீநகர்
தேவப்பிரயாகை
ரிஷிகேஷ்
ஹரித்வார்
ரிஷிகேசத்திலிருந்து
பத்ரிநாத் செல்லும் வழி

பீப்பல்கோட்டி என்ற
இடத்தினருகில் ஓர் ▶
உயரமான நீர்வீழ்ச்சி





தேவப்பிரயாகை சங்கமத்தில்
ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்